ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**


# ஹிந்துக்களின் வழிபாட்டு உரிமை பறிக்கப்படுகிறது

அரசியலமைப்பின் 25 முதல் 28 ஆம் ஷரத்துக்கள், மனசாட்சியின் சுதந்திரம் மற்றும் மதத்தைப் பின்பற்றுதல், கடைப்பிடித்தல், பரப்புதல் ஆகியவற்றுக்கான சுதந்திரத்தை உறுதி செய்கிறது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் அரசு செயல்படுகிறதா? திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும், அந்த உரிமை மறுக்கப்படுகிறது. ஆங்கிலேயர் ஆட்சியில் நீதிமன்றத்தில் போராடிப்பெற்ற திருப்பரங்குன்றம் மலையை, தங்களது சொத்து இல்லை என்று சுதந்திர இந்தியாவில் சொல்கிறது கோவில் நிர்வாகம்! ஆங்கில ஆட்சியைவிடக் கொடியது திராவிட ஆட்சி என்பதற்கு இது சான்று! ஆட்சியாளர்களிடம் கிடைக்காத நீதியை நீதிமன்றத்தில் பெற்றாலும் பயனில்லை என்ற நிலை தமிழகத்தில் உருவாகியுள்ளது. ஹிந்துக்களின் அடிப்படை உரிமையை அரசியல் அமைப்புச் சட்டம் காப்பாற்றத் தவறியுள்ளது.

திருப்பரங்குன்றம் மட்டுமின்றி, திண்டுக்கல் மாவட்டம் பெருமாள்கோவில்பட்டியில் தீபம் ஏற்ற நீதிமன்றம் உத்தரவிட்டும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. கிறிஸ்தவர்கள் அந்த கிராமத்தில் பெரும்பான்மையாம்! கன்யாகுமரி மாவட்டம் மயிலாடும்பாறையில் அகற்றப்பட்ட முருகன் சிலையை நிறுவ உத்தரவிட்டது நீதிமன்றம். கிறிஸ்தவர்கள் எதிர்ப்பதால் மறுக்கிறது தமிழக அரசு. நீதியரசர் மஹாதேவன் அவர்களும் ஆதிகேசவலுவும் அறநிலையத்துறை பின்பற்ற 75 வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற உத்தரவிட்டார்கள். அவற்றை அறநிலயத்துறை பின்பற்றவில்லை.

சனாதனத்தை ஒழிப்போம் என்று சொல்வது சட்டப்படி குற்றம். என்ன தண்டனை கொடுத்தது இந்தச் சட்டம்? இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பேசியவர் எப்படி ஹிந்து அறநிலயத்துறை அமைச்சராக இருக்கலாம்? உத்திரகோசமங்கை கோவிலை கிறிஸ்தவத் திருமணத்திற்கு வாடகைக்கு விடுகிறார்கள், திருநெல்வேலி மாவட்டம் அரியநாயகிபுரம் கோவிலில் சபரீசன் வீட்டு உத்திரகிரியை நிகழ்ச்சிக்கு இடம் கொடுக்கிறார்கள். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் ஆயிரங்கால் மண்டபத்தை காதணித் திருவிழாவிற்கு வாடகைக்கு விடுகிறார்கள். ஆலயத்தின் பவித்திரத்தன்மையை கெடுக்கிறார்கள். திருக்கோயில் கும்பாபிஷேகத்தை ஆகமங்கள் முடிவு செய்வதில்லை, அமைச்சர்களும், அதிகாரிகளும் முடிவு செய்கிறார்கள். நீதிமன்றமோ அரசின் ஊதுகுழலாக செயல்படுகிறது.

பிரசித்திபெற்ற திருவண்ணாமலை கார்த்திகை திருவிழாவில் கரும்புத் தொட்டில் தேர் வீதி வழியே வரும் வழக்கத்தை மாற்றியது அறநிலையத்துறை. ஹிந்துக்கள் வீதியில் வந்து போராடி பாரம்பரியத்தை மீட்டனர். நீர்நிலை ஆக்கிரமிப்பு, தடங்கல் என்று சொல்லி இடிக்கப்பட்ட கோவில்கள் ஏராளம். சிவபெருமான் அருளிய 28 ஆகமங்களின் அடிப்படையில் சைவ சம்பிரதாய ஆலயங்கள் நிறுவப்பட்டும், அதன் அடிப்படையில் வழிபாடுகளும் நடத்தப்படுகிறது. வைணவத் திருத்தலங்களில் இராமானுஜரால் வரையரை செய்யப்பட்ட 2 ஆகமங்களின் அடிப்படையிலான வழிபாடுகள் பின்பற்றப்படுகின்றன. இந்த ஆகமங்களை மாற்றி, வழிபாட்டு முறையைக் கட்டுப்படுத்தும் அராஜகத்தை அரசு செய்கிறது. வாக்கு வங்கி அரசியலிடம் அரசியல் சாசனமும், நீதிமன்றமும் தோல்வி என்பதைவிட, அதை நம்பும் பெரும்பான்மை ஹிந்து உரிமை இழந்து தவிக்கிறான் என்பதே இன்றைய நிலை!



- பால.கௌதமன்


# திருப்பரங்குன்றம் சர்ச்சை

## வரலாற்றின் பார்வையில் யார் குற்றவாளி?

***திருப்பரங்குன்றம் மலை யாருக்குச் சொந்தம்? தீபத்தூணா, சர்வே கல்லா?***

***கலவரத்தைத் தூண்டுபவர் யார்? நீதிபதி குற்றவாளியா? தமிழக அரசு குற்றவாளியா?***

திருப்பதி சென்று வந்தால் திருப்பம் வரும் என்பது பிரசித்தி பெற்ற சினிமா பாடல்! திருப்பரங்குன்றமோ ஒரு மாபெரும் திருப்பத்தை பலருக்கு அந்த திசைக்குச் செல்லாமலேயே ஏற்படுத்தி விட்டது. தமிழ் தெரியாத கடவுள் எதற்கு? பஞ்சாங்கம் பழமை என்று பேசிய பகுத்தறிவுக் குடும்ப குத்துவிளக்கு கனிமொழியை, ஆகமத்தின் அடிப்படையில் 3 ஆம் தேதி மட்டும் தானே தீபம் ஏற்ற வேண்டும்? என்று பஞ்சாங்க கர்த்தாவாகவும், ஆகம நிபுணராகவும் பரிணமிக்கச் செய்தது திருப்பரங்குன்றம் போராட்டம்! சிவாச்சாரியார்கள், டிசம்பர் 3 மட்டுமே விளக்கேற்றலாம், வேறு நாட்களில் ஏற்றக்கூடாது என்று சொன்னதாக பத்திரிகைச் செய்திகள் ஒருபுறம்! சிவாச்சாரியார்களை ஆக்கிரமிப்பாளர்கள், ஆலயத்தை விட்டு வெளியேறு என்று முழங்கியவர்கள், இந்தச் செய்தியை வேத வாக்காக எடுத்துக் கொண்டு பக்திப் பரப்புரைகளை நிகழ்த்த வைத்தது நீதிபதி ஜி.ஆர்.ஸ்வாமிநாதன் அவர்களின் தீர்ப்பு! இப்படி ஒரு திருப்பத்தை பார்க்க முடியுமா?



**ஆகம மோசடி**

பூர்வ காரண ஆகமம், கார்த்திகை நட்சத்திரம் அல்லது பௌர்ணமியில் தீபம் ஏற்றலாம் என்கிறது. இதையே உத்தர காமிக ஆகமமும் சொல்கிறது என்றும் வேறு நாட்களில் ஏற்றுவதை விசேஷமாக சொல்லவில்லை என்று திருப்பரங்குன்றம் சுப்ரமண்ய ஸ்வாமி கோயில் செயல் அலுவலருக்கு கடிதம் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார் ஆலால சுந்தர வேத சிவாகம வித்யாலயம் பாடசாலை முதல்வர் சிவஸ்ரீ செல்வம் பட்டர். டிசம்பர் 3 ஆம் நாள் மட்டுமே தீபம் ஏற்ற வேண்டும் என்று பிள்ளையார்பட்டி பிச்சை குருக்கள் கூறியதாக அறநிலயத்துறை வெளியிட்ட செய்தி தவறானது என்று பிச்சை குருக்கள் மறுத்தது, அரசின் ஆகம மோசடியை அம்பலப்படுத்தியது. பஞ்சாங்கத்தின்படி டிசம்பர் 4 காலை 8 மணிக்கு மேல் பௌர்ணமி திதி, அன்று காலை உதயத்தில் கார்த்திகை நட்சத்திரமும் இருந்தது. டிசம்பர் 3, கார்த்திகை முடிந்துவிட்டது ஆகவே டிசம்பர் 4 அன்று, தீபம் ஏற்ற அனுமதிக்கக் கூடாது என்ற அரசின் நீதிமன்ற வாதமும் பரப்புரையும் எடுபடாமல் போனது. டிசம்பர் 4, வைத்தீஸ்வரன் கோவில் உள்ளிட்ட பல கோவில்களில் சொக்கப்பனை மற்றும் தீப உற்சவம் நடந்ததே! நவீன ஆகம வல்லுனர்கள் சிவ பெருமானை சபிக்காமல் விட்டதால் சிவ பெருமான் தப்பினார்!

**சர்வே கல் சவடால்**

திருப்பரங்குன்ற மலை உச்சியில் இருப்பது சர்வே கல் என்றார் கனிமொழியும் பக்கவாத்தியங்களும்! மலை உச்சியில் தீபம் ஏற்றும்

மரபு இல்லை என்று கண்டு பிடித்தனர்! மதுரையில், ஆங்கிலேயர் சர்வே நடத்திய ஆண்டு பொ.ஆ1899. சென்னை மாகாணத்தில் மலைப் பகுதிகளை ஆங்கிலேயர்கள் அளவீடு செய்யத் தொடங்கியது 1883. ஆனால் திருப்பரங்குன்றத்தில் 1862ல் ஹிந்துக்கள் தீபம் ஏற்றும் முயற்சியை முஸ்லீம்கள் தடுத்தனர் என்று 1923 ஆம் ஆண்டு மதுரை துணை நீதிமன்றத் தீர்ப்பில் இடம்பெற்ற குறிப்பை மேற்கோள் காட்டியது 1996 சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பு! மலை உச்சியில் சர்வே கல் நிறுவப்பட்டதற்கு 37 ஆண்டுகளுக்கு முன் தீபம் ஏற்ற ஹிந்துக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. ஆங்கிலேயரின் குறிப்புப்படி, குறியீட்டுடனான சர்வே கல், இந்தத் தூணிற்கும் மசூதிக்கும் இடையே மலைப் பிளவின் அருகில் உள்ளது. சர்வே கல் சவடாலும் காலி!

சர்வே தூண் பருப்பு வேகவில்லை என்று தெரிந்ததும், மத்தியப்பிரதேசத்திலிருந்த வந்த சமணத்துறவிகள் தனித்து இருக்க மலையை பயன்படுத்தியதாகவும் அதன் அடையாளத்தூணே இந்தத் தூண் என்று நீதிமன்றத்தில் வாதிடுகிறார் ஹிந்து அறநிலையத்துறை வழக்கறிஞர் ஜோதி. அது தீபத்தூண் இல்லை என்று வாதிட்டவர், இரவு நேரங்களில் சமணர்கள் விளக்கேற்ற பயன்படுத்தும் தூண் என்று ஒரே நொடியில் உளறித் தள்ளினார். அயோத்தி விவகாரத்திலும், முஸ்லீம்கள் ஆக்கிரமித்தனர் என்பதை நீதிமன்றத்தில் நிறுவியபோது, அது பௌத்த விஹாரம் என்று இந்திய சமயத்தினரிடையே சண்டையை மூட்ட முயன்றது போல், இங்கு சமணர்களைத் தூண்டிவிட முற்படுகிறது தமிழக அரசு. கோவில் சொத்தை அறநிலையத்துறையே வேண்டாம் என்கிறது! இதற்கு அறநிலையத்துறை தேவையா? சர்வே கல் என்று கனிமொழி சொன்னது பொய் என்பதை தி.மு.க அரசே நீதிமன்றத்தில் நிர்வாணப்படுத்திவிட்டடதே !

**திருப்பரங்குன்றத்தில் 1862ல் ஹிந்துக்கள் தீபம் ஏற்றும் முயற்சியை முஸ்லீம்கள் தடுத்தனர் என்று 1923 ஆம் ஆண்டு மதுரை துணை நீதிமன்றத் தீர்ப்பில் இடம்பெற்ற குறிப்பை மேற்கோள் காட்டியது 1996 சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பு!**

**நீதிமன்றத் தீர்ப்பும், அவமதிப்பும், பித்தலாட்டமும்**

நீதியரசர் ஜி.ஆர்.ஸ்வாமிநாதன் அவர்கள் திருப்பரங்குன்றம் மலை மீது அறநிலையத்துறை டிசம்பர் 3 அன்று தீபம் ஏற்ற வேண்டும் என டிசம்பர் 1 அன்று உத்தரவிட்டார். இந்த உத்தரவு, 1996 ஆம் ஆண்டு மசூதிப் பகுதியைத் தவிர எங்கு வேண்டுமானாலும் தீபம் ஏற்றலாம் என்ற கிறிஸ்தவ மத நம்பிக்கைகொண்ட நீதியரசர் திரு. கனகராஜ் அவர்கள் வழங்கிய தீர்ப்பை அமல் படுத்த வேண்டும் என்பதே. டிசம்பர்




3, மதியம் வரை தீபம் ஏற்ற எந்த முயற்சியும் அறநிலையத்துறை தரப்பில் நடைபெறவில்லை என மனுதாரர் இராம.இரவிகுமார் தெரிவிக்க, மத நல்லிணக்கத்திற்கு ஊறு விளைந்துவிடும் என்று அறநிலையத்துறை முறையிட்டது. வேறு வழியின்றி, மனுதாரருடன் 10 நபர்கள், போலிஸ் பாதுகாப்புடன் சென்று தீபம் ஏற்ற நீதிபதி உத்தரவிட்டார். தீர்ப்புடன் மலையேறச் சென்றவர்களைத் தடுத்தது காவல்துறை. நீதிமன்ற அவமதிப்பை பார்த்துக் கொள்கிறேன் என்று ரவுடி போல் பேசினார் மதுரை காவல்துறை ஆணையர் லோகநாதன். மனுதாரர்கள் அன்றிரவே நீதிமன்றம் நாடினர். மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புடன் மனுதாரருடன் 10 நபர்கள், உச்சிக்குச் சென்று தீபம் ஏற்ற நீதிபதி உத்தரவிட்டார். 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, மத்திய பாதுகாப்புப் படையினரைத் தடுத்தது காவல் துறை. அன்றிரவே நீதியரசர் ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையிலான டிவிஷன் பெஞ்சில் நீதியரசர் ஸ்வாமிநாதன் அவர்கள் பிறப்பித்த நீதிமன்ற அவமதிப்பை ரத்து செய்ய மேல் முறையீடு செய்தது தமிழக அரசு!

டிசம்பர் 4 காலை நீதியரசர் திரு.ஜெயச்சந்திரன் தலைமையிலான டிவிஷன் பெஞ்ச், தமிழக அரசின் மனுவைத் தள்ளுபடி செய்தது. அன்று மாலை மாவட்ட ஆட்சியர், மதுரை காவல் ஆணையர் மற்றும் கோவில் செயல் அலுவலரை நீதிபதி ஸ்வாமிநாதன் அவர்கள் ஆஜராகச் சொன்னார். பாதுகாப்புடன் மனுதாரரையும் 10 நபர்களையும் மலைமீது தீபம் ஏற்ற பாதுகாப்பாக அழைத்துச் செல்ல கமிஷனருக்கு உத்தரவிட்டார். 144 தடை உத்தரவையும் ரத்து செய்தார். நீதிமன்ற விசாரணையின் போது தடை உத்தரவு எப்போது பிறப்பிக்கப்பட்டது? என்ற கேள்விக்கு, அரசு பதில் சொல்லவில்லை! தீபத்திற்கு அனுமதி மறுக்க சட்ட

ஒழுங்கைக் காரணம் காட்டிய காவல்துறையின் பொய் வெளிப்பட்டுவிடும் என்பதால் இந்த மௌனம்!

நீதிமன்ற உத்தரவுடன் திருப்பரங்குன்றம் வந்த மனுதாரருக்கு உத்தரவின்படி பாதுகாப்பிற்கு மதுரை மாநகர காவல் கமிஷனர் வரவில்லை மாறாக இனிகோ திவ்யன் என்ற துணை கமிஷனர் வந்தார். மனுதாரரை அனுமதிக்க முடியாது என்று சொல்லி, கூடியிருந்த பக்தர்களை கைது செய்தார். சட்ட ஒழுங்குப் பிரச்சினை என்று காரணம் சொன்னார் துணை கமிஷனர். இந்தக் காரணத்தைச் சொல்லி ஹிந்துக்கள் தீபம் ஏற்றுவதை அவர் தடுத்தபோது, நாங்கள் 2014 ஆம் ஆண்டுத் தீர்ப்பை பின்பற்றுகிறோம் என்று பேட்டி கொடுத்தார் சட்ட அமைச்சர் இரகுபதி. அப்படியென்றால் சட்ட ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் என்று டிசம்பர் 3 மற்றும் டிசம்பர் 4 அன்று நீதிமன்றத்தில் தமிழக அரசு சொன்னது பொய்தானே! நீதிமன்றத்தில் பொய் சொன்ன குற்றச் செயலையும் தமிழக அரசு செய்துள்ளது! 2014 ஆம் ஆண்டுத் தீர்ப்பைப் பின்பற்றுவோம் என்று நீதிமன்றத்தில் சொல்ல முடியுமா? எது இறுதியான தீர்ப்போ, அதைத்தானே பின்பற்ற வேண்டும்? இதுகூடத் தெரியாதவரா சட்ட அமைச்சர்? மேல் முறையீடு செய்ய இருக்கிறோம் அதனால் தீர்ப்பை அமல்படுத்தவில்லை என்கிறார் அமைச்சர்! ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் மீது தடை உத்தரவு இல்லை என்றால், அந்தத் தீர்ப்பை அமல்படுத்துவதுதானே சட்டம்! ஆக தீர்ப்பை அமல்படுத்தாமல் தீபம் ஏற்றுவதைத் தடுக்கச் சொன்ன காரணங்களும், சட்ட விளக்கமும் தவறானது என்பதுடன் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தையும், நீதிமன்றத்தில் பொய் சொன்ன குற்றத்தையும் தமிழக அரசு செய்துள்ளது. கார்த்திகை தீபத்தை தடுத்து, ஹிந்துக்களின் உரிமைகளைத் தடுத்து ஹிந்து இன அழிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறியுள்ளது தமிழக அரசு!

**மேல் முறையீட்டு மனு - அரசின் கயமை**

தமிழக அரசின் ஆத்திரம் இத்துடன் முடியவில்லை. டிசம்பர் 4, 2025 அன்று திட்டமிட்டு நிகழ்த்திய செயல் நீதிமன்ற அவமதிப்பு பிரச்சினையை ஏற்படுத்தும் என்று தெரிந்து அன்று இரவு 8.24 க்கு, உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீட்டிற்கு விண்ணப்பித்தது. ஆனால் இந்த விண்ணப்பத்தில் பல தவறுகள் இருப்பதை சரி செய்ய சொல்லி

> **நீதிமன்ற விசாரணையின் போது தடை உத்தரவு எப்போது பிறப்பிக்கப்பட்டது? என்ற கேள்விக்கு, அரசு பதில் சொல்லவில்லை! தீபத்திற்கு அனுமதி மறுக்க சட்ட ஒழுங்கைக் காரணம் காட்டிய காவல்துறையின் பொய் வெளிப்பட்டுவிடும் என்பதால் இந்த மௌனம்!**




நீதிமன்றம் சுட்டிக்காட்டியும், அதை செய்யாமல் தமிழக அரசு காலம் தாழ்த்துகிறது. மேல் முறையீட்டு மனுவில் நியாயமில்லை என்று தெரிந்ததால் காலம் தாழ்த்தவும், அவதூறுப் பிரச்சாரம் செய்யவும் உச்சநீதிமன்றத்தில் வழக்கை பதிவு செய்துவிட்டு, அதை விசாரணைக்கு கொண்டுவராமல் கபட நாடகம் ஆடுகிறது தமிழக அரசு. உயர் நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு அரசுக்கு பாதகமாகும் என்பதைத் தெரிந்து, மேல் முறையீட்டு மனு நிலுவையில் உள்ளது என்பதைக் காரணம் காட்டி, நீதியரசர் ஸ்வாமிநாதன் முன் உள்ள வழக்கைக் காலம் தாழ்த்தி, நீதிமன்ற அவமதிப்பிலிருந்து தப்புவதே இதன் நோக்கம்! எப்படித் தப்ப முடியும்? நீதியரசரை மிரட்டுவது, நீதியரசர் மீது அவதூறு, ஜாதிய, மதச்சாயம் பூசி துவேஷத்தைத் தூண்டி, நீதிமன்றப் போராட்டத்தை கருத்தியல் போராட்டமாக்கி அழுத்தத்தைக் கொடுத்து நீதிமன்ற அவமதிப்பிலிருந்து தப்ப சதி செய்கிறது தமிழக அரசு.

**வெறுப்பு பிரச்சாரத்திற்காக நீதிபதி பதவி நீக்கத் தீர்மானம்**

நீதியரசர் திரு.ஸ்வாமிநாதன் அவர்களை பதவி நீக்கம் செய்ய தி.மு.க கூட்டணிக் கட்சி எம்.பி கள் சபாநாயகரிடம் மனு அளித்துள்ளனர். ஒரு நீதிபதியை பதவி நீக்கம் செய்ய, நீதிபதியிடம் உறுதிப்படுத்தப்பட்ட தவறான நடத்தையோ இயலாமையோ இருப்பதாக நிறுவ வேண்டும். தி.மு.க கூட்டணிக் கட்சிகளின் புகாரில் அப்படிப்பட்ட சாரம் ஏதும் இல்லை. எனவே இந்தப் புகாரும் நீதிமன்றத்தை அச்சுறுத்தவும், வெறுப்பு அரசியலைத் தூண்டி அரசியல் லாபம் தேடி, நீதிமன்ற அவமதிப்பிலிருந்து தப்பும் நோக்கத்துடன் தொடரப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. வெறுப்பு அரசியலை கையிலெடுத்து, சட்டமீறல்களையும், அச்சுறுத்திப் பணியவைக்கும் குண்டாயிஸத்தை அரசே செய்வது, நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும், பொது அமைதிக்கும் விடுக்கப்பட்ட சவாலாக உள்ளது.

**திருப்பரங்குன்றத்தில் புதிய பிறைக்கொடி, வெடி பொருட்கள்**

நீதிமன்ற அவமதிப்புடன் வெறுப்பு அரசியல் ஒருபுறம் இருக்க, திருப்பரங்குன்றம் மலையில், கோவிலுக்குச் சொந்தமானப் பகுதியில் இரண்டு புதிய பிறைக் கொடிகள் நிறுவப்பட்டுள்ளன. மலைப் பகுதியிலிருந்து வெடி பொருட்கள் கண்டெடுக்கப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது. மலை மேல் இருக்கும் ஆக்கிரமிப்பு மசூதிக்கு வெடி குண்டு மிரட்டல் வந்ததாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது. மக்கள் கூடினால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை வரும் என்று ஏராளமான காவல் துறையினரைக் குவித்து, கடும் கண்காணிப்பில் இருக்கும் பகுதியில் பிறைக் கொடியும், வெடி பொருட்களும் எப்படி வந்தது ? இந்த நிகழ்வுகள், திருப்பரங்குன்றத்தை பதற்றமுள்ள பகுதியாகக் காட்டவும், நீதிமன்ற அவமதிப்பை நியாயப்படுத்தவும், வரும் காலங்களில் ஏற்படும் இஸ்லாமிய பயங்கரவாதத் தாக்குதல்களை நியாயப்படுத்தி, நிரந்தரமாக ஹிந்துக்களின் தீபம் ஏற்றும் உரிமையை பறிக்கவும் பயன்படும்.

**சர்ச்சைக்குரிய தொல்லியல் துறை ஆய்வு**

டிசம்பர் 10 அன்று காலை, தமிழகத் தொல்லியல் துறையினர் மலைமீதுள்ள தீபத்தூணை ஆய்வு செய்தனர். திருப்பரங்குன்றம் வழக்கு நிலுவையில் உள்ளபோது, அதுவும் நீதிமன்ற அவமதிப்புடன், தி.மு.க வின் திட்டமிட்ட ஹிந்து இன அழிப்பு கொள்கையை அரசு இயந்திரம் செயல்படுத்தும் போது, இந்தத் தொல்லியல் துறையின் சர்வே உள்நோக்கம் கொண்ட திரிபுவாதத்தை முன்னெடுக்க ஏவப்பட்டதாகத் தெரிகிறது. இத்தனை ஆண்டுகள் காணாமல் போன தொல்லியல் துறை திடீர் ஆய்வு நடத்தக் காரணமென்ன? பிரிவினைவாதத்தைத் தூண்டும் நோக்கத்தோடு கீழடி அருங்காட்சியகத்தில் உண்மைக்குப் புறம்பாகப் பிரச்சாரம் செய்வதும், பல உண்மைகளை மறைத்தும் பேசும் தமிழக தொல்லியல் துறையின் நடவடிக்கை சந்தேகமளிக்கிறது.

**உள்ளூர்-வெளியூர் உருட்டு**

திருப்பரங்குன்றம் மக்கள், மலை உச்சியில் தீபம் ஏற்ற ஹிந்து அமைப்பினருக்கு ஆதரவு தரவில்லை,




**நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தையும், நீதிமன்றத்தில் பொய் சொன்ன குற்றத்தையும் தமிழக அரசு செய்துள்ளது.**

வெளியூர்காரர்கள்தான் பிரச்சினை செய்கிறார்கள் என்று தி.மு.க மற்றும் அவர்களின் கூலிகள் தரப்பில் பொய் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. இதன் எதிரொலியாக மதுரைப் பகுதியிலுள்ள ஹிந்து ஆன்மிக அமைப்புக்கள், பல ஜாதி அமைப்புக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மலை உச்சியில் தீபம் ஏற்ற அனுமதிக்கும்படி டிசம்பர் 8, திங்கட்கிழமை மனு அளித்தனர். திருப்பரங்குன்றம் ஊர் மக்கள், மலையில் தீபம் ஏற்ற அனுமதி கோரி டிசம்பர் 14 அன்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில், இதற்கு முன் தீபத்திற்கு ஆதரவான கடையடைப்புப் போராட்டம் நடந்தபோது, கடைகளைத் திறக்க பாதுகாப்புத் தருகிறேன் என்று தி.மு.க எம்.எல்.ஏ சொல்லியதையும், கடைகளை மூடக்கூடாது என்று வற்புறுத்தியதையும் உண்ணாவிரதக் கூட்டத்தில் பேசியவர்கள் கோடிட்டுக் காட்டினர். தி.மு.க வின் உள்ளூர்-வெளியூர் பொய் பிரச்சாரம் தோல்வியடைந்தது என்பதைவிட, ஹிந்துக்களை ஒருங்கிணைக்கும் பணியையும் தி.மு.க மற்றும் கூலி கும்பல்கள் செய்து ஹிந்து எழுச்சிக்கு உதவி செய்துள்ளனர்.

**கலவரத்தைத் தூண்டிய முதல்வர்- தி.மு.க எம்.எல்.ஏ மகன் ஒப்புதல்**

கோவில் நகரமான மதுரையை தொழில் நகரமாக மாற்றுவேன் என்று முழங்குகிறார் முதல்வர். கோவிலின் மேல் என்ன வெறுப்பு பாருங்கள்! சரி, அவர் வாதத்திற்கே வருவோம், 1967 ல் வந்த திராவிட ஆட்சி 58 ஆண்டுகளாக மதுரையில் எந்தத் தொழில் வளர்ச்சியும் ஏற்படுத்தவில்லை என்ற உண்மையை முதல்வரையே ஒப்புக்கொள்ள வைத்துள்ளது திருப்பரங்குன்றம் போராட்டம்! மதுரையில் வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கச் சென்றார் முதல்வர் ஸ்டாலின். விமான நிலையத்தில் முதல்வர் முன் கோஷமிட்ட இளைஞரை மடக்கி வண்டியில் ஏற்றி எச்சரித்து விடுவித்தது காவல் துறை. விடுவிக்கப்பட்ட இளைஞன் செய்தியாளர்களைச் சந்தித்து, “நான் நீதியரசர் ஸ்வாமிநாதன் ஒழிக என்றேன்! முதல்வர் புரட்சிகரமான அறிக்கையை வெளியிட்டிருந்தார்.நாம் இதைச்செய்வோம், அதனால் வரும் பின் விளைவுகளைப் பார்த்துக்கொள்ளலாம் என்று கூறினார். அந்த தைரியத்தில் நான் நீதிபதி ஸ்வாமிநாதனுக்கு எதிரான கோஷத்தை எழுப்பினேன்! என்றான்”. அகைஷ என்ற தூய தமிழ் பெயர் கொண்ட இந்த இளைஞனின் தந்தையான விளாத்திகுளம் தி.மு.க எம்.எல்.ஏ மார்கண்டேயன்



தன் மகனின் செயலைக் கண்டு பெருமை கொள்வதாகத் தெரிவித்தார். தமிழக முதல்வரின் அறிக்கையே இந்தக் குற்றச் செயலுக்குக் காரணம் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளான் அகைஷ! கலவரத்தைத் தூண்டிய முதல்வர் ஸ்டாலின் மீதும், மதுரை விமான நிலையத்தில் சட்ட மீறலில் ஈடுபட்ட அகைஷ மீதும் வழக்குப் பதியுமா காவல்துறை? சட்ட ஒழுங்கு சீர்கெட்டுவிடக்கூடாது என்று நீதிமன்றத் தீர்ப்பையே மதிக்காமல் அமைதியான ஹிந்துக்கள் மீது நடவடிக்கை எடுத்த மதுரை காவல்துறை ஆணையர் லோகநாதன், அவர் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பகுதியில் நடந்த சட்ட மீறல் மீதும், தூண்டிய முதல்வர் மீதும் நடவடிக்கை எடுப்பாரா?

> **வெறுப்பு அரசியலை கையிலெடுத்து, சட்டமீறல்களையும், அச்சுறுத்திப் பணியவைக்கும் குண்டாயிஸத்தை அரசே செய்வது, நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும், பொது அமைதிக்கும் விடுக்கப்பட்ட சவாலாக உள்ளது.**

**தீபம் ஏற்றத் தொடர் போராட்டம்**

அமைதியான மதுரையை அயோத்தியாக மாற்ற முயலும் சதியை விடமாட்டோம் என்கிறார்கள் தி.மு.க அமைச்சர்களும் கூலிகளும். ஹிந்து அமைப்பினர் புதியதாகப் பிரச்சினையைக் கிளப்புவதாகக் குற்றம் சாட்டுகின்றனர். இந்த மலை உச்சியில் 1862 ஆம் ஆண்டும் 1912 ஆம் ஆண்டும் ஹிந்துக்கள் தீபம் ஏற்றும் முயற்சியை முஸ்லீம்கள் தடுத்தனர் என்று 1920 ஆம் ஆண்டு நடந்த நீதிமன்ற வழக்கு குறிப்பிடுகிறது. 1947 ஆம் ஆண்டு, மலை உச்சியில் பாகிஸ்தான் கொடியின் தோற்றத்தில் உள்ள பிறைக்கொடியை முஸ்லீம்கள் ஏற்றினர். இதற்கு எதிராக காங்கிரஸ் எம்.எல்.ஏ சின்ன கருப்புத் தேவர் போராட்டம் நடத்தினார். 1850களில் பரகத்துல்லா என்ற ஹைதர் அலியின் தளபதியின் கட்டுப்பாட்டில் மதுரை இருந்தது. அவனுடனிருந்த பக்கிரி ஒருவன் மீனாட்சி அம்மன் கோவில் மீது மசூதி கட்ட முற்பட்டான். இவனை ஆங்கிலேயர் படை விரட்டியதால் அவன் சிவகங்கைக்கு ஓடினான். 1859ல் மதுரை முழுவதுமாக ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. ஆங்கிலேயரின் பிரதிநிதியாக மதுரையை ஆட்சி செய்தவன் யூசுப் கான் என்ற மருதநாயகம்! 1862ல் ஹிந்துக்கள் தீபம் ஏற்றுவது தடுக்கப்பட்டது ஏன் என்பதற்கு இதற்குமேல் விளக்கம் வேண்டுமா?

1947ல் காங்கிரஸ் எம்.எல்.ஏ சின்னக் கருப்புத் தேவரை சமாதானப்படுத்தி போராட்டத்தைக் கைவிடச் செய்தது காங்கிரஸ் தலைமை! இந்தக் காலம் வரை ஹிந்து முன்னணி என்ற அமைப்பு தொடங்கப்படவில்லை! சின்னக் கருப்பத் தேவர் ஆர்.எஸ்.எஸ் அல்லது ஜன சங் அமைப்பைச் சேர்ந்தவரும் இல்லை!

**தீபம் ஏற்ற பலிதானியான இந்து முன்னணித் தலைவர் இராஜகோபாலன்**

1990 களில் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களின் செயல்பாடுகள் தமிழகத்தில் அதிகரிக்கத் தொடங்கின. ஹிந்து முன்னணியின் நிறுவனர் வீரத்துறவி இராம.கோபாலன் அவர்கள் 1984ல் மதுரை இரயில் நிலையத்தில் வெட்டப்பட்டார் என்பது கவனிக்கத்தக்கது. இந்நிலையில் 1992 ஆம் ஆண்டு முதல் திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெறத் தொடங்கியது. ஹிந்து முன்னணியின் மாநிலத் தலைவராக இருந்த மதுரை வழக்கறிஞர் இராஜகோபால் அவர்கள் தெருமுனைக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள், துண்டுபிரசுர வினியோகம், சுவரொட்டி விளம்பரம் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மதுரையின் வடக்கில் அமைந்துள்ள முருகனின் படைவீடுகளில் ஒன்றான பழமுதிற்சோலை முதல் திருப்பரங்குன்றம் வரை பாதயாத்திரை மேற்கொண்டார். இந்நிலையில், திரு.தியாகராஜன் அவர்கள் தலைமையிலான ஹிந்து பக்த ஜன சபை என்ற அமைப்பு, 1994 ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்ற அனுமதிக்க வேண்டி சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. இந்த வழக்கில் திரு இராம.கோபாலன் அவர்கள் ஹிந்து முன்னணி அமைப்பின் சார்பாக சேர்ந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. நீதிமன்றப் போராட்டம் ஒருபுறம் இருக்க, மக்களை ஒருங்கிணைக்கும் களப்பணியால் ஏற்பட்ட ஹிந்து எழுச்சியைப் பொறுத்துக்கொள்ள முடியாத இஸ்லாமிய பயங்கரவாதிகள், 1994 ஆம் ஆண்டு, திரு.இராஜகோபால் அவர்கள் வீட்டிற்குள் புகுந்து அவரை வெட்டிக் கொன்றனர்.

1995 ஆம் ஆண்டு, ஹிந்து முன்னணியின்

தலைமையில் ஹிந்து அமைப்பினர் வெற்றிகரமாக மலை மீது தீபம் ஏற்றினர், கைதும் செய்யப் பட்டனர். இந்த வழக்கின் இறுதி விசாரணை 1996 ஆம் ஆண்டு, நீதியரசர் கனகராஜ் அவர்கள் முன்னிலையில் வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, 1923 ஆம் ஆண்டு மதுரைசப் கோர்ட் தீர்ப்பையும், 1931 ஆம் ஆண்டு லண்டன் ப்ரிவி கவுன்சில் தீர்ப்பையும் உறுதி செய்து, மசூதியிலிருந்து 15 மீட்டருக்கு அப்பால் எங்கு வேண்டுமென்றாலும் தீபம் ஏற்றலாம் அதை அதிகாரிகளின் அனுமதி பெற்று செய்ய வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினார். 1997 முதல் 2025 வரை, தீபம் ஏற்ற ஹிந்துக்கள் தொடர்ந்து கோரி வருகின்றனர் ஆனால் அறநிலையத்துறை ஒத்துழைக்கவில்லை.

**1967 ல் வந்த திராவிட ஆட்சி 58 ஆண்டுகளாக மதுரையில் எந்தத் தொழில் வளர்ச்சியும் ஏற்படுத்தவில்லை என்ற உண்மையை முதல்வரையே ஒப்புக்கொள்ள வைத்துள்ளது திருப்பரங்குன்றம் போராட்டம்!**

**திருப்பரங்குன்றத்தை ஆக்கிரமிக்கும் முயற்சியும் ஹிந்து எழுச்சியும்**

இந்நிலையில், மலை மேலுள்ள மசூதியில் ஆட்டை வெட்டி உணவு போடுகிறோம் என்று 2024ம் ஆண்டு டிசம்பர் 25, இராஜபாளையத்தைச் சேர்ந்த முஸ்லீம் குடும்பம் மலைக்குச் செல்ல முற்பட்டனர். ஹிந்துக்களின் எதிர்ப்பால் காவல் துறையினர் அதைத் தடுத்தனர். இதைத் தொடர்ந்து ஜனவரி 18, 2025 அன்று முஸ்லீம் அமைப்புகள் மலையில் ஆடு வெட்டுவது எங்கள் உரிமை என்று சொல்லி மலையேறும் போராட்டத்தை அறிவித்தனர். ஹிந்து அமைப்பினரின் எதிர்ப்பால், காவல்துறையினர் அந்த நிகழ்வைத் தடுத்தனர். ஜனவரி 22 , 2025 அன்று, இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் நாடு வக்ப் வாரியத் தலைவருமான நவாஸ்கனி, திருப்பரங்குன்றம் மலையேறி வேண்டுமென்றே அசைவ உணவை, காவல்துறையினர் பாதுகாப்போடு உட்கொண்டு, மலையின் பவித்திரத்தன்மைக்கு களங்கம் விளைவித்தார். அத்துடன் மலை வக்ப் சொத்து என்று உரிமை கோரினார்! புராண காலம் தொட்டு, சங்க இலக்கிய காலத்திலும், இன்றும் முருகப் பெருமானின் படைவீடாக விளங்கும் திருப்பரங்குன்று முருகனுக்குச் சொந்தமில்லை என்று நவாஸ்கனி சொன்னபோது தமிழக அரசு வாய் மூடி மௌனம் காத்தது. திருப்பரங்குன்றமே சிவன் என்ற தேவாரப் பாடல் பெற்ற மலையில் அசைவம் தின்ற நவாஸ்கனி மீது நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும், உயிர் பலி கொடுப்பது மரபு என்று, முருகன் மலையை வக்ப் சொத்து என்று சொல்லி அபகரிக்க முயன்ற நவாஸ்கனிக்கு முட்டுக்கொடுத்தது ஆளும் கட்சி தி.மு.க! மத நல்லிணக்கம் கெட்டுவிட்டது என்று யாரும் அப்போது கொக்கரிக்கவில்லை! மதக் கலவரம் ஏற்படுத்துகிறார்கள், வெளியூர்காரர்கள், வசனங்கள் எதுவும் பேசப்படவில்லை!

தமிழக அரசின் உதவியுடன் முஸ்லீம்கள் திருப்பரங்குன்றத்தை ஆக்கிரமிக்கும் சதியை உணர்ந்த ஹிந்துக்கள் விழித்துக் கொண்டனர். பிப்ரவரி மாதம் 4, 2025 அன்று போராட்டம் அறிவித்தனர். போராட்டத்திற்கு மதுரை காவல்துறை அனுமதி மறுத்தது. நீதிமன்றம் சென்று அனுமதி பெற்றனர். நீதிமன்ற அனுமதி உத்தரவு பிப்ரவரி 4, 2025 மதியம் வந்தது. அன்று மாலை சுமார் 10,000 ஹிந்துக்கள் திரண்டனர். அதிர்ச்சியில் உறைந்தது தி.மு.க அரசு. இந்நிலையில், ஹிந்துக்களை ஒருங்கிணைக்க ஹிந்து முன்னணி பேரியக்கம் முருக பக்தர்கள் மாநாட்டை ஜூன் 22, 2025 அன்று மதுரையில் நடத்தியது. இதற்கும் அனுமதி மறுத்தது தமிழக அரசு. நீதிமன்றம் சென்று அனுமதி பெற்றது ஹிந்து முன்னணி. கந்த சஷ்டி பாராயண நிகழ்ச்சி நடத்தியதில் அதிர்ந்தது தமிழக அரசு.

இந்நிலையில் 2025 ஆம் ஆண்டு, அக்டோபர் 28 அன்று திருப்பரங்குன்றம் மலையில், 1996 ஆம் ஆண்டு தீர்ப்பின்படி தீபம் ஏற்ற வேண்டும் என்று இராம.இரவிகுமார் அறநிலையத்துறையினரிடம் கோரிக்கை வைத்தார். இந்தக் கோரிக்கையை நவம்பர் 3, 2025 அன்று தேதியிட்ட கடிதம் வாயிலாக நிராகரித்தது ஹிந்து சமய அறநிலையத் துறை. இந்த அறநிலையத்துறை உத்தரவை எதிர்த்து திரு.இராம இரவிகுமார் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் மனுதாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி திரு.ஜி.ஆர். ஸ்வாமிநாதன் அவர்கள், 1996 ஆம் ஆண்டின் தீர்ப்பின் அடிப்படையில் டிசம்பர் 3, 2025 அன்று மலை உச்சியில் ஹிந்து அறநிலையத் துறை தீபம் ஏற்ற டிசம்பர் 1, 2025 அன்று உத்தரவிட்டார். ஹிந்து அறநிலையத்துறை உத்தரவை நிறைவேற்றாததால், மனுதாரரை தீபம் ஏற்ற நீதிபதி உத்தரவிட்டார்.

**திருப்பரங்குன்றம்- கடவுளும் கலையும் உறையும் திருத்தலம்**

இப்படி ஒரு தொடர் போராட்டத்தை ஹிந்துக்கள் நடத்தக் காரணம் என்ன? புராண காலம் முதல் இன்று வரை திருப்பரங்குன்றம் ஹிந்துக்களின் ஆன்மிக வாழ்வில் பின்னிப்பிணைந்துள்ளது. வாயுதேவன் வீசிய கந்தமாதன பர்வதத்தின் துகள் திருப்பரங்குன்றம். சிபி சக்ரவர்த்தி பூதானம் செய்ய தேர்ந்தெடுத்த இடம் திருப்பரங்குன்றம். சிவபெருமானே இங்கு வந்து தானம் பெற்றார் என்கிறது நிரம்பிய அழகிய தேசிகர் எழுதிய திருப்பரங்கிரி புராணம். ஹரிச்சந்திரன் சிவனுக்கும், முருகனுக்கும் ஆலயம் அமைத்து விழா எடுத்தான் என்றும் சிவ பெருமானை சிந்திய ஆகமத்தின்படி சத்ய கிரீஸ்வரர் என்ற திருநாமத்தில் பிரதிஷ்டை செய்ததாக சுட்டிக்காட்டுகிறது திருப்பரங்கிரிப்

**புராண காலம் தொட்டு, சங்க இலக்கிய காலத்திலும், இன்றும் முருகப் பெருமானின் படைவீடாக விளங்கும் திருப்பரங்குன்று முருகனுக்குச் சொந்தமில்லை என்று நவாஸ்கனி சொன்னபோது தமிழக அரசு வாய் மூடி மௌனம் காத்தது.**

புராணம். மேலும் தெய்வானை திருமணம் இங்கு நடந்ததையும் குறிப்பிடுகிறது. இந்தச் செய்தியை கந்த புராணத்தில் உள்ள திருப்பரங்குன்றம் படலமும், தெய்வானையம்மை திருமண படலமும், நக்கீரர் எழுதிய சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படையும் உறுதி செய்கிறது. பூதத்தின் பிடியிலிருந்து நக்கீரரையும், பண்டிதர்களையும் காத்து, பூதத்தை அழித்தார் திருப்பரங்குன்றத்தில் உறையும் முருகன் என்ற திருப்பரங்கிரிப் புராணக்கதையை திருவிளையாடல் புராணத்திலும் காணலாம். புராணங்களில் பல தெய்வீக அம்சங்கள் கொண்ட தலமாக திருப்பரங்குன்றம் போற்றப்படுகிறது. இதையே, பரிபாடல் எல்லா தெய்வங்களும் வந்து நின்றமையால் திருப்பரங்குன்றம் இமயத்திற்கு நிகர் என்று புராண செய்திகளை உறுதி செய்கிறது.

திருப்பரங்குன்றத்தில் அழகான ஓவியங்கள் அடங்கிய எழுத்து நிலை மண்டபம் இருந்ததாக பரிபாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது அது அங்கு இல்லை! இஸ்லாமிய படையெடுப்பும், மேலேயுள்ள மசூதிக்கும் தொடர்புள்ளதா என்று ஆய்வு செய்ய வேண்டும்! இம்மலையில் முருகன் வாசம் செய்வதாக மருதநில நாகனாரின் அகநானூற்றுப் பாடல் குறிக்கிறது. இதே அகநானூற்றில் திருப்பரங்குன்றத்தில் இடைவிடாமல் விழா நடப்பதாக எருங்காட்டுத் தாயம் கண்ணனார் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியமான கலித்தொகையில் திருப்பரங்குன்றம் வெல்வோன் குன்று என்று அழைக்கப்படுகிறது. இந்த மலையின் அழகை சங்க இலக்கியமான மதுரைக் காஞ்சி விவரமாக வருணிக்கிறது.

புராணக்கதைகளும் தமிழ் சங்க இலக்கியங்களும் ஒரே செய்தியைச் சொல்லுவதுபோல், பக்தி இலக்கியங்களும், ஆங்கிலேயர்களின் குறிப்புகளும் புராண காலம் தொட்டு இன்று வரை மரபு மாறாமல் பின்பற்றப்படுவதை உறுதி செய்கிறது. இந்த தலம் குறித்து அருணகிரிநாதர் பாடிய பாடல்கள் திருப்பரங்கிரி வகுப்பு என்ற பெயரில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பாடல்கள் பரங்கிரி முருகேசனே என்று முடிவடையும்.

**திருப்பரங்குன்றம்- மலையே சிவன்**

திருஞானசம்பந்தர் தேவாரத்திலும், சுந்தரர் தேவாரத்திலும் இந்த மலையையே தெய்வமாகக் காணும் சங்ககால மரபு வெளிப்படுகிறது. இந்த மரபு பின்பற்றப்பட்டதை Manual of Madura country என்ற கருப்பொருட்களஞ்சியம் எழுதிய நெல்சன் உறுதி செய்கிறார். 1868 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த நூலில்,"முழு பாறையும் இந்து சமூகத்தினரால் ஒரு லிங்கமாக வழிபடப்படுகிறது; மேலும் இந்த விசேட வடிவ வழிபாட்டின் தாயகம் மதுரா என்பது நம்பத்தக்க காரணங்களால் தெரிகிறது." என்ற குறிப்பு, இந்த மலையே இறைவன் என்ற நம்பிக்கை தொன்றுதொட்டு வழக்கத்தில் இருப்பதை உறுதிசெய்கிறது.

**திருப்பரங்குன்றத்தின் தியாக வரலாறு**

இத்தகைய பெருமைகளும், புனிதமும் திருப்பரங்குன்றத்திற்கு இருப்பதால் இந்தக் கோவிலை காக்கவும், மரபுகளைப் பாதுகாக்கவும் ஹிந்துக்கள் உயிர் தியாகம் செய்துள்ளனர். ஆங்கிலேயப் படை திருப்பரங்குன்றம் சொக்கநாதர் கோவில், பழனி ஆண்டவர் கோவில், முன் மண்டபம் ஆகியவற்றை இடித்து கோவிலுள் நுழைய முற்படும்போது, குட்டிப் பட்டர் என்பவர் கோபுரத்திலிருந்து குதித்து உயிர் தியாகம் செய்து, பேயுருவம் கொண்டு கோயிலை காப்பாற்றியதால் அவர் குடும்பத்திற்கு 1792 ல் மானியம் எழுதி வைத்த கல்வெட்டு ஆலயத்தில் உள்ளது. எல்லப்ப முதலி என்பவர் கோவிலைக் காக்க உயிர் தியாகம் செய்ததால் அவர் குடும்பத்திற்கு மானியம் எழுதிவைத்த கல்வெட்டு உள்ளது என்றும், அது அழியும் நிலையில் இருப்பதாக 1981ல் தமிழக தொல்லியல் துறையால் வெளியிடப்பட்ட, திரு.செ.போசு என்ற கல்வெட்டு ஆய்வாளர் எழுதிய திருப்பரங்குன்றம் என்ற நூலில் பதிவாகியுள்ளது. ஆக திருப்பரங்குன்றத்திற்கு புராணகாலம் தொட்டு தொடர் வரலாறு உள்ளதுபோல், ஆக்கிரமிப்பு காலம் முதல் போராட்ட வரலாறும் உள்ளது.

**யார் குற்றவாளி ?**

- **தீபம் ஏற்ற திரு.ஜி.ஆர்.ஸ்வாமிநாதன் உத்தரவிட்டதன் அடிப்படை 1996 ஆம் ஆண்டு நீதியரசர் திரு.கனகராஜ் அவர்கள் வழங்கிய தீர்ப்பு. நீதியரசர் கனகராஜ் அவர்களோ, விடுதலைக்கு முன் 1923 ஆம் ஆண்டு மதுரை சப் கோர்ட் வழங்கிய தீர்ப்பையும், லண்டன் பிரிவி கவுன்சில் 1931 ல் வழங்கிய தீர்ப்பையும் அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பு வழங்கியுள்ளார். நீதியரசர் ஸ்வாமிநாதன் அவர்களோ இந்தத் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தவே உத்தரவிட்டார்.**
- **இதில் நீதிபதி கனகராஜ் அவர்களும், ப்ரிவி கவுன்சில் தீர்ப்பை எழுதிய நீதிபதியும் கிறிஸ்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.**
- **இவர்களையும் ஹிந்துவவாதிகள், பார்ப்பனர்கள் என்று சொல்லி விட முடியுமா? 28 ஆண்டுகளாக அமல்படுத்தப்படாத நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்த உத்தரவிட்ட நீதிபதி குற்றவாளியா? 28 ஆண்டுகாலமாக நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத தமிழக அரசு குற்றவாளியா?**

# திருப்பரங்குன்றப் போராட்டம் - டைம் லைன்

| | |
|---|---|
| 13 பொ.ஆ | அரபு நாட்டு ஜெட்டா தலைவன் சிக்கந்தர் பாதுஷா திருப்பாண்டியனை வென்று மதுரையை ஆக்கிரமித்தான் |
| 13 பொ.ஆ | மதம்மாற மறுத்த பாண்டிய மன்னன், படை திரட்டி சிக்கந்தரைக் கொன்று மதுரையை மீட்டான். |
| 13 பொ.ஆ | மலை மீது தர்கா கட்டப்பட்டது.ஆனால் சிக்கந்தர் புதைக்கப்பட்டது கோரிப்பாளையத்தில் என்று தெரிவிக்கும் செய்தி, சமீபத்தில் தமிழக அரசின் வலைத்தளத்திலிருந்து நீக்கப்பட்டது. |
| 1583 | வீரப்பநாயகரால் முருகன் கோயில் கோபுரம் மீண்டும் எழுப்பப்பட்டது. |
| 1792 | ஆங்கில கிறிஸ்தவர்களின் இடிப்பிலிருந்து திருப்பரங்குன்றம் கோயில் காக்க உயிர் தியாகம் செய்தார் குட்டிப்பட்டர். |
| தெரியவில்லை | கோயில் நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்து எல்லப்பமுதலி உயிர் தியாகம் செய்தார். |
| 1805 | மீரான் முகைதீன் ராவுத்தர் இந்த தர்காவை மீண்டும் கட்டினார். |
| 1862 | திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றும் ஹிந்துக்களின் முயற்சியை முறியடித்த முஸ்லீம்கள் |
| 1912 | திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றும் ஹிந்துக்களின் முயற்சியை முறியடித்த முஸ்லீம்கள் |
| 1923 | படிக்கட்டு, மசூதி, கொடிமரம் பகுதியைத் தவிர உள்ள பகுதிகள் கோயிலுக்கே சொந்தம் - மதுரை சப் கோர்ட் தீர்ப்பு |
| 1931 | படிக்கட்டு, மசூதி, கொடிமரம் பகுதியைத் தவிர உள்ள பகுதிகள் கோயிலுக்கே சொந்தம் - பிரிவி கவுன்சில் தீர்ப்பு |
| 1996 | படிக்கட்டு, மசூதி, கொடிமரம் பகுதியைத் தவிர எங்கு வேண்டுமென்றாலும் ஹிந்துக்கள் தீபம் எற்றலாம் - சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு |
| 2025 அக்டோபர் | நீதிபதியின் உத்தரவின்படி மலை உச்சியில் தீபம் ஏற்ற அறநிலயத்துறையிடம் மனு |
| 2025 நவம்பர் | தீபம் ஏற்ற ஹிந்துக்கள் விடுத்த கோரிக்கை நிராகரிப்பு |
| 2025 டிசம்பர் 1 | மலை உச்சியிலுள்ள தீபத் தூணில் அறநிலையத்துறை தீபம் ஏற்ற வேண்டும் உயர் நீதிமன்றம் உத்தரவு |
| 2025 டிசம்பர் 3 | மலை உச்சியில் அறநிலையத்துறை தீபம் ஏற்ற இயலாமல் போனதால் மனுதாரர் காவல்துறை உதவியுடன் ஏற்ற வேண்டும் |
| 2025 டிசம்பர் 3 | காவல்துறை ஒத்துழைக்க மறுத்ததால் மத்திய தொழில் பாதுகாப்புப் படை உதவியுடன் தீபம் ஏற்ற நீதிபதி உத்தரவு |
| 2025 டிசம்பர் 3 | உத்தரவை அவமதித்த காவல்துறை- தீபம் ஏற்றத் தடை |
| 2025 டிசம்பர் 4 | நீதிமன்ற அவமதிப்புக்கு எதிரான தமிழக அரசின் மனுவை உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் தள்ளுபடி செய்தது |
| 2025 டிசம்பர் 4 | மனுதாரர் தீபம் ஏற்ற காவல்துறை பாதுகாப்பளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு. உத்தரவை மீறிய தமிழக அரசு. ஹிந்துக்கள் கைது |
| 2025 டிசம்பர் | நீதிபதி ஜி.ஆர்.ஸ்வாமிநாதன் மீது பாராளுமன்றத்தில் பதவி நீக்கத் தீர்மானத்தை தாக்கல் செய்தது தி.மு.க கூட்டணி |

# திராவிட மாடல் ஆட்சியின் அலட்சியமும்; பொலிவிழந்த திருவண்ணாமலை தீபமும்

அருணாசலன்

பஞ்சபூத தலங்களில் அக்னி தலமான திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா, நவம்பர் 24ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது, பத்தாம் நாளான கடந்த 3ம் தேதி 2,668 அடி உயர அருணாசல மலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்பட்டது.

ஆண்டுதோறும் கார்த்திகை தீபம் முடிந்ததும் திருவண்ணாமலை நகரம் முழுவதுமே குப்பை கூளங்களாக மாறியிருக்கும். ஆனால், இந்த ஆண்டு சுற்றுப்புற நகராட்சி, பேரூராட்சிகளில் இருந்து வரவழைக்கப்பட்ட 2,000க்கு மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் நகரை சுத்தமாக பராமரித்தனர். கடைசியாக, இந்தப் பணியாளர்களை அண்ணாமலையார் கோயிலுக்கு அழைத்துச் சென்று மாவட்ட நிர்வாகம் கௌரவித்தது. தீபத் திருவிழாவில் பாராட்டத்தக்க ஒரே ஒரு விஷயம் இந்த தூய்மை பணியாளர்களின் சேவைதான்.

மற்றபடி, உலக பிரசித்திபெற்ற தீபத் திருவிழா, திராவிட மாடல் ஆட்சியாளர்களின் நிர்வாக திறமையின்மையால் இந்த ஆண்டு பொலிவிழந்து வேதனை திருவிழாவாக மாறியது. மாவட்ட நிர்வாகம் சார்பில் தீபத் திருவிழாவுக்காக கூட்டப்பட்ட ஆலோசனை கூட்டமே நிர்வாக சீர்கேட்டை வெளிச்சம் போட்டு காட்டியது.

**உலக பிரசித்திபெற்ற தீபத் திருவிழா, திராவிட மாடல் ஆட்சியாளர்களின் நிர்வாக திறமையின்மையால் இந்த ஆண்டு பொலிவிழந்து வேதனை திருவிழாவாக மாறியது.**

எவ்வளவு கூட்டம் வரும் என்பதை அரசு நிர்வாகம் கணிக்கவே இல்லை என்று உள்ளூர் முழுவதும் பேசிக் கொண்டனர். தீபம் புதன்கிழமை வந்தது. மறுநாள் பௌர்ணமி. அதனால், செவ்வாய்க்கிழமை முதல் வியாழக்கிழமை வரை 3 நாட்களுக்கு மட்டுமே போக்குவரத்து மாற்றம் ஏற்பட்டது. வார இறுதி நாட்களில் பொது வாகவே திருவண்ணாமலையில் போக்குவரத்து திக்குமுக்காடும். ஆனால், தீபத் திருவிழா நடுவிலும் தீபம் ஏற்றப்படும் நாள் வரையிலும் வரும் வார இறுதி நாட்களைப் பற்றி ஆட்சியாளர்கள் கவலைப்படவே இல்லை. விளைவு இந்தக் கட்டுரை எழுதப்படும் நாள் வரை திருவண்ணாமலை போக்குவரத்து நெரிசலால் மூச்சு முட்டிக் கொண்டிருக்கிறது.

தீபத் திருவிழா நெருங்க நெருங்க ஊர் மக்கள் பதட்டமானார்கள். பல இடங்களிலும் குழி தோண்டியும், அவசர கதியில் சாலை போட்டும் ஒரே திகில் தான். அமைச்சர் எ.வ.வேலுவின் சாதனையாக மார் தட்டிய மாடவீதிகளில் சிமெண்ட் சாலை பணியும் அரைகுறைதான் என்கிறார்கள் உள்ளூர் மக்கள். அதுவும் துர்க்கையம்மன் உற்சவத்துக்கு முதல் நாள் சின்னக்கடை தெருவில் ரோடு போட் டார்கள். உற்சவரை சுமக்கும் பக்தர்களின் கால்களை புது ஜல்லிகள் பதம் பார்க்கும் என்ற அடிப்படை கூட நெடுஞ்சாலை துறை அமைச்சரான எ.வ.வேலுவுக்குத் தெரியவில்லை,

அதேபோல, கார்த்திகை தீபம் உலகமெங்கும் இருக்கும் பக்தர்களுக்கானது. ஆனால், திருவண்ணாமலை தேரோட்டம் மாவட்ட மக்களுக்கானது. தேரோட்ட நாளில் அதிகாலை 4 மணி முதலே குழந்தைகளை கரும்பு தொட்டிலில் வைத்து இளம் பெற்றோர்கள் தேரோடும் மாடவீதிகளில் வலம் வருவது வழக்கம். அதற்கு பிரார்த்தனை தொட்டில் என்று பெயர். மன்மதனுக்கு நன்றி சொல்லும் நிகழ்வு என்று சொல்பவர்களும் உண்டு. எத்தனை நெரிசல் இருந்தாலும், கரும்பு தொட்டிலுடன் வருபவர்களுக்கு பக்தர்கள் வழி விடுவார்கள். ஆனால், தேரோட்ட நாள் அதிகாலை 4 மணிக்கே உள்ளூர் மக்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. கரும்பு தொட்டில்களை கோயில் மதில்சுவரை ஒட்டி போலீஸ்காரர்கள் திசை திருப்பினர். இந்து முன்னணி தொண்டர்களும் உள்ளூர் மக்களும் உடனடியாக களத் தில் குதிக்க, உள்ளூர் செய்தியாளர்கள் ஐஜி வரை செ ன்றனர். பிறகு காலை 9 மணிக்குத்தான் மாடவீதிகளில் கரும்பு தொட்டில்கள் வலம் வர தொடங்கின.

தீப பாஸ் கொடுத்த விவகாரம் இந்த ஆண்டு பூதாகரமாக வெடித்தது. ஈசான்ய லிங்கம் அருகே உள்ள யாத்ரி நிவாஸில் நூற்றுக்கணக்கான போலி பாஸ்கள் தயாரிக்கப்பட்டதை பாஜக மாவட்ட தலைவர் ரமேஷ் தலைமையில் பாஜக, இந்து முன்னணி தொண்டர்கள்



கையும் களவுமாக பிடித்தனர். அதேபோல, உதவி காவல் கண்காணிப்பாளர் பெயரில் 4 போலி பாஸ்கள் தயாரித்த பாபு, முனுசாமி என 2 பேரை போலீஸ் கைது செய்தது. அவர்கள் சொன்ன தகவலின் பேரில் கோயில் இணை ஆணையரின் கார் டிரைவர் சிலம்பரசன் விசாரிக்கப்பட்டார். ஆனால், அவர் மீது வழக்கு பதியவே இல்லையாம். காரணம், சொல்லித் தெரிய வேண்டுமா என்ன?

தீபத் திருவிழாவில் எம்.எல்.ஏ பேட்ஜ் குத்தி பல அரசியல் கட்சி பிரமுகர்கள் வலம் வந்தார்கள். ஆனால், உபயதாரர்களுக்கும், உள்ளூர் மக்களுக்கும் அனுமதி மறுப்பு. அதுவும் உள்ளூர் மக்கள் வீட்டை விட்டு வெளியே வருவதற்கே போலீஸ்காரர்களுடன் போராட வேண்டியிருந்தது. கோயிலில் மட்டுமே 15000 போலீஸ்காரர்கள் இறக்கி விடப்பட்டார்கள். இதனால் உள்ளூர் மக்கள் கார்த்திகை தீபம் கொண்டாட மிகவும் சிரமப்பட்டார்கள். கோயிலுக்குள் இறைவனுக்கு பூஜை செய்யும் அர்ச்சகர்களை விடாத அவலம் நடந்தது. கோயில் ஊழியர்களுக்கும் போலிஸ்காரர்களுக்கும் சண்டை ஏற்பட்ட வீடியோ வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியது.

**தீபத் திருவிழாவில் எம்.எல்.ஏ பேட்ஜ் குத்தி பல அரசியல் கட்சி பிரமுகர்கள் வலம் வந்தார்கள். ஆனால், உபயதாரர்களுக்கும், உள்ளூர் மக்களுக்கும் அனுமதி மறுப்பு.**

தீப நாளில் 2000 பேர் வரை மலை ஏற அனுமதிக்கலாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு, கடந்தசில ஆண்டுகளாகநடைமுறையில் இருக்கிறது. கடந்த ஆண்டு பெய்த பெருமழையால் மலையில் சரிவு ஏற்பட்டு 7 பேர் இறந்தனர். அதனால் அந்த ஆண்டு மக்கள் மலையேறுவது தடைப்பட்டது. இந்த ஆண்டும் மக்களை மலையேற விடக்கூடாது என்று முடிவெடுத்து ரகசியமாக வைத்துக் கொண்டனர். தீபத் திருவிழா இடையில் “டிட்வா” புயல் வந்தது. உடனே செய்தியாளர்களை அழைத்து, “மலையின் உறுதித்தன்மை குறைந்ததாக ஐஐடி நிபுணர்கள் சொல்கிறார்கள். அதனால், மழை இருந்தால் அனுமதியில்லை” என்று அவசர அவசரமாக அறிவித்தார். ஆனால், திருவண்ணாமலை சுற்று வட்டாரத்தில் எதிர்பார்த்த மழை இல்லை. ஆனால், அரசோ அதை காரணம் காட்டி உயர்நீதிமன்ற உத்தரவை கிடப்பில் போட்டது.

அதே நேரத்தில், உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் யானை ராஜேந்திரன் தாக்கல் செய்த மனுவின்படி, மலையில் இருக்கும் 7000 வீடுகளை அப்புறப்படுத்த நீதிபதிகள் ஒரு குழுவை அமைத்தனர். ஆனால் மாவட்ட நிர்வாகமோ குடியிருப்புவாசிகளுக்கு நோட்டீஸ் அனுப்பியதோடு சரி, அவர்களை அப்புறப்படுத்தவோ, மாற்று இடம் யோசிக்கவோ இல்லை, ஆக்கிரமிப்பாளர்களை பாதுகாக்க இது திராவிட மாடல் அரசாயிற்றே!

இப்படியாக தமிழகத்தில் உள்ள கோயில் திருவிழாக்களை முடக்கி தமிழர்களின் பாரம்பரிய உரிமைகளை பறிக்கும் விதமாக திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. அவர்களின் அராஜக போக்குக்கு ஒருங்கிணைந்த இந்து வாக்கு வங்கியே தீர்வு!




# அரசியல் உலா

- கரிகாலன்

## மாதங்களில் இது மார்கழி

ஆதாரப்பூர்வமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை, உணர்ச்சிப் பிரவாகமாகப் பொழிய வேண்டிய தேவையும் இல்லை. அறிவுப்பூர்வமாக உணர வேண்டும், உளப்பூர்வமாக எழுத வேண்டும், சுவாரஸ்யக் குறைவு இன்றி மார்கழிப் பொங்கல் போலச் சூடாகப் பரிமாற வேண்டும். இதை எல்லாம் உட்கார்ந்த இடத்திலேயே கட்டுரையாக எழுதி விடலாம் தான். ஆனால் கண்டதை எழுதவும், கேட்டதைச் சொல்லவும் நாமும் தினசரி உலா போக வேண்டி இருக்கிறது.



அங்காடித் தெருவில் தான் அன்றாடம் உலா போகிறேன். காலையில் பலரும் கடை திறக்கும் முன்பே அங்கே நடைபயில்வோர் ஏராளம். உணவகங்கள் அந்த நேரம் அரசியல் அரங்கமாக இருக்கும். உள்ளூர் அரசியல் முதல் உலக அரசியல் வரை எல்லாமே அலசப்படும் இடம் அது.

“என்னய்யா, பரபரப்பு ஏதும் இல்லாம பொசுக்குன்னு முடிஞ்சு போச்சே பொதுக்குழு!'' அங்கலாய்த்தார் ஒரு நண்பர். பலருக்கும் அப்படி ஒரு ஏமாற்றம் இருந்திருக்கும். “அது இல்லய்யா இந்த 2025 ல எந்த முடிவு எடுத்தாலும் ரொம்ப நாள் நீடிக்காதாம்ல. அதான் அவங்க காத்திருக்காங்க'' என்று காரணம் கற்பித்தார் மற்றவர்.

எந்த ஜோசியர் இப்படிச் சொன்னார் என்று தெரியவில்லை. ஒருவேளை அதனால் தான் அனைத்து அரசியல்கட்சிகளும்மௌனம்கடைபிடிக்கிறார்களோ இல்லையோ, நிதானம் கடைப்பிடிக்கிறார்கள், நீண்ட இடைவெளி விட்டிருக்கிறார்கள் போல. எப்படியோ இந்த வாரக் கட்டுரையில் எழுத ஒரு புதிய கோணம் கிடைத்துவிட்டது.

ஆக பாட்டாளி மக்கள் கட்சி யாருக்குச் சொந்தம் என்று இப்போதைக்கு முடிவாகாது, அன்புமணி, அவரது தந்தை மருத்துவர் ராமதாஸ் இருவருக்குமான இடைவெளி இந்த மாதமும் குறையப்போவதில்லை என்று நாம் எடுத்துக் கொள்ளலாம்.

காங்கிரஸ் மட்டுமல்ல இன்னும் பல கட்சிகள், எதிர்காலத்தைத் தொலைத்த ஏதாவது சில பல தலைவர்கள் நம்மைத் தேடி வரலாம் என தவெக காத்துக் கொண்டிருக்கலாம்.

நம்மிடம் கூடுதல் இடம் கேட்கத்தான் காங்கிரஸ் இப்படி நாடகமாடுகிறதா இல்லை நிஜமாகவே அவர்கள் விஜய் கட்சியுடன் போய்விடுவார்களா என்று திமுக தலைவர் இன்னும் சில காலம் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டிருக்கலாம்.

விட்டால் இந்த மாசமே தங்கள் ஆட்சிக்கு முடிவுரை எழுதி விடுவார்கள் என்ற பயத்தில் திமுக காவல்துறையைத் தூண்டிவிட்டு இன்னும் பல ஊடகவியலாளர்களைக் கைது செய்து கொண்டிருக்கலாம்.

தங்களது சொகுசு நாற்காலியில் அமர்ந்து கொண்டு விசிக இன்னும் சில காலம் பிசிறு தட்டிப் போன வாதங்களால் விசிறி விட்டுக் கொண்டிருக்கலாம்.

தானேதூக்கிஎறிந்தடார்ச்லைட்டைகமலஹாசன் மாதக்கணக்கில் தேடிக் கொண்டிருக்கலாம். டார்ச் கிடைத்து விட்டால் அதை யார் மீது அடிப்பது என்று அது வரை யோசித்துக் கொண்டிருக்கலாம்.


கரைந்து போய்விட்ட கம்யூனிஸ உண்டியல் குலுக்கிகள் அகல வாய்க் கொண்ட உண்டியலுக்கு ஆசைப்பட்டுக் கனவில் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கலாம்.

தேமுதிகவின் ராஜ்யசபா ஒதுக்கீட்டு வேண்டுதல் பேரங்கள் திரைமறைவிலேயே தொடர்ந்து கொண்டிருக்கலாம்.

நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் இன்னும் சில மேடைகளில் தேசியக் கனலை முழங்கிக் கொண்டிருக்கலாம்.

தனக்கான சந்தர்ப்பம் வரும் என சசிகலா எதிர்பார்க்கலாம், அமமுக தினகரன் அமைதி காக்கலாம், ஓ. பன்னீர்செல்வம் ஓய்வு எடுக்கலாம், எடப்பாடி பழனிச்சாமி எதை வேண்டுமானாலும் பேசிக் கொண்டிருக்கலாம்.

கார்த்திகை தீபத்தைப் போல



தைப்பூசத்திலும் பல தடைகள் வரலாம், வந்தால் ஹிந்து இயக்கங்களுடன் இணைந்து போராடலாம், வழக்குத் தொடுக்கலாம் என்று பாஜக தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கலாம்.

அவர்கள் அனைவருக்கும் இத்தனை "கலாம்" சொன்ன பிறகு வாசகர்களுக்கு ஏதும் இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். உங்களுக்கும் ஒன்று சொல்கிறேன். அதுவரை நீங்கள் இந்தக் கட்டுரையை, ஸ்ரீதமிழ் பத்திரிகையை மீண்டும் மீண்டும் வாசித்துக் கொண்டிருக்கலாம்.

# அரசியல் திருப்புமுனை

குன்றின் மேலிட்ட விளக்கு பளிச்சென்று ஊருக்கே வெளிச்சம் காட்டும் என்று சொல்வார்கள். தீபத்தூண் மீது ஏற்றப்படாத விளக்கு திமுக அரசின் ஹிந்து விரோத கயமைத்தனத்தை தேசத்துக்கே வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது.

திருப்பரங்குன்ற விவகாரம் தமிழக அரசியலில் ஒரு திருப்புமுனை என்றால், ஆர்.எஸ்.எஸ் தொடர்புடைய விஜில் அமைப்பின் நிகழ்ச்சியில் சீமான் பேசியது மற்றொரு திருப்புமுனை.

மஹாகவியின் பிறந்த நாளில் "பாரதி கண்ட வந்தே மாதரம்" என்ற தலைப்பில் பேச சிறப்புப் பேச்சாளராக மேடை ஏறினார் சீமான். அரங்கில் கூடியிருந்த அவரது தொண்டர்களுக்கும், பாரதி அன்பர்களுக்கும் மத்தியில் அவர் என்னதான் பேசப் போகிறார் என பலத்த எதிர்பார்ப்பு.

கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக என்ற வள்ளலாரின் வரிகளை மேற்கோள் காட்டிய சீமான், தான் யாரையும், எதையும் ஒழிக என்று சொல்லப்போவதில்லை. நல்லவை வாழ்க என்று சொல்வது மட்டும் தான் தனது தரப்பு என்று குறிப்பிட்டார்.



இயந்திரத் துப்பாக்கிகளைப் பற்றி ஏதும் குறிப்பிடாதது, அறிவாயுதத்தைப் பயன்படுத்தி எதிரிகளை வெல்வேன் என்றது, துளியும் பிசகின்றி மேடையில் தேசியம் பேசியது, பிரிவினை பேசாதிருந்தது, நாத்திகத்தைப் புறந்தள்ளியது, தமிழ் மொழியையும் மாநில நலன்களையும் மேன்மைப் படுத்தியது என சீமான் தனது பேச்சால் அனைவரையும் வென்று விட்டார்.

அழைப்பிதழில் அவரது பெயரைப் பார்த்த மாத்திரத்திலேயே அதிர்ச்சி அடைந்தவர்கள் கூட அவர் பேசியதைக் கேட்டு அவரது அரசியல் பயணத்தில் இத்தகைய முதிர்ச்சி வந்திருப்பதைப் பாராட்டி வருகின்றனர்.

நான் எப்பொழுதும் சொல்வதுண்டு "படத்தின் உச்சகட்டக் காட்சி இறுதியில் தான் வர வேண்டும்" என்று. எடுத்த எடுப்பிலேயே அதைச் சொல்லிவிட்டால் படம் பார்க்கும் சுவாரஸ்யம் இருக்காது. பாண்டவ சேனையின் பலம் கூடுவதும், கௌரவ சேனையின் பலம் குறைவதுமாக இது போன்ற சில முன்னோட்டங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் அவ்வப்போது வந்து கொண்டே இருக்கும். ரசியுங்கள். இன்னும் பல ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

நம் மரபுப் படி மார்கழியில் கல்யாணம் செய்ய மாட்டார்கள் என்றாலும் பெண் பார்க்கும் படலமும், கல்யாணப் பேச்சு வார்த்தையும், நிச்சயதார்த்த வேலைகளும் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கும். நாம் காத்திருப்போம், தை பிறந்தால் வழி பிறக்கும்! மார்கழிப் பனி மட்டுமல்ல, திராவிட மாடல் பிணியும் அகலும்!

# கோயில் நிதி  சுவாமிக்கே

— இராஜேஷ்

## உச்சநீதிமன்றம் ஓங்கிக் குட்டி உத்தரவு

கடவுளின் தேசம் என்று அழைக்கப்படும் கேரள மாநில வழக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு நாட்டையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. கோயிலின் நிதி கடவுளுக்கு மட்டுமே உரிமை, கோயில் பூஜை, வழிபாடு சார்ந்த செலவினங்களுக்கு மட்டுமேயன்றி வேறு எதற்கும் பயன்படுத்தக் கூடாது என்ற தீர்ப்பு தான் அது.

**வழக்கின் பின்னணி**

கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் திருநெல்லி தேவசம் போர்டுக்கு கீழ் உள்ளது மஹா விஷ்ணு கோயில். கோயிலின் உண்டியல் மற்றும் நன்கொடைகள் பணத்தை உள்ளூரில் உள்ள மனந்தவாடி நகர கூட்டுறவு வங்கி மற்றும் திருநெல்லி சேவை கூட்டுறவு வங்கிகளில் டெபாசிட் செய்திருந்தது. ஃபிக்ஸ்டு டெபாசிட் செய்த நிதி முதிர்வுக்கு வந்த பின்பும் தேவசம் போர்டுக்கு வங்கிகள் திருப்பித் தரவில்லை.சிலகாலம் வரை பொறுத்துப் பார்த்த தேவசம் போர்டு வழக்கு தொடுத்தது. கூட்டுறவு வங்கிகள் லாபகரமாக செயல்படவில்லை,பணநெருக்கடியில் சிக்கியிருப்பதால் இப்போதைக்குத் திருப்பி தர இயலாது என வாதத்தை முன்வைத்தது. ஆனால் உயர்நீதிமன்றம் இந்த வாதத்தை ஏற்க மறுத்ததோடு, ரிசர்வ் வங்கி கூட்டுறவு வங்கி நஷ்டத்தில் இயங்கினால் அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியுள்ளது, கோயில் நிதியை வைத்து ஈடுகட்ட சொல்லவில்லை எனவும் இரண்டு மாதங்களுக்குள் வைப்பு நிதி முதிர்வுத் தொகையை திருப்பி செலுத்தவும் உத்தரவிட்டது.

**மேல்முறையீடு**

உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக மனந்தவாடி கூட்டுறவு சங்கமும், திருநெல்லி கூட்டுறவு சங்கமும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. கடந்த டிசம்பர் 5ம் தேதி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் மற்றும் நீதிபதி ஜோய்மால்ய பக்கி அமர்வுக்கு வந்த வழக்கில் தான் கோயிலுக்குச் சொந்தமான நிதி கடவுளுக்கும், பூஜை, வழிபாடு விவகாரங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என அதிரடியாக உத்தரவிட்டுள்ளது. கோயில் நிதி கடவுளுக்கானது, அதை சேமிக்க, பாதுகாக்க மற்றும் கோயில் தேவைக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என மிகத் தெளிவாக



உத்தரவிட்டுள்ளது.மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்திருப்பதோடு மேற்கொண்டு கால அவகாசம் கொடுக்க முடியாது என்றும், முதிர்வு தொகையை தேவசம் போர்டுக்குத் திருப்பி செலுத்த உத்தரவிட்டுள்ளது.

**கடவுளுக்கே சொந்தம்**

கோயிலுக்கு சொந்தமான நிலங்கள், பணம், நகைகள் என அனைத்துமே அக்கோயிலின் மூலவருக்கே உரிமை. அந்த கோயிலின் மேற்பார்வையிடும் தேவசம் போர்டு, கோயில் நிதி சரியான பயன்பாட்டிற்கு செலவிடப்படுகிறதா? என்பதை கண்காணிக்கும் வேலை மட்டுமே. பக்தர்கள் தங்கள் வேண்டுதலுக்கு, கோயிலின் நித்திய பூஜைக்கு கொடுக்கப்படும் நிதி, அதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற ஆன்மிகவாதிகளின் குரல் இன்று உச்சநீதிமன்றம் வழியே உத்தரவாக கிடைத்திருப்பது பக்தர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை தந்துள்ளது.

**திராவிட மாடல் திருந்துமா?**

திருநெல்லி தேவசம் போர்டுக்காக வழங்கப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்பு தமிழகத்திற்கும் பொருந்தும் தானே.

ஆனால் இதிலும் சட்ட ஓட்டைகளைப் பயன்படுத்தி அதன் வழியே கோயில் நிதியை உருவிட ஆகச்சிறந்த வழக்கறிஞர்கள் மூலம் HR&CE க்கு அறிவுரை வழங்கிட திட்டமிடுவார்கள். அதற்கு சன்மானமாக கோயில் நிதியிலிருந்தே வழங்கவும் செய்வார்கள்.

அது தானே ஆன்மிக புரட்சி ஆட்சி.

**கோயிலுக்குச் சொந்தமான நிதி கடவுளுக்கும், பூஜை, வழிபாடு விவகாரங்களுக்கு மட்டுமே பயன்படுத்தேப்பட வேண்டும் என அதிரடியாக உத்தரவிட்டுள்ளது**

# திண்டுக்கல்லிலும் தீபம் ஏற்றத் தடை - நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்த தி.மு.க

ப்ரியா வெங்கட்

தமிழகத்தில் கார்த்திகை மாதம் என்றாலே நினைவிற்கு வருவது அனைத்து வீடுகளிலும், கோவில்களிலும் தீபம் ஏற்றும் தீப திருவிழா தான்!

திராவிட ஆட்சி இவ்வருடம் ஹிந்துக்களுக்கு தீப திருவிழாவை போராட்ட திருவிழாவாக மாற்றியுள்ளது. ஏதோ, திருப்பரங்குன்றம் தீபத் தூணில் மட்டும் தான் ஹிந்துக்களை தீபம் ஏற்ற விடாமல் இந்த அரசு தடுத்ததா என்றால் இல்லை. திண்டுக்கல் பெருமாள்கோவில்பட்டியிலும் ஹிந்துக்களை தீபம் ஏற்றவிடவில்லை இந்த தி.மு.க அரசு.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டி அருகே இருக்கும் பெருமாள்கோவில்பட்டியில், வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வழிபடும் மண்டு கருப்பண்ண ஸ்வாமி கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் தான் தீபம் ஏற்ற அனுமதி மறுத்துள்ளது தமிழக அரசு. காரணம் என்ன என்பதைக் குறித்து இனி விரிவாக பார்ப்போம்.

பெருமாள்கோவில்பட்டி ஹிந்து வன்னியர்களும், கிறிஸ்தவ வன்னியர்களும் வாழும் ஒரு பகுதியாகும். அதிகளவில் நடந்த மதமாற்றத்தால் இங்கு கிறிஸ்தவ வன்னியர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கின்றனர். இந்நிலையில் இங்கு அமைந்துள்ள காளியம்மன் கோவில் அருகில், சர்வே எண் 780/12 என்ற இடத்தில் தான் இந்த மண்டு கருப்பண்ண ஸ்வாமி கோவில் அமைந்துள்ளது. FMB ஆவணத்திலும் மண்டு கருப்பண்ண ஸ்வாமி கோவில் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும் இந்த இடத்தில் ஹிந்துக்கள் வழிபட தடை இருந்து வருகிறது. காரணம் கிறிஸ்தவர்கள் எதிர்ப்பு! இதன் காரணமாக அங்கு பல காலமாக வழிபட முடியாமல் அந்த இடமே புதர் மண்டி கிடக்கும் நிலைக்குச் சென்றுள்ளது. அந்த இடத்தை சுற்றி பேரிகார்ட் போட்டு மூடி வைத்துள்ளனர் காவல்துறையினர். இந்நிலையில், ஹிந்துக்கள் பல முறை உள்ளூர் நிர்வாகத்திடம் மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்காத நிலையில், நீதிமன்றத்தை அணுகியுள்ளனர்.

திரு சித்தன் பால்ராஜ் என்பவர் ஹிந்துக்கள் சார்பாக, மண்டு கருப்பண்ண ஸ்வாமி கோவில் மீண்டும் திறக்கப்பட்டு வழிபாடுகள் நடத்தவும், கார்த்திகை தீபம் ஏற்றி சொக்கபனை கொளுத்தவும் அனுமதியளிக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடுத்தார். இந்த வழக்கு நீதிபதி திரு.ஸ்வாமிநாதன் அவர்கள் அமர்வுக்கு வந்தது.

இரு தரப்பு வாதங்களையும் விசாரித்த நீதிபதி, ஹிந்துக்கள் அங்கு வழிபடவும், கார்த்திகை தீபம் ஏற்றவும் அனுமதியளித்து அதற்கான நடவடிக்கையை காவல்துறையை எடுக்கும்படியும், ஹிந்துக்கள் கார்த்திகை தீபம் ஏற்றியதை உறுதி செய்ய வேண்டும் என்றும் **02.12.2025** அன்று உத்தரவிட்டார். அதோடு மட்டுமல்லாமல் அன்று இரவே அந்தப் பகுதியை சுத்தப்படுத்தவும், அப்பொழுது தான் அடுத்த நாள் கார்த்திகை தீபம் ஏற்ற வசதியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டு அதற்கான அனுமதியை ஹிந்துக்களுக்கு வழங்கினார். ஆனால் நடந்தது என்ன?

**மனுதாரர் ஒரு கல்லை தெய்வமாக வழிபடுகிறார் என்றால் அது அவரோட நம்பிக்கை அதை எப்படி நீங்கள் கேள்வி கேட்க முடியும், நீதியரசர் ஜி.ஆர். ஸ்வாமிநாதன்**

காவல்துறையினரிடம் மக்கள் பேரிகார்டை நீக்க சொன்ன போது இதோ முடித்து விடலாம், காத்திருங்கள் என்று கூறி ஹிந்துக்களை ஏமாற்றி 144 தடையுத்தரவு போட்டதோடு, அடுத்த நாள் காலை 03.12.2025 அன்று நீதிபதி திரு.ஸ்வாமிநாதன் அவர்கள் உத்தரவை எதிர்த்து நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். தனி நீதிபதியின் இந்த தீர்ப்பால் இரு தரப்பினரிடையே பிரச்சினை எழும் சூழல் உள்ளது, ஏற்கனவே ஒரு கொலையும், 21 வழக்குகளும் பதிவாகி உள்ளது அதனால் இதற்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்று வாதிட்டனர்.

ஆனால், டிவிஷன் பெஞ்ச் நீதிபதிகளோ, சட்ட ஒழுங்கை பராமரிக்க வேண்டியது அரசின் கடமை, உங்களால் முடியவில்லை என்றால் எழுத்துபூர்வமாக எழுதிகொடுத்து விட்டு செல்லுங்கள் என்று காட்டமாக கூறி, அரசு தரப்பிலான மேல் முறையீட்டை ஏற்க மறுத்து விட்டனர்.

ஏற்கனவே நீதிபதி திரு. ஸ்வாமிநாதன் அவர்கள் முன் இந்த வழக்கு வந்த போது கூட, சில கேள்விகளை எழுப்பியதோடு, சில முக்கியமான விஷயங்களையும் குறிப்பிட்டிருந்தார்.

கிறிஸ்தவர்கள் சார்பாக கொடுக்கப்பட்ட மனுவில், இந்த இடத்தில் ஒரு கற்களால் ஆன ஒரு மேடை மட்டுமே உள்ளது ஹிந்துக்கள் குறிப்பிடுவது போல் கோவில் எதுவும் இல்லை இவர்கள் வேண்டுமென்றே அந்தப் பகுதியின் அமைதியை குலைக்கும் விதமாக இந்த வழக்கை





தொடர்ந்திருக்கிறார்கள் அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார் அதற்கு நீதிபதி ஸ்வாமிநாதன் அவர்கள், மனுதாரர் ஒரு கல்லை தெய்வமாக வழிபடுகிறார் என்றால் அது அவரோட நம்பிக்கை அதை எப்படி நீங்கள்கேள்விகேட்கமுடியும்,மேலும் பல வழக்குகள் இருதரப்பினராலும் தொடரப்பட்டுள்ளது என்றாலும், அவை அனைத்துமே கிறிஸ்தவர்கள் காளியம்மன் கோவிலுக்கு எதிராக அவர்கள் சப்பரத்தை நிறுத்துவது மற்றும் அவர்களின் ஊர்வலம் சம்பந்தமானதே தவிர மண்டு கருப்பண்ண ஸ்வாமி கோவிலை பராமரிப்பது சம்பந்தமானதோ அல்லது கார்த்திகை தீபம் ஏற்றுவது தொடர்பானதோ இல்லையே என்றும் குறிப்பிட்டிருந்தார்.

கிறிஸ்தவ சமுதாயம் இந்த கிராமத்தில் பெரும்பான்மையாக இருந்தாலும் குறிப்பிட்ட இந்த இடத்திற்கு அவர்களுக்கு உரிமை இல்லையே. அதனால், ஹிந்துக்கள் அங்கு தீபம் ஏற்றுவதால் கிறிஸ்தவர்களின் உரிமை எவ்வாறு பாதிக்கப்படும் என்று நீதிபதி கேள்வி எழுப்பியிருந்தார்? அதே போன்று இந்த பேரிகார்டுகள் நீக்கப்பட்டு மக்கள் வழிபாடு நடத்தினாலும் யாருக்கும் பாதிப்பு ஏற்படபோவதில்லை என்றும் குறிப்பிட்டார். ஆனால், அதே நேரத்தில் இந்த பகுதியில் வேறெந்த கட்டுமான பணிகளையும் ஹிந்துக்கள் மேற்கொள்ள கூடாது என்ற கட்டுபாட்டையும் விதித்திருந்தார். FMB ஆவணத்தில் மண்டு கருப்பண்ண ஸ்வாமி கோவில் என்று குறிப்பிட்டு இருக்கும் போது அதை பேரிகார்டு போட்டு மூடி வைத்திருப்பது சரியல்ல. ஹிந்துக்களுக்கு இந்த பகுதியில் வழிபட அனுமதி உண்டு என்றும் கூறியிருந்தார்.

**FMB ஆவணத்தில் மண்டு கருப்பண்ண ஸ்வாமி கோவில் என்று குறிப்பிட்டு இருக்கும் போது அதை பேரிகார்டு போட்டு மூடி வைத்திருப்பது சரியல்ல. ஹிந்துக்களுக்கு இந்த பகுதியில் வழிபட அனுமதி உண்டு என்றும் கூறியிருந்தார்.**

இத்தனை விளக்கமாக கேள்வி கேட்டு, காவல்துறை, அறநிலையத்துறை, வருவாய்துறை, தாசில்தார் ஆகியோருக்கு உத்திரவிட்ட பின்பும் செயல்படுத்தாமல் அரசு தரப்பு மேல் முறையீடு செய்ய அதை டிவிஷன் பெஞ்ச் ஏற்க மறுத்த பின்னரும் 144 தடையுத்தரவை காட்டி ஹிந்துக்களை, தீப திருநாளான 3.12.2025 அன்று தீபம் ஏற்றவிடவில்லை இந்த திராவிட மாடல் அரசு அதிகாரிகள்.

திருப்பரங்குன்றத்தில் மட்டுமல்லாமல், திண்டுகல்லிலும் இந்த அரசு நீதிமன்ற அவமதிப்பை செய்துள்ளது.

இந்த கோவில் தொடர்பான உண்மைகள் வெளிவந்த நிலையில், இந்த இடம் புதர் மண்டி கிடக்கும் இடம், இங்கு வெறும் ஒரு கல் தான் இருக்கு, நாங்க இங்கெல்லாம் பொண் கொடுத்து பொண் எடுத்து நல் உறவாக தான் அமைதியாக இருக்கோம். ஒரு பிஜேபிகாரர், இருக்கார் அவரால் தான் இப்ப பிரச்சினை என்றெல்லாம் கருத்துருவாக்கம் செய்து வீடியோக்களை வெளியிட்டு வருகின்றனர் கிறிஸ்தவர்கள். இதே போன்று இந்த தீர்ப்பை வழங்கியதற்காக நீதிபதி ஸ்வாமிநாதன் அவர்களையும் விமர்சித்து வருகின்றனர்.

அமைதியாக மாமன் மச்சான் உறவோடு தான் நாங்க பழகுகிறோம் என்றால், 21 வழக்குகள் போட்டப்பட்டிருக்கிறது, ஒரு கொலை நடந்திருக்கிறது என்று காவல்துறை ஏன் நீதிமன்றத்தில் கூறியது?

தமிழகத்தில், ஹிந்துக்களின் வழிபாட்டு உரிமை தொடர்ந்து பறிக்கப்பட்டு ஹிந்து இன அழிப்பு நடைபெற்று வருவதையே இது காட்டுகிறது! இதற்கு தமிழக அரசும் உடந்தையாக இருந்து வருகிறது! ஹிந்துக்கள் நீதிமன்றம் சென்று நீதியை பெற்றாலும் கூட அதை அமல்படுத்த முடியாது என்கிறது அரசு! ஹிந்துக்களுக்கு நீதி கிடைக்குமா?

**நீதிபதி ஜிஆர் சுவாமிநாதன் ஆர்எஸ்எஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர் - முன்னாள் நீதிபதி ஹரி பரந்தாமன்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அப்போ உங்களையும், சினிமா புகழ் முன்னாள் நீதிபதி சந்துருவையும், தாலி அறுக்கும், திருமணம் கடந்த உறவை ஆதரிக்கும் திடல் இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று அழைக்கலாமா ?

**ஆர்எஸ்எஸ் என்பது முஸ்லிம், கிறிஸ்தவர்களுக்கு எதிரானது அல்ல- திருச்சியில் மோகன் பாகவத் பேச்சு**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

இந்த நாட்டிற்கு துரோகம் இழைப்பவர்களுக்கு எதிரானதுனு சொல்றிங்க.... ஆனா பாருங்க அமைதி மார்க்கமும், அன்பு மார்க்கமும் இதை ஒரு போதும் நம்பப் போவதில்லை.....

**ஆர்எஸ்எஸ், சங்கபரிவார் அமைப்புகள் உலகத்திற்கே எதிரிகள் - பேரா.அருணன்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

உனக்கு என்னப்பா நீ ........
............................ என்ன
வேணாலும்
சொல்லலாம்.....
( சீமானை நினைவுகூர்வோம்)

**எனது ஆதரவின்றி இனி யாரும் மே.வங்கத்தில் ஆட்சியமைக்க முடியாது - ஹுமாயூன் கபீர்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

மம்தா, ஸ்டாலின், ரேவந்த் ரெட்டி, அகிலேஷ், பினராயி இப்படி உங்கள் நலனில் மட்டுமே அக்கறை கொண்டவர்கள் இருக்கும் வரை.........
பொற்காலம் உங்களுக்கு,
போர்களம் எங்களுக்கு....




**- நா.பாஸ்கரன்**

**ரத்த தியாகத்தில் வளர்ந்த இயக்கம் திமுக என்ற எஃகு கோட்டை - வைகோ**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

உண்மைதான், மொழியால் தூண்டப்பட்டு பலியானவர்கள், சிதம்பரம் பல்கலை மாணவர் உதயகுமார், ஆலடி அருணா, தா.கிருட்டிணன், தினகரன் பத்திரிகை அலுவலகம் என எண்ணற்றவர்களின் Bloodshed ஆல் உருவான கோட்டைதான்.

**தந்தைக்குச் சிலை முக்கியமா? அரசுப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் முக்கியமா? - அண்ணாமலை கேள்வி**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

பள்ளிகளுக்கு செலவு செய்வதற்கு மாற்றாக, தந்தைக்கு அரசின் செலவில் சிலையை வைத்தால், இவர் யார் ? எப்படி வாழ்ந்தார் ? என்ற வரலாற்றை அறிந்து மாணவச் செல்வங்கள் பயன்பெறுவார்கள். திராவிடம் வளர்க்கும் தலைமுறை பாரீர்.. அப்டினு பிரச்சாரம் பண்ணலாம்....

**நீ அரசியலுக்கு வந்தால் சேகர்பாபுவை போல இருக்க வேண்டும் என அப்பா கூறினார் - நடிகர் சத்யராஜ் மகள் திவ்யா**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

பெரிய பதவிக்கெல்லாம் முதல் குடும்பத்து பிள்ளைங்க, பேரப்பிள்ளைங்க, கொள்ளு பேரப்பிள்ளைங்கனு வருவாங்க. எடுபுடி வேலைக்கு ஆள் தேவைப்படும்னு பொறுப்பான அறிவுரை தந்திருக்காரு திடல் ஆதரவாளர்.

**கலைஞர் இதயத்தில் எனக்கென்று ஒரு தனி இடம் இருந்தது - ரஜினிகாந்த்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அவரே அண்ணாவிடம் இரவலாக இதயம் வாங்கி காலத்தை ஓட்டியவர். எம்.எல்.ஏ, எம்.பி சீட் கொடுக்கவில்லை என்றாலும், எல்லோருக்கும் இதயத்தில் இடம் கொடுத்த இன்பாவின் கொள்ளு தாத்தா உங்களுக்கும் குடுத்துருக்காரு..... அவ்ளோதான்....

# திமுகவின் சிறப்பு பூஜையும், கோயிலை சீரழிக்கும் அறநிலையத்துறையும்

- ராயன்

திருப்பரங்குன்றம் மலையில் தீபத் தூணில் விளக்கேற்ற வேண்டும் என பக்தர்கள் நீதிமன்றத்தை நாடி அதற்கான தீர்ப்பையும் பெற்று வந்தாலும், அதை நிறைவேற்ற விடமாட்டோம் என சண்டித்தனத்துடன் மேல்முறையீடு செய்தது ஹிந்து சமய அறநிலையத்துறை.மேல்முறையீட்டிலும் ஹிந்துக்களுக்கு சாதகமாக தீர்ப்பு வந்த நிலையிலும் பக்தர்களை தடுத்து தீபத் தூணில் தீபம் ஏற்ற விடாமல் தடுத்து திராவிட மாடல் ஆன்மிக புரட்சி சாதனை புரிந்தது.

இப்படி முருகனின் முதற்படையாம் திருப்பரங்குன்றத்தில் உண்மையான பக்தர்களை வஞ்சித்து, துரோகம் செய்த அறநிலையத்துறை ஐந்தாம்படை வீடான திருத்தணியில் முதல்வர் குடும்ப மாப்பிள்ளைக்காக சிறப்பு, ரகசிய பூஜை நடத்தியதோடு அங்கும் முருக பக்தர்களை 3 மணி நேரம் கால் கடுக்க காத்திருக்க வைத்து கொடுமையை அரங்கேற்றியது. டிசம்பர் 3ல் திருத்தணி சுப்ரமண்ய சுவாமி திருக்கோயிலில் 108 தீபங்களை ஏற்றும் சிறப்பு பூஜையில் ஆட்சியிலும், கட்சியிலும் பொறுப்பில் இல்லாமல் இருந்தாலும் அறிவிக்கப்படாத நம்பர் ஒன் அதிகாரமட்டம் என்று சொல்லப்படும் சபரீசனுக்காக இந்த சிறப்பு தீபம் ஏற்றும் நிகழ்வையும், ரகசிய பூஜையையும் அறநிலையத்துறை நடத்தியதாக பக்தர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

**அறநிலையத்துறை ஐந்தாம்படை வீடான திருத்தணியில் முதல்வர் குடும்ப மாப்பிள்ளைக்காக சிறப்பு, ரகசிய பூஜை நடத்தியதோடு அங்கும் முருக பக்தர்களை 3 மணி நேரம் கால் கடுக்க காத்திருக்க வைத்து கொடுமையை அரங்கேற்றியது.**

சபரீசனுடன் அவரது நண்பர் வெங்கட் மற்றும் ஆந்திராவைச் சேர்ந்த தொழில்முறை நண்பர்கள் என 100 பேர் மட்டும் அனுமதிக்கப்பட்ட இந்த பூஜையில், விரதமிருந்து காவடி எடுத்து வந்த சாமானிய பக்தர்களுக்கு அனுமதி மறுத்ததோடு, இவர்களின் பூஜை முடியும் வரை சுமார் 3 மணி நேரம் காக்க வைக்கப்பட்டதும் சர்ச்சையானது.இந்த நிகழ்ச்சியை வீடியோ எடுக்க முயற்சித்த ஊடகங்களுக்கு செல்லமாக மிரட்டல் விடுக்கப்பட்டதால் அவர்கள் பதிவு செய்யவில்லை என்பது கூடுதல் தகவல். மலைக்கோயிலுக்கு சாதாரண பக்தர்கள் வேனிலோ, காரிலோ வந்தால் அனுமதி மறுத்து ஸ்ட்ரிக்ட் ஆபீச ராக மாறுகிறது கோயில் நிர்வாகம். ஆனால் சபரீசனின் ஆந்திர நண்பர்களுக்காக கோயில் வரை அனுமதித்தது எப்படி? இப்படி சாதாரண பக்தர்களை வஞ்சித்தும், அதிகாரமட்ட குடும்பத்திற்கு சாமரம் வீசும் இந்த அறங்கெட்ட துறையின் செயல்பாடு நாளுக்கு நாள் ஹிந்து வழிபாட்டை தடுக்கும் துறையாகவே மாறிவிட்டது என பக்தர்களும், ஹிந்து முன்னணி பொறுப்பாளர் கராத்தே செல்வாவும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த ஆன்மிக புரட்சி ஆட்சியில் சேலத்தில் நடந்த சம்பவம் பக்தர்கள் மத்தியில் கடுங்கோபத்தை ஏற்படுத்தி போராட்டத்திலும் குதிக்கச் செய்தது. சேலம், அம்மாபேட்டை புகையிலை மண்டி பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் உள்ளது. மலைக்கோயில் செல்லும் பக்தர்களுக்காக அதன் அடையாளமாக குமரகிரி சுவாமி வளைவுத்தூண் நீண்ட காலமாக அப்பகுதியில் இருந்து வந்தது. இந்நிலையில் அங்கு வாகனங்கள் செல்வதற்கு இடையூறாக இருக்கிறது எனச் சொல்லி திமுகவின் 39வது டிவிஷன் கவுன்சிலரின் கணவர் சரவணன் இரவோடு இரவாக அந்த வளைவுத்தூணை இடித்து தரைமட்டமாக்கி விட்டார். அந்தப் பகுதியில் ஒரு கட்டிட வேலை நடந்து வந்ததால், இடிக்கப்பட்டது அங்கிருந்த பழைய கட்டிடம் என அலட்சியமாக இருந்த மக்களுக்கு காலையில் வந்து பார்த்த போது தான் குமரகிரி சுவாமி வளைவுத்தூண் சுக்குநூறாக இடிக்கப்படுள்ளது என தெரிய வந்தது.

ஆத்திரம் அடைந்த பக்தர்களும், பொதுமக்களும் ஒன்று கூடி போராட்டத்தில் குதித்தனர். இந்த போராட்டத்தில் ஹிந்து முன்னணியும் கலந்து கொண்டு மக்களை திரட்டியது. முன்னாள் அதிமுக எம்.எல்.ஏவும் பக்தர்களுடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டதால் வேறுவழியின்றி மன்னிப்பு கேட்ட திமுக கவுன்சிலர் நான் மீண்டும்

புதிதாக வளைவுத்தூணை கட்டித் தருகிறேன் என உறுதியளித்ததோடு, உடனடியாக வளைவுக்கான பூமி பூஜையும் நடந்துள்ளது. பக்தர்களின் உடனடி போராட்டத்தால் பயந்து போனது திமுக என்றாலும் தொடர்ந்து ஹிந்துக்களின் மனதை புண்படுத்தும் அதன் செயல்பாடுகள் குறைந்தபாடில்லை என்பதை எங்கள் மனதில் பதிய வைத்துள்ளோம் என்கின்றனர் பக்தர்கள்.

செங்கோட்டையிலும் இதே போன்று 150 வருட திருவிதாங்கூர் சமஸ்தானம் காலத்தில் கட்டப்பட்ட பழமையான ஹிந்து சிற்பங்கள் வடித்து வைக்கப்பட்ட வளைவுத்தூணையும், திமுக முஸ்லீம் தலைவர்களின் அழுத்தத்திற்கு அடிபணிந்து அதை அகற்றினர். அங்கும் வாகன போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது என்று சொல்லித்தான் அகற்றப்பட்டது. இதை எதிர்த்து மாவட்ட நிர்வாகத்திடம் முறையிட்டும் செவிடன் காதில் ஊதிய சங்காகத் தான் போனது. போக்குவரத்துக்கு இடையூறு என ஹிந்துக்களின் புராதன சின்னங்கள் இடிக்கப்படும் திராவிட மாடல் ஆட்சியில் மாநிலம் முழுவதும் பல இடங்களில் அரசு நிலத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கெபிகளோ, சர்ச்களோ, மசூதி, மதரஸாக்கள் இதே காரணங்களுக்காக இடிக்கப்பட்டுள்ளது என வெள்ளை அறிக்கை தர தயாரா? என சமூக செயற்பாட்டாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

திராவிட மாடல் ஆன்மிக புரட்சி ஆட்சியில் ஹிந்துக்களின் வழிபாட்டு உரிமையைத் தடுக்கும் அறநிலையத்துறை, கோயில் மூலம் கிடைக்கும் நிதியை சுருட்டுவதில் காட்டும் ஆர்வம் அளப்பரியது.






**திராவிட மாடல் ஆன்மிக புரட்சி ஆட்சியில் ஹிந்துக்களின் வழிபாட்டு உரிமையைத் தடுக்கும் அறநிலையத்துறை, கோயில் மூலம் கிடைக்கும் நிதியை சுருட்டுவதில் காட்டும் ஆர்வம் அளப்பரியது.**

சேலத்தில் உள்ள மிகப்பிரசித்தி பெற்ற சின்னதிருப்பதி என்று அழைக்கப்படும் ஸ்ரீ பிரசன்ன வெங்கடரமண கோயில் கும்பாபிஷேகம் நடந்து முடிந்துள்ளது. கோயிலில் புனரமைப்பு பணிகள் முழுமை பெறாத நிலையில் அவசர அவசரமாக கும்பாபிஷேகத்தை நடத்தி முடித்துள்ளனர். பாதியில் நிற்கும் கட்டுமான வேலைகள் அப்படியே இருப்பது ஒருபுறம் என்றால், ஆலயத்தின் உட்பிரகாரங்களில் ஒரு குடும்பத்தினர் கிரானைட் நன்கொடை அளித்து கட்டியதாக எல்லா இடங்களிலும் கல்வெட்டுகளை பதித்துள்ளனர். ஆலயத்தின் உள்ளே தனிநபர்களின் கல்வெட்டுகள் பதிக்க எப்படி அனுமதித்தது அறநிலையத்துறை? அப்படியென்றால் கும்பாபிஷேகத்திற்காக கோடிக்கணக்கில் வசூலிக்கப்பட்ட பணம் எதற்கெல்லாம் பயன்படுத்தப்பட்டது என அடுக்கடுக்கான கேள்விகளை கேட்பதோடு, இதுகுறித்து விளக்கம் கேட்டு புகார் மனு ஒன்றையும் அனுப்பி இருப்பதாக விஹெச்பியின் செயற்குழு உறுப்பினர் திரு.சீனிவாசன் ஸ்ரீ தமிழ் இதழுக்கு தெரிவித்தார்.

சின்ன திருப்பதியில் பக்தர்கள் வேண்டுதல் பொருட்டு விளக்கு ஏற்ற வந்தால், கரிய நிறம் படிந்து விடுகிறது அதனால் விளக்கேற்ற அனுமதியில்லை என மாற்று ஏற்பாடுகளை கூட செய்யாமல் ஹிந்துக்களின் வழிபாட்டைத் தடுக்கும் அறநிலையத்துறையினர் தனிநபரின் விளம்பரத்திற்காக கோயிலுக்குள் பார்க்கும் இடமெங்கும் கல்வெட்டு பதிக்க எப்படி அனுமதியளித்தது என்ற கேள்வியையும் முன்வைக்கிறார்.

ஒரு பக்கம் ஹிந்து சனாதன அழிப்பு பிரச்சாரம்! இன்னொரு பக்கம் ஆன்மிக புரட்சி ஆட்சி என பித்தலாட்டம்!கோயில் வழிபாட்டையே கோபாலபுர குடும்ப ஏகபோக உரிமை போல மாற்றுதல்!இதையெல்லாம் கணக்கச்சிதமாக செயல்படுத்த அறநிலையத்துறையும், அதன் அமைச்சரும் ஓவர் டைம் போட்டு வேலை செய்கிறார்கள்.!இதற்கு முற்றுப்புள்ளி தான் எப்போது?

தாக்கத் தாக்க தடையறத் தாக்க என கந்த சஷ்டியை பாராயணம் செய்து கொண்டே 2026ல் ஹிந்துக்கள் முடிவு எழுத வேண்டும் என்பதே நம் எதிர்பார்ப்பு.

# வெங்கடாஜலபதி கரடில் தர்கா; பெரியகுளத்தில் இன்னொரு திருப்பரங்குன்றம்

பொன். தர்மராஜ்

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் இருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் தாமரைக்குளம் உள்ளது. தாமரைக்குளம் கரட்டின் மேல் வெங்கடாஜலபதி திருக்கோயில் உள்ளது. இக்கோயில் 600 வருடங்களுக்கும் மேற்பட்ட பழமையான கோயில் ஆகும். இக்கோயிலில் வெங்கடாஜலபதி மூலவராக தாமரை மலர் மீது நின்ற கோலத்தில் சாந்தமாக காட்சியளிக்கிறார்.

**கோவில் வரலாறு :**

தாமரைக்குளத்தில் உள்ள விவசாயிகளும் நிலச்சுவான்களும் வருடத்திற்கு ஒருமுறை திருப்பதி சென்று வெங்கடாஜலபதி தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஒரு ஏழை விவசாயிக்கு திருப்பதி செல்ல வேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை. அந்த ஆசையோடு இருந்த அவர் இரவு கோவிந்தா கோவிந்தா என்று உச்சரித்தபடியே, உறங்கிப் போனார். அவருடைய கனவில் தோன்றிய வெங்கடாஜலபதி, "கவலைப்படாதே நான் உன் அருகிலேயே இருக்கிறேன். திருப்பதி சென்று தரிசித்தால் கிடைக்க வேண்டிய புண்ணியம் இங்கேயே கிடைக்கும். தாமரை மலர்ந்திருக்கும் உங்கள் ஊரில் உள்ள குளத்தில் நீராடி அருகில் உள்ள மடை காத்த ஆஞ்சநேயரை தரிசித்துவிட்டு, எதிரே உள்ள லட்சுமி நாராயணரையும் தரிசித்து பின்னர் மலையின் மீது ஏறி வா அங்குள்ள ஆலமரத்தின் விழுது நாமம் போன்று இணைந்து பூமியில் படர்ந்து இருக்கும் அந்த விழுதின் அடியில் தோண்டினால் விக்ரகம் இருக்கும் அவரே திருப்பதி பெருமாளுக்கு இணையானவர் என்று கூறினார்". அதன்படியே செய்த விவசாயி பெருமாள் விக்ரகத்தைக் கண்டு சிலிர்த்தார். ஊர்மக்கள் உதவியுடன் ஆலயம் எழுப்பினார். இப்படி பல நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த கோவிலான வெங்கடாஜலபதி திருக்கோயில் இருக்கும் கரட்டை அரசு வெங்கடாஜலபதி கரடு என அழைக்கிறது.

**கரடை ஆக்ரமிக்க துடிக்கும் முஸ்லீம்கள்**

இந்தக் கரடு 130 ஆண்டுகளுக்கு முன் 200 ஏக்கர் பரப்பளவு கொண்டதாக இருந்தது. கடந்த 1972 ஆம் ஆண்டு ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரிக்கு 18 ஏக்கர் கோவில் நிலத்தை பெரியகுளம் சார் ஆட்சியர் வழங்கியுள்ளார். வெங்கடாஜலபதி கோவிலின் பின்புறத்தில் முஸ்லீம் ஒருவர் பல ஆண்டுகளுக்கு முன் குடிசை போட்டு ஆக்ரமித்துள்ளார். அதன் பின் அந்த இடத்தில் முஸ்லீம்கள் பிணத்தை புதைத்து பச்சைத்துணி போர்த்தி வைத்திருந்தனர்.

எப்போதாவது சிலர் அங்கு சென்று வழிபாடு நடத்தியதோடு அந்த இடம் பயன்பாடு இல்லாமல் இருந்தது. இந்த நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டில் வெங்கடாஜலபதி திருக்கோயில் வளாகத்தில் மரக்கன்று அமைப்பதற்காக ஆண்டிபட்டி வனத்துறை சார்பில் மரக்கன்றுகள் நடுவதற்காக பாதை அமைத்தனர். இந்த நிலையில், அந்த கோவிலுக்கான பாதையை பயன்படுத்தி, முஸ்லீம்கள் பிணத்தை புதைத்து பச்சைத்துணி போர்த்தி இருந்த இடத்தில் பச்சைக்கொடியை நட்டு வைப்பது, சிறிய கட்டுமானத்தை ஏற்படுத்துவது என்று சிறிது சிறிதாக ஆக்ரமிக்கத் தொடங்கினர். அப்போதே நடவடிக்கை எடுக்கக் கோரி மனு கொடுத்தும் அரசு எந்த நடவடிக்கையும்எடுக்கவில்லை. ஒரு கட்டத்தில் அவர்கள் அந்த இடத்தைச் சுற்றி ஒரு ஷெட் போன்ற அமைப்பை ஏற்படுத்தி அதற்கு சஞ்சீவி மலை பாவா மகான் மாஹின் அபூபக்கர் சித்திக்(ரலி) தர்கா என்று பெயரும் வைத்துள்ளனர். இது குறித்து, 2024 ஆம் ஆண்டு தமிழக முதல்வர், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், அமைச்சர் மற்றும் தேனி மாவட்ட ஆட்சியர், பெரியகுளம் சார் ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தென்கரை காவல் ஆய்வாளர், இந்து சமய அறநிலையத்துறை செயல் அலுவலர், பெரியகுளம் வட்டாட்சியரிடம் புகார் அளித்தனர். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் தான், 2025ம் ஆண்டு செப்டம்பர் 10 அன்று கந்தூரி விழா நடத்த போவதாகவும் அதில் இறைச்சி உணவை மலை மேல் சமைத்து விருந்து வைக்கப் போவதாகவும் அதில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ள இருப்பதாகவும் தகவல் வெளியான நிலையில், உள்ளூர் ஹிந்துக்கள் அறநிலையத்துறை, மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தனர். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.






இந்து முன்னணிக்கும் உள்ளூர் மக்கள் இது குறித்த தகவலைத் தெரிவித்தனர். அரசு நிர்வாகம் நடவடிக்கை எடுக்காத நிலையில், முஸ்லீம்கள் தங்கள் நிகழ்ச்சிக்கு தேவையான பணிகளை துரிதமாக செய்து வந்தனர். இந்நிலையில் கிராமமக்கள் இந்து முன்னணி அமைப்புடன் இணைந்து செப்டம்பர் 9 ஆம் தேதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புகார் மனு கொடுத்த போதெல்லாம் கண்டுகொள்ளாத அரசு அதிகாரிகள் ஹிந்துக்கள் வீதியில் இறங்கியவுடன், பெரியகுளம் டிஎஸ்பி மற்றும் ஏடிஎஸ்பி, பெரியகுளம் சார் ஆட்சியர், வட்டாட்சியர் தலைமையில் ஹிந்துக்கள் மற்றும் முஸ்லீம்களிடையில் வழக்கம் போல் அமைதி பேச்சுவார்த்தை நடத்தினர். அச்சமயத்தில் ஹிந்துக்கள் தரப்பில் இவ்வளவு நாட்கள் இல்லாத ஒரு பழக்கத்தை ஏன் புகுத்த வேண்டும், மேலும் கோவிலுக்கு அருகில் அசைவ உணவு சமைப்பது என்ற கோரிக்கை கோவிலின் புனித தன்மைக்கு கேடு விளைவிக்கும் என்றனர். அது மட்டுமல்லாமல், இந்த இடம் அரசு சொந்தமான புறம்போக்கு இடம், இதில் எப்படி எந்த அனுமதி இல்லாமல் கட்டுமானத்தைக் கட்டினார்கள் என்ற கேள்வியையும் எழுப்பினர். டி.எஸ்.பி. கந்தூரி விழாவிற்கு அனுமதி மறுத்தும் முஸ்லீம்கள் பிடிவாதமாக இருந்தனர். இந்நிலையில், முஸ்லீம்கள் திடீரென்று நாங்கள் சைவ உணவு விருந்து வைத்துக்கொள்கிறோம் என்று கூற, உடனே டி.எஸ்.பி விழா நடத்துவதற்கு வேண்டுமானால் அனுமதி மறுக்கலாம் உணவு சாப்பிடக்கூடாது என்று எப்படி சொல்ல முடியும் என்று ஹிந்துக்களை சமாதானப்படுத்த முயன்றார். ஆனால் ஹிந்துக்களோ இல்லாத ஒரு பழக்கத்தை ஏன் ஏற்படுத்த வேண்டும், சைவ உணவு தானே நாங்களே கூட சமைத்து தருகிறோம். கீழே இருக்கும் மண்டபத்தில் விருந்து வையுங்கள் என்று கூறியும் கூட கரட்டின் மேல் முஸ்லீம்கள் சமைத்து உணவு உண்ண அனுமதியளித்தனர்.

**திருப்பரங்குன்றம் தர்காவால் நூற்றாண்டு களாக போராட்டம் நடத்தியும் தீபம் ஏற்ற முடியாத நிலையில் நாளை இந்த கரட்டின் வழிப்பாட்டையும் ஹிந்துக்கள் இழக்க நேரிடுமோ என்ற அச்சத்தில் ஹிந்துக்கள் போராடி கொண்டுள்ளனர்!**

அப்போது, கிராமத்தைச் சேர்ந்த பக்தர்கள் எதிர்ப்பு தெரிவித்து தாமரைக்குளம் கிராமத்தில் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கோரினர். ஆனால், காவலர்கள் அனுமதி வழங்கவில்லை, இதையடுத்து பக்தர்கள் கோயிலுக்குச் செல்ல முற்பட்டனர். அப்போது காவல்துறையினர் அவர்களைத் தடுத்து 17 பெண்கள் உள்பட 43 பேரை கைது செய்தனர். இப்படி தமிழக அரசு ஹிந்துக்களின் உரிமையை மறுத்தும், முஸ்லீம்களை திருப்திபடுத்தும் போக்குடனும் தொடர்ந்து நடந்து வருகிறது.

ஏற்கனவே திருப்பரங்குன்றம் தர்காவால் நூற்றாண்டுகளாக போராட்டம் நடத்தியும் தீபம் ஏற்ற முடியாத நிலையில் நாளை இந்த கரட்டின் வழிப்பாட்டையும் ஹிந்துக்கள் இழக்க நேரிடுமோ என்ற அச்சத்தில் ஹிந்துக்கள் போராடிக் கொண்டுள்ளனர்! ஹிந்துக்களின் உரிமை காக்கப்படுமா?

# புரட்சி வெடிக்கும், ஜிஹாத் நடக்கும் – பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னும் தொடரும் கோஷம்

- தமிழ்நேசன்

மௌலானா மஹமூத் மதானி என்பவர் ஜமியத் உலமா இ ஹிந்த் என்ற அமைப்பின் தலைவர். இவர் ஜிஹாத் என்பது புனிதமான வார்த்தை என்றும் அதை கலவரம், வன்முறை இவற்றோடு சேர்த்துப் பேசித் திரித்துவிட்டார்கள் என்று தொடங்கி அடக்குமுறை இருக்குமிடத்தில் ஜிஹாத் இருக்கும் என்று பேசியிருக்கிறார். போபாலின் பர்கதுல்லா கல்வி வளாகம் என்ற இடத்தில் பேசியபோது அவர் இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். மேலும் அவர் லவ் ஜிஹாத், நில ஜிஹாத், கல்வி ஜிஹாத், துப்பும் ஜிஹாத் என்று பேசி முஸ்லிம்களின் உணர்வைப் புண்படுத்துகிறார்கள். எங்கே என்ன கலவரம், வன்முறை நடந்தாலும் ஜிஹாத் என்று சொல்கிறார்கள். ஆனால் ஜிஹாத் ஒரு புனிதமான மதக் கடமை. ஜிஹாத் என்ற சொல் குரானில் பல பொருட்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அது மனித குலத்தின் நலனுக்காக என்று மட்டுமே எடுத்துக்கொள்ளவேண்டும். மனிதர்களின் மரியாதை, கௌரவம் இவற்றை உயர்த்தவே ஜிஹாத் என்று புரிந்து கொள்ளவேண்டும் என்று பேசினார்.

**புனித மதக் கடமையை வன்முறையோடு தொடர்புபடுத்துவது கூடாது என்று சொல்கிறார். சரிதான். அதே தொடர்ச்சியில் அடக்குமுறை இருந்தால் புனித மதக் கடமை செய்யவேண்டும் என்கிறார்.**

பல அர்த்தங்களில் ஜிஹாத் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றால் என்னென்ன அர்த்தங்கள் என்று அவர் குறிப்பிடவில்லை. எந்த அர்த்தமானாலும் நல்லதே என்று எடுத்துக்கொள்ளவேண்டும் என்றால் எப்படி? புரியவில்லை. மேலும் புனித மதக் கடமையை வன்முறையோடு தொடர்புபடுத்துவது கூடாது என்று சொல்கிறார். சரிதான். அதே தொடர்ச்சியில் அடக்குமுறை இருந்தால் புனித மதக் கடமை செய்யவேண்டும் என்கிறார். அது என்ன? எப்படிச் செய்வது என்று விவரம் சொல்லவில்லை.

மேலும் அவர் பேசும் போது ராமர் கோவில், முத்தலாக் ஆகிய தீர்ப்புகள் நீதித்துறை அரசுக் கட்டுப்பாட்டில் இயங்குவதாகக் காட்டுகிறது. அவை முஸ்லிம்களின் உரிமையைப் பறிப்பதான தீர்ப்புகளாக உள்ளன. ஞானவாபி, மதுரா வழக்குகள் வழிபாட்டுத் தலங்கள் சட்டத்தை மீறி அனுமதிக்கப்படுவது சரியில்லை. உச்சநீதிமன்றம் உச்சமான மதிப்பில் இருக்கவேண்டுமானால் இப்படி எல்லாம் இல்லாமல் அரசியல் சட்டப்படி செயல்படவேண்டும். இல்லை என்றால் உச்சநிலையை இழந்துவிடும் என்று பேசினார்.

வந்தே மாதரம் பாடு என்றால் அனைவரும் பாடவேண்டும் என்ற நிலை வந்தால் அந்த நாடு இறந்த நாடாகப் போகும். வக்ஃப் சொத்துக்களை அரசு கணக்குக் கேட்பதும், மதரசா நிர்வாகத்தில் தலையிடுவதும், மதமாற்றத்துக்கு எதிராக கர் வாபஸி என்று கொண்டு வருவதும் முஸ்லிம்களின் சுதந்திரத்தைப் பறிப்பதாகும். ஹலால் என்பதை மறுத்துப் பேசுவது முஸ்லிம்களின் நேர்மையான வாழ்வைப் பழிப்பதாகும். ஹலால் என்பது இறைச்சிக்காக வெட்டுவது மட்டுமல்ல. அது வாழ்க்கை முறை என்று பேசினார்.

இதைக் கண்டித்து மத்தியப் பிரதேச பாஜக தலைவர் நரோத்தம் மிஷ்ரா இந்த மனநிலையை அனுமதிக்க முடியாது. நீதிமன்றங்களை மதிக்காது பேசுவதும் வந்தேமாதரம் என்ற தேசியப் பாடலை அவமதிப்பதும் என்ன மனநிலை? இதை அனுமதித்தால் நாட்டு நலம் சீர்கெடும். கடும் கண்டனத்துக்கும் நடவடிக்கைக்கும் உரிய பேச்சு என்று சொன்னார்.

இது போல தமிழகத்தில் தமுமுக மாநில பொதுச் செயலாளர் மைதின் சேட்கான் என்பவர் “இங்கே புரட்சி செய்யும் நாள் வரும். அந்த நாளில் நேபாளம் போல, வங்க தேசம் போல புரட்சி நடக்கும். அப்போது மோடி உள்ளிட்டவர்கள் விரட்டியடிக்கப்படுவர் என்றும், ஆர்எஸ்எஸ், பிஜேபி உள்ளிட்ட அமைப்பினர் இந்த நாட்டை விட்டே ஓடவிடப்படும் நாள் வரும்” என்றும் வன்முறையைத் தூண்டும் வகையில் டிசம்பர் 6 போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துப் பேசியுள்ளார். இவர் மீது நடவடிக்கை என்ன என்றால் பேச்சே இல்லை. தீபத்தூணை எல்லை நடுகல் என்று ஆதாரம் தேடவே நேரம் போதவில்லை பாவம்.

இந்த விஷயங்களில் வன்முறையைத் தூண்டும் வகையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பேசும் இவர்கள் போன்ற சக்திகளை மத்திய அரசு கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். மக்கள் நல்வாழ்வைப் பேணவேண்டும்.

# தமிழ்நாடு வக்ப் வாரியத் தலைவராக மீண்டும் நவாஸ்கனி

**இராமகிருஷ்ணன்**

தமிழ்நாடு வக்பு வாரிய தலைவராக இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனியை நியமித்துள்ளது தமிழக அரசு. இந்த வாரியம், டிசம்பர் 2 2025 அன்று பதவி ஏற்றது. பதவியேற்ற ஒரு வாரத்தில், "சேர்மன் நவாஸ்கனி MP, முன்னாள் CEO தாரேஸ் அகமது IAS, இந்நாள் CEO அஃப்தாப் ரசூல் IAS என பல நிர்வாகிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வந்து கொண்டே இருக்கின்றன."

இதற்கிடையே, உமீத் சட்டப்படி தமிழ்நாடு வக்பு வாரியம் முழுமையாக அமைக்கப்படாத நிலையில் அது செயல்பட தடை விதிக்க வேண்டும் என்று தொடரப்பட்ட W P 47451 / 2025 வழக்கில், உத்தரவு வரும் வரை கூட்டம் நடத்தி எந்த முடிவும் எடுக்கக் கூடாது என அளிக்கப்பட்ட அரசு தரப்பு உறுதிக்கு மாறாக 11.12.2025 அன்று ஜூம் மீட்டிங் நடத்தி முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நீதிமன்ற அவமதிப்பின் மீது வழக்குத் தொடரப்பட்டாலும், அதைப் பற்றிய கவலை அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. தி.மு.க காப்பாற்றும் என்ற நம்பிக்கை.

**நவாஸ்கனியை தி,மு,க ஏன் காப்பாற்றுகிறது ? இதனால் யாருக்கு லாபம் ? யாருக்கு நஷ்டம்?**

அதிராமப்பட்டினம் எம்.கே.என் டிரஸ்டில் மோசடி செய்தவர்களை மீண்டும் நியமிக்க முயன்றார் நவாஸ்கனி. சுன்னத் ஜமாத் கட்டுப்பாட்டிலுள்ள பல வழிபாட்டு இடங்களையும், வழிபாட்டு முறைகளையும், சொத்துக்களையும் தியோபந்திகள்/ வஹாபிகள் / அடிப்படைவாதிகள் கைப்பற்ற உதவினார். முத்தாவல்லிகள் நியமனத்தில் நடந்த முறைகேடுகளுக்கு எதிராக பல வழக்குகள் நிலுவையில் உள்ளது. இந்நிலையில், இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் தேர்தல் பொருளாதாரக் கமிட்டியின் பொறுப்பாளராக இவர் அறிவிக்கப்பட்டிருப்பது ஆச்சரியப்படுவதற்கில்லை.



திருப்பரங்குன்றம் மலையில் அசைவ உணவு உண்டு பிரச்சினையைத் தொடங்கி வைத்தவர் நவாஸ்கனி. தி.மு.கவின் மீது அதிகரிக்கும் மக்கள் வெறுப்பு, சிறுபான்மையினர் ஓட்டுக்களையும் தி.மு.கவிற்கு எதிராகத் திருப்புகிறது. நடிகர் விஜயை தி.மு.க ஒழிக்க முயல்வதால் கிறிஸ்தவர்களின் ஆதரவை கணிசமாக இழந்துள்ளது தி.மு.க. இந்நிலையில் முஸ்லீம்களின் ஒட்டுமொத்த ஆதரவு தி.மு.கவிற்கு கிடைக்காவிட்டால் தேர்தலில் வெற்றி பெற முடியாது. அதற்காக ஒரு மதப்பிரச்சினையைக் கிளப்பி அரசியல் லாபம் தேட தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் திருப்பரங்குன்றம் அதை செய்யும் பொறுப்பு நவாஸ்கனியிடம் கொடுக்கப்பட்டது. ஹிந்துக்களை எதிரிகளாகக் காட்டி, வெறுப்புணர்வைத் தூண்டி, முஸ்லீம்களின் பாதுகாவலன் என்ற போர்வையில் அரசியல் லாபம் அடைகிறது தி.மு.க. இதனால் முஸ்லீம்கள் தங்கள் வழிபாட்டுத் தலங்களையும், வழிபாட்டு முறைகளையும், சொத்துக்களையும் இழந்து வருகிறார்கள். வக்ப் வாரியத்திற்கு எதிராக பல முஸ்லீம்கள் வழக்குத் தொடர்ந்தும், நவாஸ் கனியை தி.மு.க அரசு மீண்டும் வக்ப் வாரியத் தலைவராக நியமித்திருப்பது, தி.மு.க அரசு முஸ்லீம்களுக்குச் செய்யும் சதி.

இந்த நவாஸ்கனி தான் திருப்பரங்குன்றம் மலை வக்ப் சொத்து என்றார். திருச்செந்துறை கிராமம் வக்ப் சொத்து என்றார். இப்படி ஹிந்துச் சொத்துக்களையும், ஊர்களையும் வக்ப் சொத்து என்று சொல்லி ஆக்கிரமிக்க திட்டமிட்டவர் என்பது நினைவுகூறத்தக்கது. வக்ப் வாரியத்தை வைத்து ஹிந்துக்களின் உரிமைகளையும், முஸ்லீம்களின் உரிமைகளையும் பறித்து, லாபம் அடைவதுடன், நாட்டின் ஒற்றுமைக்கும் ஊறுவிளைக்கின்றனர் நவாஸ்கனியும் திமுகவும் !

**செய்தி:**

**கருணாநிதிக்கு பாரத ரத்னா தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை**

**சிந்தனை**

பாரதத்தை ஏற்றுக் கொள்ளாதவருக்கு பாரத ரத்னா எதற்கு? இந்திய அமைதி படையை வரவேற்காத முதல்வர்! சாவதற்கு சம்பளம் வாங்குபவன் இராணுவ வீரன், இந்தியாவின் எதிர்காலத்தை ஆண்குறியுடன் ஒப்பிட்டவருக்கு பாரத ரத்னா தேவையா?

**செய்தி:**

**சந்தேஷ்காளி கற்பழிப்பு முக்கிய சாட்சியை லாரி ஏற்றி கொல்ல சதி**

**சிந்தனை**

ஹிந்துக்களை படுகொலை செய்து கற்பழிக்க உதவும் அரசு. சாட்சிகளை அழிக்காமல் என்ன செய்யும்? நீதிமன்றத்தில் கூட ஹிந்துக்களுக்கு நீதி கிடைத்து விடக்கூடாது என்பதை உறுதி செய்யும் கொடூர அரசு.

**செய்தி:**

**வந்தே மாதரம் மீது ஆ.ராசாவின் வன்மம்**

**சிந்தனை**

1905ம் ஆண்டு பிரிந்த வங்கத்தை 1911ல் ஒருங்கிணைத்தது ஹிந்துக்களும்-முஸ்லீம்களும் சேர்ந்து முழங்கிய வந்தேமாதரம். அதன்பின், அடிப்படைவாத இஸ்லாமிற்கு அரசியல் தலைவர்கள் அடிபணிந்ததால், வந்தேமாதரத்தை ஏற்க மறுத்தனர் முஸ்லீம்கள். வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளுமா அரசியல் கட்சிகள் ?

# செய்
# சிந்த

**செய்தி:**

**பட்டமளிப்பு விழாவில் ஆ**
**மாணவியின் நடவடிக்கைக்கு**

**சிந்தனை**

கல்விச்சாலைகளை கீழ்தரமான
செயலை ஆதரிக்கும் திமுக
நீதிமன்றத்தை மதிக்காத சட்ட

**செய்தி:**

**ஹிந்து என்றால்**
**வார்த்தை - முன்**

**சிந்தனை**

பாரசீகர்கள் மு
ஹிந்து என்ற செ
கற்பித்தனர். பா
இஸ்லாம் ஏற்கு
ஹிந்துக்களை த
சொல்வாரா? இ

# ...திகள்
# ...னைகள்

**செய்தி:**

**கவர்னர் ஆர்.என்.ரவி தமிழகத்தில் இருக்கும் ஒரே தீவிரவாதி - சபாநாயகர் அப்பாவு திமிர் பேச்சு**

**சிந்தனை**

குண்டு வைத்தவனுக்கு போலீஸ் பாதுகாப்புடன் ஊர்வலம், நீதிமன்ற அவமதிப்பு, தேச பிரிவினையை ஆதரிக்கும் அரசு, ஊழல் மந்திரிக்கு உயர்வு இப்படிப்பட்ட காட்டுமிராண்டிகளை தீவிரமாக எதிர்க்கும் தீவிரவாதி கவர்னர்.

**...ளுநர் ஆர்.என்.ரவியை அவமதித்த ...த நீதிமன்றம் கண்டனம்**

...ன அரசியல் மேடைகளாக மாற்றி வரும் ... அரசுக்கு விழுந்த அடி இந்த தீர்ப்பு. ... விரோதிகள் திருந்தவா போகிறார்கள்?

**செய்தி**

**மே.வங்கம், ஆந்திராவில் கலவரத்தைத் தூண்ட புதிய பாபர் மசூதி**

**சிந்தனை**

அந்நிய பாபரை முன்னோராக கொள்ளும் மானம் கெட்டவர்கள். மதம் மாறியதால் தேசியத்தைத் துறக்கும் அடிப்படைவாத மதம் ஏறியவர்கள். அரசியல் லாபத்திற்காக இந்த அடிப்படைவாதத்தை வளரவிட்டால் நாட்டிற்கு ஆபத்து.

**...பாரசீக மொழியில் கெட்ட ...ாள் நீதிபதி அவதூறு பேச்சு**

...ஸ்லீம்களாக மதம்மாறிய பின் ...சால்லுக்கு தவறான பொருளைக் ...ரசீகர்கள் என்ற அடையாளத்தை ...மா?அப்படியென்றால் இஸ்லாம் ...வறாக சித்தரித்தது என்று நீதிபதி ...வர் கைது செய்யப்பட வேண்டும்.

**செய்தி**

**FIR பதியவில்லை என்றால் கே.என் நேரு டெண்டர் ஊழலில் போலீஸுக்கும் பங்கு - ED அதிரடி கடிதம்**

**சிந்தனை**

ஊழல் நடந்த ஆதாரத்தை கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் உடந்தை தானே! செந்தில் பாலாஜிக்காக கண்ணியத்தை இழந்தது அரசு, டாஸ்மாக் ஊழல், கனிமவள கொள்ளை என்று ஊழலை அரசு கொள்கையாக மாற்றியதை அம்பலப்படுத்தியுள்ளது இந்தக் கடிதம்!

# தேஜஸ் உலகின் சிறந்த இலகு ரக போர்விமானமா?

என். சி. பிபிந்த்ரா

2025 நவம்பரில் துபாய் விமான கண்காட்சியில் பயிற்சியின் போது ஒரு தேஜஸ் இலகு ரக போர் விமானம் (LCA) விபத்துக்குள்ளானது, இது கடும் விமர்சனங்களுக்குள்ளானது. அவற்றில் பெரும்பாலானவை உணர்ச்சிவசத்தாலும், சில அரசியல் உள்நோக்கம் கொண்டவையாகவும், பெரும்பாலானவை விமான அறிவியல் யதார்த்தங்களில் இருந்து விலகியும் இருந்தன.

விமான விபத்துக்கள் வருந்தத்தக்கவை என்றாலும், உயர்தர இராணுவ விமானப் போக்குவரத்து உலகில் அவை அசாதாரணமானவை அல்ல. எது முக்கியம் என்றால், ஒட்டுமொத்த பாதுகாப்பு தரவுகள் (overall safety record), நம்பக்கத்தன்மையுடன் கூடிய பொறியியல் அமைப்பு, போர்களத்திறன் போன்றவையே. இந்த அளவுகோல்களின் அடிப்படையில், தேஜஸ் ஒரு வெற்றிக்கரமான விமானம் மட்டுமல்ல, உலகிலேயே அதன் பிரிவில் மிகவும் திறமையான இலகு ரக போர் விமானங்களில் ஒன்றாகும்.



**தேஜஸின் களங்கமற்ற வான் சாதனை**

20 ஆண்டுகளுக்கும் மேலாக, தேஜஸ் படைத்தளங்களிலிருந்து ஆயிரக்கணக்கான முறை வான் பயணங்கள் மேற்கொண்ட பொழுதும், அதி உயர விமான நிலையங்களிலிருந்து வான் பயணங்கள் மேற்கொண்ட போதும், போர் ஒத்திகைகள் நிகழ்த்திய போதும் எந்தவிதமான சிறிய விபத்துக்களில் கூட சிக்கியதில்லை. அதாவது வடிவமைப்பு பிரச்சினையால் ஏற்படும் விபத்துகள் தேஜஸில் இதுவரை ஏற்பட்டதில்லை. துபாய் விபத்துக்கு முன், அதன் பாதுகாப்பு திறனில் கிட்டத்தட்ட குறைபாடற்றதாக இருந்தது. - இது ஒரு உள்நாட்டு போர் விமானத் தயாரிப்பில் குறிப்பிடத்தக்க சாதனை.

“அதிக ஆற்றலுடன் விமானத்தைச் செலுத்தும் போது ஏற்பட்டுள்ள தனித்துவமான தொழில்நுட்ப கோளாறு.” என்று தான் முதல் கட்டமாக துபாயில் நடந்த இந்த விபத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது போன்ற சவால்கள் முழு செயல் திறன் கொண்ட விமானங்கள் கூட சில நேரங்களில் சந்திக்க கூடியவை தான்.

விபத்தில் சிக்கியது என்பது விஷயமல்ல. ஒரு விமானம் தன்னுடைய வாழ்நாளில் தொடர்ச்சியாக நம்பகத்தன்மையுடன் செயலாற்றியுள்ளதா என்பதை தான் கணக்கில் கொள்ளவேண்டும் அந்த வகையில் தேஜஸ் தன் முழு திறனை வெளிபடுத்தியுள்ளது.

**தேஜஸ் போர் விமானத்தின் பலங்கள்**

LCA இன் பொறியியல் பலங்கள் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. தேஜஸ் உலகில் ஒலியை விஞ்சும் வேகத்தில் பறக்கும் இலகுவான சூப்பர் சோனிக் (Supersonic) போர் விமானங்களில் ஒன்றாகும், மேலும் இது ஒரு வலிமையான தாக்குதல் திறனையும் கொண்டுள்ளது. அதன் பலவகை பொருட்களால் ஆன (composite) Airframe - எடையில் 40% க்கும் அதிகமாகவும், மேற்பரப்பு பரப்பளவில் 90% ஆகவும் உள்ளது. இது இந்த விமானத்திற்கு தனிச் சிறப்பு வாய்ந்த துரிதமான செயல்பாடு, ரேடாரின் கண்காணிப்பிலிருந்து தப்பிக்கும் திறன் (Reduced Radar Signature), நீர்,காற்று, இரசாயனம் போன்றவற்றினால் அரிப்பு ஏற்படாமல் காத்துக் கொள்ளும் திறன் போன்றவற்றை அளிக்கிறது. குறிப்பாக கடல்சார் பணிகளில் இது மிகவும் பயனுள்ளது.

இந்த விமானப்படையின் டிஜிட்டல் ஃபிளை-பை-வயர் (digital fly&by&wire) அமைப்பு, உயர் தாக்குதல் கோண (High angles of attack) த்தை கையாளும் போது ஸ்திரமான நிலை, இரண்டு போர் விமானங்களுக்கு இடையேயான நெருக்கமான (dog-fight) சண்டையின் போது துரிதமான பதிலடி தரக்கூடிய திறன் போன்றவற்றை ஏற்படுத்துகிறது.

விமானிக்கு விமானத்தை எளிமையாக கட்டுபடுத்தக்கூடிய வசதி, அதே போன்று விமானிக்கு ஏற்ற காக்பிட் வடிவமைப்பு போன்றவற்றிற்காக இந்திய விமானபடை (IAF) விமானிகளிடமிருந்து பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

அதன் தற்போதைய Mk1A கட்டமைப்பில், தேஜஸ் நவீன AESA Radar, Electronic Warfare Suites, Network&Centric warfare capability, மற்றும் தொலைதூர பார்வைக்கு அப்பாலான ஏவுகணைகள் முதல் துல்லியமான வழிகாட்டுதல் கொண்ட வெடிமருந்துகள் வரை பலதரப்பட்ட ஆயுதத் தொகுப்பின் ஒருங்கிணைப்புடன் கூடிய தொழில்நுட்பம் வாய்ந்த மற்ற போர்விமானங்களுடன் போட்டிபோடக்கூடிய அளவில் உள்ள ஒரு சிறந்த விமானம்.

உலகளவில் சில இலகு ரக போர் விமானங்களே இத்தகைய தளவாடத் திறனுடன் இந்த அளவிலான நவீனமயமாக்களுடன் விளங்குகின்றன. அதன் இயக்கச் செலவு மேற்கத்திய மற்றும் சீன விமானங்ளோடு ஒப்பிட்டு பார்க்கும் போது கணிசமாகக் குறைவாகவே உள்ளது. இந்த அளவில் செலவு திறன் விகிதம் (cost to capability ratio) உள்ள விமானங்கள் வெகு சிலவே உள்ளன.

**ஏன் இந்த எதிர்மறை கருத்து?**

தேஜஸ் நிரூபிக்கப்படவில்லை என்ற கருத்து அதன் களமிறக்கப்பட்ட வரலாற்றிற்கு முற்றிலும் முரணானது. இந்திய விமானப்படை பல தேஜஸ் படைப்பிரிவுகளைச் (squadrons) செயல்பட வைத்துள்ளது மற்றும் மேலும் பலவற்றைச் சேர்க்க உள்ளது.

இந்த விமானம் முக்கிய விமான ஒத்திகைகளில் பங்கேற்றுள்ளது, அதிக எண்ணிக்கையிலான பறக்கும் திறனை (sortie generation capability) நிரூபித்துள்ளது, மேலும் ராஜஸ்தானின் பாலைவனங்களில் இருந்து இமயமலை எல்லைகள் வரை மோசமான கால நிலைகளிலும் இயங்கியுள்ளது.

இது ஏற்கெனவே விமானம் தாங்கி கப்பல்களில் இருந்து செயல்படுவதை நிரூபித்துள்ளது, இதன் வாயிலாக கடற்படையில் பயன்படுத்தக்கூடிய இலகு ரக விமானங்களில் தேஜஸும் ஒன்றாகிறது.

**உலகின் பாதுகாப்பான போர் விமானம்**

சீன பாகிஸ்தானி JF-17 அல்லது அமெரிக்க F16 போன்ற விமானங்களுடன் ஒப்பிடுகையில், தேஜஸ் இலகுரக விமானம் மிக குறைந்தளவு விபத்துகளையே சந்தித்து பாதுகாப்பில் மிகச் சிறந்த விமானம் என்ற சாதனை தரவுகளைக் கொண்டுள்ளது.

அதன் கூட்டு வடிவமைப்பு (composite design), நவீன விமான மின்னணுவியல் (modern avionics) மற்றும் கடுமையான சோதனை முறை (rigorous testing regime) ஆகியவை அதன் சேவைக்காலம் முழுவதும் அதிக நம்பகத்தன்மை (higher reliability) மற்றும் விமானத் தகுதியின்மை தொடர்பான சம்பவங்கள் (airworthiness&related incidents) குறைவாக இருப்பதற்கும் காரணமாக உள்ளன. இதன் மீதான சர்வதேச நாடுகளின் கவனம் நேசநாடுகளின் விமானபடைகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நம்பிக்கையை அளிக்கிறது.

மலேசியாவின் ஒப்பந்த செயல்முறை முதல் துபாய், பஹ்ரைன் மற்றும் பிற தளங்களில் நடந்த கண்காட்சிகள் வரை, தேஜஸ் ஒரு நவீன நம்பகமான மற்றும் குறைந்த விலையில் நான்காம் தலைமுறை-பிளஸ் (fourth-generation-plus) போர் விமானத்தைத் தேடும் நாடுகளுக்கு ஒரு தீர்வாக விளங்குகிறது. மேலும், இது பெரும் சக்திவாய்ந்த சப்ளையர்களுடன் (major power suppliers) இணைக்கப்பட்டுள்ள வியூக ரீதியான கட்டுப்பாடுகள் (strategic strings attached) இல்லாமல் கிடைக்க கூடியதாகவும் இருக்கிறது.

> **ஒரு நாடு ஒரு ஒற்றைச் சம்பவத்தின் அடிப்படையில் ஒரு போர் விமானத்தை மதிப்பிடுவதில்லை. இந்தியாவின் பொது விவாதமும் அப்படி இருக்கக்கூடாது**

ஒரு நாடு ஒரு ஒற்றைச் சம்பவத்தின் அடிப்படையில் ஒரு போர் விமானத்தை மதிப்பிடுவதில்லை, இந்தியாவின் பொது விவாதமும் அப்படி இருக்கக்கூடாது.

**துபாய் தேஜஸ் விபத்தில் இருந்து கற்க வேண்டிய பாடங்கள்**

துபாய் விபத்து குறித்து முழுமையாகவும், வெளிப்படையாகவும், நிபுணத்துவத்துடனும், எப்படி ஒரு மேம்பட்ட வான்வழி திட்டத்தை அணுகுவோமோ அப்படி அணுகி விசாரிக்கப்பட வேண்டும், ஆனால், ஒரு விபத்தை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்த தேஜஸ் திட்டத்தின் மீதும் அதன் சாயலை ஏற்படுத்துவது நியாயமல்ல என்பதோடு மட்டுமில்லாமல் நிரூபிக்கப்பட்ட உண்மைகளின் அடிப்படையிலும் இல்லை.

தேஜஸ் என்பது இந்தியாவின் வளர்ந்து வரும் விண்வெளித் திறனின் ஒரு சின்னமாகும். இது கடுமையான சோதனைகள், Combat-ready induction மற்றும் யதார்த்த உலகில் அதன் அனுபவம் போன்றவற்றால் இது ஒரு மேம்பட்ட விமானமாகத் திகழ்கிறது.

அனைத்தையும் தாண்டி, ஒரு பின்னடைவால் மங்கிப் போகாமல், இலகு ரக விமான திட்டத்தின் கீழ் தொடர்ந்து சேவையில் உள்ள இலகு ரக போர் விமானங்களில் தேஜஸ் ஏன் உயர்ந்து நிற்கிறது என்பதை நிரூபித்து வருகிறது.



# டாப் மீம்ஸ்




- தொகுப்பு : சி.பாண்டிக்குமார்



சாம்பார் சாதம் கிண்டியே ஐஞ்சு வருசத்தை ஓட்டிட்ட

சாம்பார் சாதம் கிண்டுவதை பார்க்க எதுக்குடா லாங்கோட்டு



இந்துக்கள் சாமி கும்பிட கூடாது.!
மத்தியரசு சட்டம் போட கூடாது.!
ஆளுநர் இருக்க கூடாது..!
நீதிபதி எதிரா தீர்ப்பு சொல்ல கூடாது..!!

நீ இந்தியாவுல கட்சி நடத்துறீயா..? இல்ல பாகிஸ்தான்ல நடத்துறியாடா.??





"நீதிபதிகளில் பிராமணர்களே அதிகம்"







நீ தான் பாத்தா அடிக்கணும்.! பத்து கேஸ் இருக்கனும்.! சொன்னா.!
நீதிபதி எப்படி ஆவான்.!........ ரவுடிசம்,கட்ட பஞ்சாயத்து,.......நாடகாதல்னு தான் போவான்..!!



வ.உ.சி., பாரதி பெயர்கள் வட இந்திய சாலைகளுக்கு வைக்காதது ஏன்? திருச்சி சிவா


இத்தனை வருஷமா தில்லில இருந்திருக்காரு திருச்சி சிவா. இப்படி ஒரு தெரு இருக்கறது தெரியாதா? ஊர் சுத்தாம பார்லிமண்ட் விட்டா வீடு, வீடு விட்டா பார்லிமண்ட்னு இருந்திருப்பாரோ



# பொருளாதாரம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

**பங்கு முதலீட்டில் எப்படி லாபம் பார்க்கிறார்கள்? பங்குகளை பொறுத்த வரையில் ஒருவர் விற்கிறார், ஒருவர் வாங்குகிறார். இதில் விற்றவருக்கு நஷ்டமா? இல்லை லாபமா? என்றால், அவர் என்ன விலைக்கு வாங்கி இருக்கிறார்? என்ன விலைக்கு விற்றிருக்கிறார் என்பதை பொறுத்துதான் இருக்கிறது.**





உதாரணத்துக்கு ஒருவர் ஒரு பங்கை 100 ரூபாய்க்கு வாங்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதன் விலை 130 ரூபாய்க்கு அதிகரித்து செல்கிறது. பிறகு 125 ரூபாய்க்கு இறங்குகிறது. பங்கின் விலை இன்னும் கீழே இறங்கும் என்று நினைக்கும் அவர், பங்கை விற்க முடிவு செய்கிறார். அதே நேரத்தில், இந்த பங்கின் விலை 150 ரூபாய்க்கு மேலே செல்ல வாய்ப்பு இருக்கிறது என்று இன்னொருவர் நினைக்கிறார் என்றால் அவர் அந்த பங்கை வாங்குவார். அப்படி நடக்கும்பட்சத்தில் விற்றவருக்கு 25 ரூபாய் லாபம். பங்கின் விலை 150 ரூபாய்க்கு செல்லும் போது வாங்கியவர் விற்கிறார் என்றால் அவருக்கு 25 ரூபாய் லாபம். இதே போல் ஒருவர் வாங்கி இன்னொருவர் விற்க லாபம் என்பது தொடர்ந்து கொண்டிருக்கும். அதே நேரத்தில் நல்ல பாரம்பரியமான நிறுவனப் பங்கை வாங்கினால் மட்டுமே இந்த லாபம் கிடைக்கும் என்பதால் பங்குகளை தேர்ந்தெடுக்கும் போது முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

**விலைகள் சொல்லும் பாடங்கள்..!**

பங்கு முதலீட்டுக்கு வலிமையான அடிப்படை உள்ள நிறுவனத்தைத் தேர்வு செய்து, அதன் பிறகு பங்கின் விலையை தொழில்நுட்ப ஆய்வு மூலம் ஆராய்ந்து முதலீடு செய்தால் நல்ல லாபம் பார்க்க முடியும் என கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம்.
லாபம் அடைய முக்கிய மூலகாரணமாக இருப்பது பங்கின் விலை (Price) மற்றும் பங்குகள் மீதான வர்த்தக எண்ணிக்கை (Volume) என்றால் மிகை இல்லை என்பதால் அவற்றை பற்றிப் பார்க்கலம்.

**நான்கு விலைகள்:**

எந்த ஒரு பங்கை எடுத்துக் கொண்டாலும், ஒரு வர்த்தக நாளில், அதற்கு ஒரு தொடக்கவிலை (Open Price), அதிகபட்ச விலை ( High Price ), குறைந்தபட்ச விலை (Low Price), முடிவு விலை (Close Price) என நான்கு விலை நிலவரங்கள் இருக்கும்.




இவை பற்றிய சற்று விரிவான விளக்கத்தை தெரிந்துக் கொண்டால் பயனுள்ளதாக இருக்கும்.

**தொடக்க விலை:**

ஒரு பங்கின் மீது குறிப்பிட்ட காலத்தில் (நாள், வாரம், மாதம், ஆண்டு) நடக்கும் வர்த்தகத்தின் ‘தொடக்க விலை’யை இது குறிக்கும்.

**அதிகபட்ச விலை:**

ஒரு பங்கின் மீது குறிப்பிட்ட காலத்தில் நடக்கும் வர்த்தகத்தின் ‘உச்சபட்சவிலை’யை இது குறிக்கும். இந்த நேரத்தில், சந்தையில் விற்பவர்களை விட வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். இதையே சற்று மாற்றி சொல்வது என்றால், விற்பவர்கள் அதிக விலைக்கு விற்க விரும்புவதாக இருந்திருப்பார்கள். அதே நேரத்தில், வாங்குபவர்களும் அதிக விலை கொடுத்து வாங்க விருப்பமாக இருந்திருப்பார்கள்.

**குறைந்தபட்ச விலை:**

ஒரு பங்கின் மீது குறிப்பிட்ட காலத்தில் நடக்கும் வர்த்தகத்தின் குறைந்த விலையை இது குறிப்பிடும்.

இந்தக் கால கட்டத்தில், வாங்குபவர்களை விட விற்பவர்களின் எண்ணிக்கை சந்தையில் அதிகமாக இருக்கும். இதையே சற்று மாற்றி சொல்வது என்றால், வாங்குபவர்கள் குறைந்த விலைக்கு வாங்க விரும்புவார்கள். அதே நேரத்தில், விற்பவர்களும் குறைந்த விலைக்கு விற்க தயாராக இருந்திருப்பார்கள்.

**முடிவு விலை :**

ஒரு பங்கின் மீது குறிப்பிட்ட காலத்தில் நடக்கும் வர்த்தகத்தின் 'நிறைவு விலை'யே முடிவு விலை எனப்படும்.

இந்த முடிவு விலைதான் அடிப்படை மற்றும் தொழில்நுட்ப ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும், ஆரம்ப விலைக்கும், முடிவு விலைக்கும் இடையிலான விலை மாற்றம் பெரும்பாலான தொழில்நுட்ப பகுப்பாய்வாளர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டு அலசப்படுகிறது.

இதை ஒரு சான்று மூலம் பார்த்தால் மிக எளிதாக விளங்கும்.

சான்றிற்கு 'A' என்கிற நிறுவனப் பங்கை எடுத்துக் கொள்வோம்.

இந்தப் பங்கின் விலை காலையில் வர்த்தகம் ஆரம்பிக்கும் போது, 105 ரூபாயாக இருந்தது. இது வர்த்தகத்தின் இடையில் தேவை அதிகம் இருந்ததால், மதிய வர்த்தகத்தில் 120 ரூபாய்க்கு உயர்ந்தது. அதன் பிறகு தேவை கணிசமாக குறைந்ததால் பங்கின் விலை 103 ரூபாய்க்கு இறங்கியது. மீண்டும் தேவை ஏற்பட்டதால் 110 ரூபாய்க்கு அதிகரித்து, அன்றைய வர்த்தகத்தை நிறைவு செய்தது.

இங்கே, ஆரம்ப விலை: 105 ரூபாய்,
அதிகபட்ச விலை : 120 ரூபாய்,
குறைந்தபட்ச விலை: 103 ரூபாய்,
முடிவு விலை : 110 ரூபாய்.
விலை அதிகரிப்பு (லாபம்): 5 ரூபாய்

**வர்த்தக அளவு:**

குறிப்பிட்ட காலத்தில் வர்த்தகமான பங்குகளின் (அல்லது ஃப்யூச்சர் அண்ட் ஆப்ஷன்ஸ் வர்த்தகத்தில் ஒப்பந்தங்கள்) எண்ணிகையை குறிப்பது வர்த்தக அளவு எனப்படுகிறது. இதை ஆங்கிலத்தில் 'வால்யூம்' என்பார்கள். பங்கின் விலைக்கும், வர்த்தக அளவுக்கும் நெருங்கியத் தொடர்பு இருக்கிறது. ஒரு பங்கு மீதான வர்த்தக அளவு அதிகரித்திருக்கிறது என்றால் அதனை நிறைய பேர் வாங்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்று பொருள். வர்த்தக அளவு குறைந்தால் போதிய ஆதரவு இல்லை என்று அர்த்தம். வர்த்தக அளவும் அதிகரித்து, பங்கின் விலையும் அதிகரித்தால் அந்தப் பங்கு விலை ஏற்றத்தில் இருக்கிறது என்று பொருள். இதற்கு மாறாக விலையும் குறைந்து, வர்த்தக அளவும் குறைந்தால் அந்தப் பங்கு மீது முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் இடையே ஆர்வம் குறைந்து போயுள்ளது என்று பொருள்.

# உலகின் மிகப்பெரிய ரியல்-டைம் கட்டண அமைப்பு UPI

பரிவர்த்தனை அளவின் அடிப்படையில் யூனிஃபைட் பேமெண்ட்ஸ் இன்டர்ஃபேஸ் (UPI) உலகின் மிகப்பெரிய சில்லறை அதிவேக கட்டண அமைப்பு (Fast Payment System & FPS) என சர்வதேச நாணய நிதியம் (IMF) அங்கீகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான "Prime Time for Real&Time' GßÓ ACI Worldwide அறிக்கையின்படி, உலகளாவிய ரியல்-டைம் கட்டண அமைப்புகளின் மொத்த பரிவர்த்தனை அளவில் UPI சுமார் 49% பங்கைக் கொண்டுள்ளது.

31 அக்டோபர் 2025 நிலவரப்படி, tier-3 முதல் tier-6 மையங்களில் சுமார் 5.45 கோடி டிஜிட்டல் தொடுப் புள்ளிகள் (digital touch points) நிறுவப்பட்டுள்ளன. மேலும், 2024-25 நிதியாண்டில் சுமார் 6.5 கோடி வணிகர்களுக்கு மொத்தம் 56.86 கோடி QR குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் பொது சேவைகள், போக்குவரத்து மற்றும் மின்னணு வர்த்தக தளங்கள் உள்ளிட்ட பல்வேறு வணிகத் துறைகளில் ரூபே (RuPay) மற்றும் UPI வழியாக டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேலும் விரிவுபடுத்த அரசு, RBI மற்றும் NPCI இணைந்து செயல்பட்டு வருகின்றன.

# வெற்றியும் தோல்வியும்

- வெங்கட் பிரசாத், D.
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

**சதுரங்க வேட்டை**

27வது ஆசிய இளைஞர் சதுரங்க சாம்பியன்ஷிப் (27th Asian Youth Chess Championships 2025) 2025 ஆம் ஆண்டு நவம்பர் 20 முதல் 30 வரை தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்றது. இதில் இந்தியா உட்பட 33 நாடுகளைச் சேர்ந்த 697 இளம் வீரர்கள் பங்கேற்றனர், 49 பதக்கங்களுடன் அதிரடி காட்டியது இந்தியா.

மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த மகேந்திர பிரதாப் ஷர்மா தங்கம் வென்ற நிலையில் தமிழகத்தைச் சேர்ந்த தமிழமுதன் ஒரு வெள்ளி மற்றும் வெண்கலத்தை வென்றார்.

**மழலையில் மைல்கள்:**



சர்வதேச சதுரங்க கூட்டமைப்பின் அதிகாரப்பூர்வ மதிப்பீட்டைப் பெற்ற உலகின் மிக இளைய வீரராக உருவெடுத்துள்ளார் இந்தியாவின் இளம் குழந்தை சர்வக்யா சிங் குஷ்வாஹா.

வெறும் 3 வயது 7 மாதம் 10 நாட்கள், மட்டுமே ஆன மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த இந்த குழந்தை 27, 29 வயதுடைய சதுரங்க தரவரிசை வீரர்களை வீழ்த்தி சாதனையைப் படைத்துள்ளது. இதற்கு முந்தைய சாதனையும் 3 வயது 10 மாதங்களான அனிஷ் சர்க்கார் என்ற மற்றொரு இந்திய குழந்தையால் படைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அலைபேசி பார்க்கும் நேரத்தை குறைப்பதற்காக சர்வக்யா சிங் சதுரங்க ஆட்டத்திற்கு அறிமுகம் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஹாக்கியில் வெற்றியும் ஏமாற்றமும்**

14 வது ஆண்கள் FIH ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பை, சென்னையில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்திலும், மதுரையில் உள்ள மதுரை சர்வதேச ஹாக்கி மைதானத்திலும் நடைபெற்று வருகிறது.

**காலிறுதியில் கலக்கல்**

சுவிட்சர்லாந்து, சிலி ஆகிய நாடுகளை அதிரடியாக வென்ற இந்தியா, காலிறுதியில் கால்பந்து மற்றும் ஹாக்கியில் என்றும் ஜாம்பவானாகிய பெல்ஜியமை வீழ்த்துமா என்ற பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில், அற்புதமாக விளையாடி 2-2 என்று கோல் கணக்கில் சமன் செய்து பெனால்டி சூட்டுக்கு சென்றது.

பரபரப்பான பெனால்டி சூட்டில் 3-3 என்ற நிலையில், 5 பெனால்டி சூட் வரை வந்தனர். அப்போது இந்தியாவின் கோல் கீப்பர் பிரின்ஸ் தீப் மிக சாதுரியமாகத் தடுத்த நிலையில் இந்தியாவின் அங்கித் கோல் அடித்து இந்தியாவை அரை இறுதிக்கு கொண்டுச் சென்றார்.

**அரை இறுதியில் ஏமாற்றம்:**

பீல்ட் ஹாக்கியில் அதிரடி மன்னனாக விளங்கும் ஜெர்மனியை வீழ்த்துவது மிக கடினம் ஆயினும் இந்தியா நல்ல ஒரு போராட்டத்தை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்த்த நிலையில் 5-1 என்ற கோல்களில் படுதோல்வியை தழுவியது ஏமாற்றமே.

டிசம்பர் 10ஆம் தேதி மாலை 5:30 மணிக்கு சென்னையில் வெண்கல பதக்கத்திற்காக அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது இந்தியா. ஜெர்மனியும் ஸ்பெயினும் இரவு 8 மணிக்கு இறுதிப் போட்டியின் எதிர்கொள்கின்றனர்.

**வெள்ளைப் பந்து கிரிக்கெட்**

சிவப்பு பந்தினை கொண்ட டெஸ்ட் கிரிக்கெட்டில், சுழற் பந்துவீச்சை எதிர்கொள்ளும் திறனை இழந்து வரும் இந்திய அணி தென்ஆப்பிரிக்காவுக்கு எதிராக படுதோல்வியை சந்தித்தது.

இந்நிலையில் வெள்ளை பந்து கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்தி வரும் இந்தியா, ஒரு நாள் போட்டித் தொடரை 2-1 என்னும் கணக்கில் வெற்றி பெற்றது. சீனியர் வீரர்களான, கோலியின் இரு சதங்களும், ரோகித் சர்மா மற்றும் அணித்தலைவர் கே எல் ராகுலின் இரு அரை சதங்களும், இளம் வீரர்களான ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் ஜெய்ஸ்வாலின் தலா ஒரு சதமும் பெரிதும் பேசப்பட்டது. மேலும் இந்தியா டி20 தொடரையும் அதிரடியாக கைப்பற்றும் என்பதே நமது கணிப்பு.

அடுத்த கட்டுரையிலிருந்து டி20 உலகக் கோப்பை 2026ம் ஆண்டிற்கான கண்ணோட்டத்தில் இந்தியாவின் தயார் நிலையை ஆராயவிருக்கிறோம் தொடர்ந்து படியுங்கள்.

# சங்கத் தமிழில் சனாதனம்

— பத்மன்



## அத்தியாயம் 1 : சங்கத் தமிழ் எது?

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று வியந்து போற்றினார் தேசிய மகாகவி சுப்ரமண்ய பாரதியார். இந்த இனிமை என்பது வெறும் சொல்லின் இனிமையை மாத்திரம் அல்ல, பொருளின் இனிமையையும் உணர்த்தி நிற்கிறது. அந்தப் பொருள் பொதிந்த இனிமைக்கு அடித்தளமாய் விளங்குவது சங்கம்.

மற்ற எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பாய், தமிழ் மொழி மாத்திரமே காலம் காலமாய் சங்கம் வைத்து வளர்க்கப்பட்டது, தேவைக்கேற்பச் செம்மையூட்டப்பட்டது. முற்காலப் பாண்டிய மன்னர்கள் மூன்று சங்கங்கள் அமைத்து, முறையாகத் தமிழைப் பேணினார்கள். அந்தச் சங்க காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள், அக்கால வாழ்க்கையை மட்டுமின்றி, எக்காலத்துக்கும் பொருத்தமான வாழ்வின் இலக்குகளையும் சேர்த்தே உரைத்தன.

அதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டாக, புறநானூற்றில் புலவர் கோவூர் கிழார் பாடியுள்ள 31-ஆவது பாட்டின் வரிகள் அமைந்துள்ளன. "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம்" என்று கூறியே அந்தப் பாடலைக் கோவூர் கிழார் தொடங்கியுள்ளார். "சிறப்பாக நம்மால் கடைபிடிக்கப்பட்டு வரும் மரபில், பொருளும் இன்பமும் அறத்தின் வழியிலே, அதனைப் பின்தொடர்ந்து நிற்கின்றன" என்பது இதன் பொருள். அறத்தின் வழியிலே பொருள் ஈட்டி, அறத்தோடு இன்பம் துய்ப்பதன் நோக்கம் - வீடுபேறு எனப்படும் முக்தி என்பது உட்பொருள். இது சனாதனம் காட்டும் தர்ம, அர்த்த, காம, மோட்சம் என்ற புருஷார்த்தமின்றி வேறல்ல.

இவ்வாறாக, சனாதனம் காட்டும் வாழ்வின் நான்கு விழுமியங்களையே சங்கத் தமிழ் இலக்கியங்கள் சாற்றுகின்றன, போற்றுகின்றன. இந்தப் பண்பாடு, வழிவழியாகத் தமது வழிமுறையினருக்கும் செல்ல வேண்டும் என்ற நோக்கில்தான் நம் முன்னோர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள். இதன் மூன்றாவது மற்றும் கடைசிச் சங்கம், இன்றைய மதுரையில் அமைந்திருந்தது. அதற்கு முந்தைய சங்கங்களில், முதல் தமிழ்ச்சங்கம் அமைந்திருந்த தென் மதுரையும், இரண்டாம் தமிழ்ச் சங்கம் அமைந்திருந்த கபாடபுரமும் அடுத்தடுத்து ஆழிப்பேரலைகளால் கடலுள் மூழ்கியதாகக் கருதப்படுகின்றன.

இந்தத் தென் மதுரையும் கபாடபுரமும் எவ்வளவு தொன்மை வாய்ந்தவை என்பதற்கான துல்லியமான காலக் கணக்கீடு இல்லை. இருப்பினும் இரண்டாம் தமிழ்ச் சங்கம் அமைந்திருந்த கபாடபுரம் பற்றிய குறிப்புகள், பொ.மு. 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சாணக்கியர் இயற்றியிருக்கும் அர்த்த சாஸ்திரம் நூலிலும் அதற்கு முந்தையதாகக் கருதப்படும் பொ.மு. 7-ஆம் நூற்றாண்டின் வால்மீகி ராமாயணத்திலும் காணப்படுகின்றன.

கபாடம் என்ற சொல்லுக்குக் கதவு, காவல் என்று பொருள். கடலுக்குக் கதவு வைத்தாற்போலவும், கட்டுக்காவல் நிறைந்ததாகவும் இருந்த நகரம் என்பதால் கபாடபுரம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். பாண்டியர்களின் கபாடபுரத்தில் கிடைத்த முத்துக்களைப் புகழ்ந்து பேசும் அர்த்தசாஸ்திரம், அந்த ஊரின் பெயரிலேயே முத்துக்கு கபாடகம் என்று பெயர் ஏற்பட்டதையும் கூறுகிறது.

பொ.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இறையனார் களவியல் உரை என்ற நூலில், மூன்று தமிழ்ச் சங்கங்கள் இயங்கிய காலம் பற்றிய குறிப்பு உள்ளது. அதில் காணப்படும் விவரம் - "காய்சின வழுதி என்ற பாண்டிய மன்னரால் தொடங்கப்பட்ட முதலாம் தமிழ்ச் சங்கம், கடுங்கோன் வரையான 89 அரசர்களால் வழிவழியாக 4,440 ஆண்டுகள் வரை பேணப்பட்டுள்ளது. சிவபெருமான், முருகவேள், அகத்தியர், முரிஞ்சியூர் முடிநாகராயர் உள்ளிட்ட 549 புலவர்கள் இந்தத் தலைச் சங்கத்தில் இடம் பெற்றிருந்தனர், அவர்களையும் சேர்த்து 4,449 புலவர்கள் பல்வேறு பாடல்களை இயற்றியுள்ளனர்."

"இடைச் சங்கமான இரண்டாம் தமிழ்ச் சங்கத்தை வெண்தேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரையான 59 பாண்டிய அரசர்கள் வளர்த்துள்ளனர். 1,500 ஆண்டுகள் நீடித்த இந்த இடைச் சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர், துவரைக் கோமான் (ஸ்ரீகிருஷ்ணர்), கீரந்தையார் உள்ளிட்ட 59 புலவர்கள் வீற்றிருந்ததுடன் அவர்கள் உட்பட 3,700 புலவர்கள் இலக்கியம் படைத்துள்ளனர்."


"கடைச் சங்கம் எனப்படும் மூன்றாம் தமிழ்ச் சங்கத்துக்கு முடத்திருமாறன் முதல் உக்கிரப்

பெருவழுதி வரையான 49 பாண்டிய மன்னர்கள், புரவலர்களாக இருந்துள்ளனர். மதுரை மருதன் இளநாகனார், மதுரை கணக்காயர் மகனார் நக்கீரனார், சேந்தன்பூதனார் உள்ளிட்ட 49 புலவர்கள் வீற்றிருந்தனர், அவர்கள் உட்பட 449 புலவர்கள் பாடல்கள் பாடியுள்ளனர்" என்று இறையனார் களவியல் உரை தெரிவிக்கிறது. இந்த மூன்றாம் சங்கம், பொ.மு. 1500 முதல் பொ.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை நீடித்திருந்ததாகக் கருதப்படுகிறது.

இந்த மூன்று தமிழ்ச் சங்கங்களிலும் இயற்றப்பட்ட பாடல்களும் செய்யுள்களும் கொண்ட இலக்கியங்களே சங்கத் தமிழ் ஆகும். ஆயினும் இருமுறை கடல் கொண்டதால் மிகப் பழமையான தமிழ் இலக்கியங்கள் அழிந்துபோயின. மூன்றாம் தமிழ்ச் சங்கத்தில் புதிய இலக்கியங்கள் படைக்கப்பட்டதோடு, எஞ்சியிருந்த முந்தைய இலக்கியங்களும் சேகரிக்கப்பட்டு அவற்றுடன் தொகுக்கப்பட்டன. சனாதனத்தை மட்டுமின்றி, சங்கத் தமிழையும் காட்டுமிராண்டி பாஷை என்று சாடிய நபரின் வாரிசுகளில் சிலர், தற்போது தமிழறிஞர்களாய் வேடமிட்டுக் கொண்டு, தமிழ்ச் சங்கம் இருந்ததா என்றுகூட சந்தேகம் கிளப்புகிறார்கள். அவர்களுக்கான பதில்......

(தொடரும்)...

# தீர்க்கதரிசி பாரதி



**ஆங்கில கல்வி பயின்றால் நாடு என்னாகும் என்பதை தீர்க்க தரிசனமாக உரைத்த பாரதியை நினைவு கூர்வோம்.**

நெல்லையூர் சென்று அவ்வூணர் கலைத்திறன்
நேருமாறு எனை எந்தை பணித்தனன்
புல்லை உண்க என வாளரிச் சேயினைப்
போக்கல் போலவும், ஊன்விலை வாணிகம்
நல்லது என்று ஒரு பார்ப்பனப் பிள்ளையை
நாடுவிப்பது போலவும், எந்தைதான்
அல்லல் மிக்கதோர் மண்படு கல்வியை
ஆரியர்க்கு இங்கு அருவருப்பாவதை

நரியுயிர்ச் சிறு சேவகர், தாதர்கள்
நாயெனத் திரி ஒற்றர், உணவினைப்
பெரிதெனக் கொடு தம் உயிர் விற்றிடும்
பேடியர், பிறர்க்கு இச்சகம் பேசுவோர்
கருதும் இவ்வகை மாக்கள் பயின்றிடும்
கலை பயில்கென என்னை விடுத்தனன்.
அருமை மிக்க மயிலைப் பிரிந்து இவ்
அற்பர் கல்வியில் நெஞ்சு பொருந்துமோ?

கணிதம் பன்னிரண்டு ஆண்டு பயில்வர், பின்
கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்,
அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவி உளம் காண்கிலார்;
வணிகமும், பொருள் நூலும் பிதற்றுவார்;
வாழும் நாட்டில் பொருள் கெடல் கேட்டிலார்;
துணியும் ஆயிரம் சாத்திர நாமங்கள்
சொல்லுவார் எட்டுணைப் பயன் கண்டிலார்.

கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்,
காளிதாசன் கவிதை புனைந்ததும்
உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்
ஓர்ந்து அளந்ததொர் பாஸ்கரன் மாட்சியும்
நம்பரும் திறலொடு ஒரு பாணினி
ஞான மீதில் இலக்கணம் கண்டதும்
இம்பர் வாழ்வின் இறுதி கண்டு உண்மையின்
இயல்பு உணர்த்திய சங்கரன் ஏற்றமும்;

சேரம் தம்பி சிலம்பை இசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார் அளித்துத் தர்மம் வளர்த்ததும்
பேரருட் சுடர் வாள்கொண்டு அசோகனார்
பிழைபடாது புவித்தலம் காத்ததும்
வீரர் வாழ்த்த மிலேச்சர்தம் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்;

அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்து
ஆங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர்;
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியும் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்,
என்ன குறி மற்றெங்ஙன் உணர்த்துவேன்
இங்கு இவர்க்கெனது உள்ளம் எரிவதே!



# நமக்கான USER MANUAL

இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

## நமது 5 உடல்கள்

வாசக அன்பர்களிடம் ஒரு வேண்டுகோள். இனி விவரிக்கப் போகின்ற விஷயங்கள் மிகவும் முக்கியமானவை. ஆழமானவை. எத்தனையோ முறை பெரியவர்கள் சொல்லக் கேட்டும் சொந்தமாக படித்தும்கூட கீழ்க்கண்ட விஷயங்கள் மனதில் தங்குவது சிரமமாகவே இருக்கின்றது. எனவே சற்றே ஊன்றிப் படித்து கிரகித்துக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். இளைஞர்களுக்கும், எல்லோருக்குமே பயன்தரக் கூடிய விஷயங்கள். இந்த தொடர்களை சேகரித்து வைத்துக்கொள்ளுதல் நலம்.

நமது 5 உடம்புகளில் முதலாவதாக உள்ளது கண்ணுக்குத் தெரிகின்ற இந்தப் பருவுடல். குருதி அல்லது இரத்தம், தசைகள் என்கின்ற மாமிசம், (அத்தி) எலும்புகள், நிணம் என்ற (வழும்பு) கொழுப்பால் நிறைந்த மூளை, விந்துவாகிய (சுக்கிலம்) உயிர்சக்தி, அந்த விந்துசக்தியை எலும்புக்குள்ளிருந்து உற்பத்தி செய்யும் மஜ்ஜை, காணும் உலகையும் அதில் நடப்பதையும் மனதாலும் அறிவாலும் உணர்ந்து வேண்டியபோது ஞாபகப்படுத்திக் கொள்ளும் நினைவாற்றல் என்ற மேதை, இவைகளை பல வண்ணங்களில் அழகுற போர்த்தியிருக்கின்ற தோல், இவையனைத்துமே சேர்ந்துதான் உடல் என்றாகிறது. இந்த உருவாக்கமே (உபாதி) இறைவனது அற்புத (பாழ்) வித்தை தான். இந்த உடல் ஒரு அழகிய தேர் (இரதம்) போன்றது. இந்த தேரில் தான் உயிராகிய நாம் அன்றாடம் பயணித்து வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறோம்.



**இரதம் உதிரம் இறைச்சி தோல் மேதை**
**மருவிய அத்தி வழும்பொடு மச்சை**
**பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி**
**உருவ மாலால் உடலொன்று எனலாமே. -**
**திருமூலர்.**

நமக்கான உணவு மண்ணிலிருந்து உண்டாகிறது. உணவால் உடல் போஷாக்கும் சக்தியும் பெற்று வளர்கிறது. எனவே இந்த உடம்பு ஐம்பெரும்பூதங்களில் ஒன்றான மண்ணிலிருந்து உருவானது. 1ஆவதான இந்த பருவுடலுக்குத்தான், இவ்வளவு பாரம், இத்தனை வயது, ஆண் பெண் வேறுபாடு, முதுகெலும்பு முதல் பல எலும்புகள், கை கால்கள், தசைகள், நரம்புமண்டலம், உடலெங்கும் பாய்ந்தோடும் ரத்தம், ரத்த நாளங்கள், இதயம், தலை, மூளை, கொழுப்பு, பல நாளமில்லா சுரப்பிகள், நுரையீரல்கள், ஜீரண உறுப்புக்கள், சிறுநீரக உறுப்புகள், வியர்வையை வெளித்தள்ளும் உறுப்புகள், கண், காது, மூக்கு, வாய், இவையனைத்தையும் சேர்த்து போர்த்தியிருக்கும் பலநிறங்களில் உள்ள தோல் என ஏற்பட்டுள்ளன.

அழிவற்ற உயிராகிய நமக்கு இந்த உலகில் வாழ்க்கையை நடத்துவதற்கு மிகவும் அத்தியாவசியமான கருவி அழியும் இந்த உடல். “நான் இன்ன ஜாதி, இன்ன இனம், உழைக்கிறேன், கஷ்டப்படுகிறேன், அறிவாளி, நான் வாழ்கிறேன்” என்று நினைப்பது, சொல்வது, நம்புவது எல்லாமே இந்த பருவுடலோடு சம்பந்தப்பட்டதுதான். ஆனாலும் கூட மண்ணாலான இந்த உடல் எவ்வளவுதான் போற்றிப் பாதுகாத்தாலும் ஒருநாள் மண்ணோடு மண்ணாக அழிந்துவிடும் என்பதை நாம் அறிந்து கொள்ளவில்லை. எந்தக் கல்வித் திட்டத்திலும் இந்த அடிப்படை அறிவு போதிக்கப்படுவதில்லை. அழியாத உயிருக்கு வெறும் உறைதான் இந்த உடல் என்பதை மறந்து, இதுதான் எல்லாமே என்று மயங்கி நமது உண்மையான சுதந்திரத்தையும் ஆனந்தத்தையும் மறந்து பல துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

மேலே விளக்கப்பட்டுள்ளது வெறும் பருவுடல் மட்டுமே. இதைத் தவிர, பிராணன்களாலான 2வது உடல், எண்ணங்களாலான 3வது மனோமய உடல், அறிவாலான 4வது விஞ்ஞானமய உடல், ஆனந்தமே வடிவான 5வது உடல், ஆக 5 உடல்கள் நமக்கு இருக்கின்றன. 1லிருந்து 5 என எண்ணிக்கை மேலே போகப்போக அந்தந்த உடலில் நுட்பத்தன்மை அதிகரிப்பதோடு பாரமும் குறைகின்றது. **(தொடரும்)...**



# கவலை

**வ ரங்கநாதன்,**
ஆளுமைத் திறன் பயிற்றுநர்

**கவலை மனிதனோடு இயல்பாக உள்ள கலவை. அக்கறை உள்ள இடத்தில் கவலை இருக்கும்.**

ஆங்கிலேயன் ஆண்டது போதும் என விட்டுச் சென்ற பிறகு நாடு எப்படி இருக்குமோ என முன் கூட்டியே டாக்டர் ஹெட்கேவார் கவலைப் பட்டார். ஆர். எஸ். எஸ்-ஐ ஆரம்பித்து ஹிந்து தேசியத்தை மலரச் செய்தார்

பரிவிராஜகராக சுவாமி விவேகாநந்தர் நாடு முழுதும் சுற்றி வந்தபோது ஹிந்துக்களின் அவல நிலையைக் கண்டு துக்கம் தொண்டையை அடைக்க பல இரவுகள் தூக்கம் கெட்டு கவலைப்பட்டதால் சேவைக்கு முன்னுதாரணமாகவும், வழிகாட்டியாகவும் இருக்க ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைத் தொடங்கினார்.

ஆன்மீகப் பெரியவர்களின் பூமியான தமிழகம் போலி நாத்திகத்தால் நாசமாகப் போகிறதே என வீரத்துறவி இராம கோபாலன் கவலைப் பட்டார், அதனால் ஹிந்துக்களுக்காக வாதாட ,போராட, குரல் கொடுக்க ஹிந்து முன்னணியைத் தொடங்கினார்அப்படியென்றால் கவலை நல்லதைதானே செய்கிறது.?

**இப்போது சில உதாரணங்களைப் பார்ப்போம்.**

-கொரோனா தடுப்பூசி போட்டவங்கதான் சீக்கிரம் செத்துப் போறாங்களாம் என்று ஒருவர் ஊசி போட்டுக் கொள்வதையே தள்ளிப்போட்டு வந்தார்.

- வாங்க தேர் வடம் பிடிக்கலாம் என்று அழைத்தபோது அவர் "ஹய்யோ எங்கயாவது தேர் கவிழ்ந்து வீழ்ந்தா? ஆபத்து,நான் வரல்ல" ன்னாரு

-ஏங்க டிரைவர் ! நிறைய ரோட் ஆக்ஸிடன்ட் கேள்விப்படறோம். இந்த பஸ்ஸு ஆக்ஸின்ட்ஆகாம திருவண்ணாமலை போகும் இல்லையா?" ன்னார் ஒரு பயணி.

**இந்தக் கவலை நல்லதை செய்கிறதா?**

அடுத்து என்ன செய்வது என்பதற்கு வழி வகுக்கும் கவலை உண்மையில் ஆக்கம் தரும் கவலை அது பொருத்தமுள்ள கவலை

அடுத்தது செய்ய வேண்டியதையே முடக்கிப்போடும் கவலை தேக்கம் தரும் ஒரு வலை அது பொருத்தமற்ற கவலை.

பொருத்தமற்ற கவலை உடலை வருத்தி உருக்கி விடும். நோய்க்கு இடம் கொடுக்கும்.

பாரதியார் "ஒருவனது முகத்திலுள்ள அழகையும், குளிர்ச்சியையும், இளமையையும் இந்தக் கவலைகளே அழித்துவிடுகின்றன" என்கிறார்.

"நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை"
என்கிறார் பாரதி.

"கவலைப்படாதே சகோதரா! எங்கம்மா கருமாரி காத்து நிப்பா" ன்னாலும், மனசு கேக்க மாட்டாங்குதே? கவலை தொலைய மாட்டேங்குதே ? என்ன செய்ய?

பொருத்தமற்ற கவலை மனசுள் ஊறத் தொடங்கியவுடன் செய்ய வேண்டியவை

1) உடனடியாக தனியறைக்கோ தனியாகவோ சென்று உரத்த குரலில் சொல்லணும் " நான் இப்ப இதைப் பத்தி கவலைப்படறேன். ஆனா எந்த பிரயோஜனமும் இல்லை"

2) வேகமாக நடக்க வேண்டும்; அல்லது ஏதாவது உடல் உழைப்பு வேலையை செய்ய வேண்டும்

3) கவலைக்கு ஒரு உருவம் கொடுத்து பொருளாக்கி, அந்தப் பொருளை தெய்வத்தின் பாதத்தில் வைப்பதாக கற்பனை செய்யணும்.

மேலே சொல்லப்பட்டவைகளில் ஏதேனும் ஒன்றைச் செய்தால் கூடப் போதும். அப்படிச் செய்தால் கவலை அந்த நேரம் கரையும். தொடர்ந்து செய்து வந்தால் கற்பனையான கவலை காணாமல் போய் விடும்.

கவலைப் பற்றி இனி ஏன் உங்களுக்கு கவலை?



# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 5)

இராம . வெங்கடாத்ரி

**தன்னாட்சி**

வெள்ளைக்கார கிறிஸ்தவர்களை எதிர்த்த தேசபக்தர்கள் ஸ்வராஜ்யம், ஸ்வதேசி, ஸ்வதர்மம், ஸ்வதந்திரம் ஆகியவற்றை அடையப் போராடினர். இவற்றை முறையே தன்னாட்சி, தன்தேசியம், தன்னறம், தன்னறிவு என்று மொழிபெயர்க்கலாம்.

1947 ஆகஸ்ட் 15 அன்று நமக்கு ஸ்வராஜ்யம் மட்டுமே கிடைத்து. ஸ்வராஜ்யம் என்பது நம்மை நாமே ஆளுவது. மற்ற மூன்றும் இன்னும் முழுமையாகக் கிட்டவில்லை.

**தன்னறிவு தன்னறம் தன்தேசியம்**

ஸ்வதந்திரம் என்பது தமிழில் மருவி சுதந்திரம் என்று புழக்கத்தில் உள்ளது. தமிழில் சுதந்திரம் என்பதை "விடுதலை" என்ற பொருளில் இப்போது அந்த வார்த்தையைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். தந்திரம் என்பது உபாயம், வழிமுறை, தொழில்நுட்பம் போன்ற பல பொருட்களைத் தரும் சொல். ஸ்வதந்திரம் என்பதை இதன் அடிப்படையில் காணும்போது, இந்த மண்ணிற்கு உகந்த தொழில்நுட்பம், indigeneous Technology, Native Knowledge, Native Intelligence என்று பொருள் கொள்ளலாம். இதையே ஒற்றைச் சொல்லாக தன்னறிவு என்று அழைக்கலாம். ஆத்ம நிர்பர பாரத் என்பது இதன் நீட்சியே ஆகும்.

இந்த மண்ணின் இயல்புக்கேற்ற அறம் ஸ்வதர்மம், அதாவது தன்னறம்.

ஸ்வதேசி என்ற வார்த்தையும் இதே போல மறுவி சுதேசி என்று பயன்படுத்துகிறோம். சுதேசி என்றதும் வெளிநாட்டுப் பொருட்களைப் புறக்கணித்து, பாரத நாட்டின் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும் என்று மட்டுமே நாம் கருதுகிறோம். ஆனால் ஸ்வதேசி என்பது இந்த நாட்டின் உண்மையான தேசியத்தன்மை அதாவது ஹிந்துத் தன்மை என்பதையே குறிப்பிடுகிறது.

1947ல் நமக்கு ஸ்வராஜ்யம் மட்டுமே கிட்டியது. மற்ற மூன்றும் - ஸ்வதேசி, ஸ்வதந்திரம், ஸ்வதர்மம் - நமக்கு இன்னும் முழுமையாகக் கிட்டவில்லை. இந்த நாடு ஹிந்து நாடு என்று உணர்ந்து செயல்பட்டால்தான் இவை அனைத்தையும் பெற்று நமது தேசபக்தர்களின் தியாகத்துக்கு உரிய பலன் கிடைக்கப் பெறுவோம்.

**காவிக்கொடியே தேசியக் கொடி**

நமது நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு பல தேசபக்தர்களால் வெவ்வேறு காலகட்டங்களில் பல்வேறு கொடிகள் தேசியக் கொடியாக முன் நிறுத்தப்பட்டன. சுதந்திரம் அடைவதற்கு முன்பு நமது தேசியக் கொடியை நிர்ணயம் செய்ய 2-4-1931ல் கராச்சியில் நடைபெற்ற மாநாட்டில் 7 பேர் கொண்ட கொடிக் கமிட்டி அமைக்கப்பட்டது. சர்தார் வல்லபாய் படேல், மௌலான அபுல்கலாம் ஆசாத், மாஸ்டர் தாராசிங், ஜவஹர்லால் நேரு, D.B.காலேல்கர், Dr.N.S.ஹர்திகர் மற்றும் Dr.பட்டாபி சீத்தாராமையா ஆகியோர் இந்தக் கொடிக் கமிட்டியில் இடம் பெற்றனர். கொடிக்கமிட்டி மாதிரி வினாத்தாள் ஒன்று தயாரித்து நாடு முழுவதும் உள்ள சமுதாயத் தலைவர்களிடமும், பொது மக்களிடமும் இருந்து தகவல் பெற்று அதைத் தொகுத்து அறிக்கையாகச் சமர்ப்பித்தது.

கொடிக்கமிட்டி தொகுத்த தகவல்களின்படி நாட்டின் பெரும்பாலானோர், காவிக்கொடியையே நமது நாட்டின் தேசியக் கொடியாகப் பரிந்துரை செய்தனர். பகவான் கண்ணன் ஓட்டிய அர்ஜுனனின் தேரிலும், இந்த நாட்டின் கோவில்களிலும், கோட்டை கொத்தளங்களிலும், எல்லா மன்னர்களின் கொடிகளாகவும் காவிக் கொடியே இருந்து வந்துள்ளது.

இஸ்லாமியர்களைத் தாஜா செய்வதற்காக கொடிக்கமிட்டியின் அறிக்கையை கிடாசிவிட்டு, மூவர்ணக் கொடியை தயாரித்து, அதற்கு மத ரீதி இல்லாத வேறு ஒரு விளக்கத்தையும் காங்கிரஸ் தந்தது என்பது தனிக்கதை. ஆனால் இங்கே நாம் கவனிக்க வேண்டியது காவி நிறம்தான் இந்த நாட்டின் தேசியத்தைப் பிரதிபலிக்கும் என்ற கொடிக்கமிட்டியின் அறிக்கையைத்தான். ஹிந்துத்



தன்மைதான் இந்த நாட்டின் தேசியத் தன்மை என்பதற்கு காங்கிரஸ் அமைத்த கொடிக்கமிட்டியின் அறிக்கையே சான்று. இதைக் கருத்தில் கொண்டே ஆர்.எஸ்.எஸ். பேரியக்கத்தில் காவிக் கொடியே குருவாக வழிபடப்படுகிறது.


### காவிக்கொடியும் மூவர்ணக் கொடியும்

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, சுதந்திர பாரத அரசின் கொடியை நிர்ணயம் செய்ய 23-06-1947 அன்று கொடிக்கமிட்டி அமைக்கப்பட்டது. டாக்டர் ராஜேந்திர பிரசாத் தலைமையில், மௌலான அபுல் கலாம் ஆசாத், சரோஜினி நாயுடு, ராஜகோபாலாச்சாரியார், K.M.முன்ஷி மற்றும் B.R.அம்பேத்கர் அடங்கிய குழு மூவர்ணக் கொடியை உறுதி செய்தது. சுதந்திர பாரத அரசின் அடையாளமாக உள்ள திரங்கா என்று அழைக்கப்படும் மூவர்ணக்கொடிக்கு உரிய மரியாதையை நாம் ஒவ்வொருவரும் தர வேண்டும் என்பதை ஆர்.எஸ்.எஸ், வலியுறுத்துகிறது. அதே நேரத்தில், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் இருந்து முன் தோன்றிய காவிக் கொடி நமது தேசியத்தன்மையின் அடையாளம் என்பதையும் நினைவுறுத்துகிறது.

**எவையெல்லாம் இந்த நாட்டின் ஹிந்துத்தன்மையோடு ஒத்துப் போகிறதோ அவை எல்லாம் இந்த நாட்டின் ஆன்மாவோடு இரண்டறக் கலந்து நிற்கின்றன.**

### உணர்வு பூர்வமானது தேசம்

குடும்பம் என்பது கட்டடம் அல்ல, அது உணர்வு பூர்வமானது. குடும்ப அங்கத்தினர்கள் பிரிந்து வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தாலும் உணர்வால் ஒன்றுபடுகிறார்கள். தேசம் என்பதும் குடும்பத்தைப் போன்றதோர் ஒருமித்த உணர்வு. ஆயிரம் ஆண்டுகளாக இஸ்ரேல் என்ற நாட்டிற்கு நிலப்பரப்பு இல்லை, வாழ இடம் இன்றி உலகம் முழுவதும் நாடோடிகளாக இஸ்ரேலியர்கள் சிதறிக் கிடந்தனர். ஆனால் இஸ்ரேல் என்ற தேசம் நிலப்பரப்பு இல்லாவிட்டாலும் உணர்வாக மட்டுமே ஓர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறது.



### ஹிந்து நாடு என்ற உணர்வு

இந்த நாடு ஹிந்து நாடு என்று உணரும்போது தேசத்தின் உள்ளார்ந்த ஆற்றல் தட்டி எழுப்பப்படுகிறது. சத்யாகிரஹம் என்ற வார்த்தை இது ஹிந்து நாடு எனற உணர்வை ப்ரதிபலித்ததாலேயே பெருவெற்றி பெற்றது.

இது ஹிந்து நாடு என்ற உணர்வின் மறு உருவம்தான் வந்தேமாதரம். “மாதாஹம் பிருத்வி, புத்ரோஹம் ப்ருதிவ்யா” என்று பூமியை தாயாகப் பார்ப்பது இந்த மண்ணின் மரபு. “ஜனனி ஜன்மபூமிஸ்ச” என்ற வால்மீகி ராமாயணப் பாடல், நாம் பிறந்த பொன்னாட்டைப் பெற்ற தாய்க்கு நிகராகக் கூறுகிறது. இந்த நாட்டின் ஆன்மாவான ஹிந்துத் தன்மையில் இருந்து உருவானதாலேயே வந்தேமாதரம் என்ற மந்திரச் சொல் லட்சக்கணக்கானோரை நாட்டிற்காகத் தியாகம் செய்யத் தூண்டியது.

இந்த நாட்டின் நதிகள், மொழிகள் அனைத்தும் தாயாகப் பார்க்கப்படுவது நமது பாரம்பரியம். காலையில் எழுந்ததும் பூமி வந்தனமாகச் சொல்லப்படுவது ஸ்ரீசூக்தத்தில் உள்ள “சமுத்ர வஸனே தேவி” என்ற மந்திரம். மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை எழுதிய “நீராரும் கடல் உடுத்த நில மடந்தை” என்ற வரிகள் பிராதஸ்மரணம் என்று அழைக்கப்படும் இந்த மந்திரத்தின் line by line தமிழாக்கமாகவே அமைந்திருப்பது திராவிட சித்தாந்தம் ஒப்புக் கொள்ளவேண்டிய ஒரு ஆச்சரியமான உண்மை.

எவையெல்லாம் இந்த நாட்டின் ஹிந்துத்தன்மையோடு ஒத்துப் போகிறதோ அவை எல்லாம் இந்த நாட்டின் ஆன்மாவோடு இரண்டறக் கலந்து நிற்கின்றன. மக்களின் வாழ்வில் இயல்பாக ஒன்றிக் கலந்து விடுகின்றன.

### ஒரே சொல்லின் பல வடிவங்கள்

இது வரை நாம் பார்த்ததில் இருந்து பாரதம், ஹிந்துஸ்தானம், ஹிந்து நாடு, ஹிந்து ராஷ்ட்ரம், பாரத மாதா, வந்தேமாதரம், காவி நிறம் இவை அனைத்தும் ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்கள் என்பதை அறியலாம்.

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் - பகுதி 3

- ஏழுமலை




**இரண்டாவது பாரதி**

மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படுபவர் இந்து முன்னணி - நிறுவன அமைப்பாளர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள். நமது நாடு சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் அவர் எழுதிய பாடல் இரவு கழிந்தது இரவி எழுந்தான். அந்தப் பாடலைப் பற்றிய ஒரு சிறிய அறிமுகத்தை ஏற்கனவே பார்த்தோம். அந்தப் பாடலின் விரிவான விளக்கத்தை, இந்த பகுதியிலும், அடுத்து வரும் பகுதிகளிலும் காண்போம்.

**இசை வடிவம்**

இந்தப் பாடலை இயற்றிய ஸ்ரீ.இராம கோபாலன் ஜி அவர்கள், கர்னாடக சங்கீதத்தில் மோகன ராகத்தில் அருமையான இசை வடிவத்தையும் இந்தப் பாடலுக்கு அமைத்திருக்கிறார். பாடலின் கருத்துக்களுக்கு மெருகூட்டும் வகையில் இசை வடிவம் அமைந்திருப்பதுடன் பாடுவதற்கு எளிமையாகவும் இருப்பது இதன் சிறப்பு. எந்த மெட்டில் இசை அமைத்துப் பாடினாரோ அதே இசை வடிவில் ஸ்ரீடிவியின் யூடியூப் பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள பாடலை, கட்டுரையின் கடைசியில் உள்ள QR Code ஐ scan செய்து கேட்கலாம்.

**தை பிறந்தால் வழி பிறக்கும்**

சூரியன் ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வொரு மாதம் சஞ்சரிக்கிறார். அதில், மகர ராசிக்குள் அவர் நுழையும் நாளே தைப்பொங்கல். தமிழ் நாட்டில் நாம் கொண்டாடும் பொங்கல் விழா நாடு முழுவதும் மகர சங்கராந்தி என்ற பெயரில் கொண்டாடப்பட்டு வருகிறது. மார்கழி மாதத்தின் கடைசி நாளான போகியன்று பழைய பொருள்களை தீயிட்டுக் கொளுத்துவதும் வீட்டின் தூய்மைக்காக வேண்டாத பழமையை விலக்கி, புதுமையை வரவேற்கும் விதமாக பொங்கல் அமைந்துள்ளது. அதனால், வாழ்வில் முன்னேறுவதற்கான வழிவகை உண்டாவது இயற்கை. இதனால்தான், தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற சொல்வழக்கு ஏற்பட்டது. வயலில் விளைந்த புது நெல்லில் குத்திய புதிய அரிசியில் பொங்கலிட்டு, சூரியனுக்குப் படைக்கும் பொங்கல் திரு நாளில் இருந்து எல்லா மங்களங்களும், நன்மைகளும், புதுமைகளும் வந்து சேரும் என்பது ஐதீகம்.

**பொங்கல் விழாப் பாடல்**

ஆர்.எஸ்.எஸ். பேரியக்கத்தில் ஆண்டுதோறும் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. 1947ல் நாடு சுதந்திரம் அடைந்ததும் நடந்த பொங்கல் திருநாளின் விழாப் பாடலாக இரவு கழிந்தது இரவி எழுந்தான் என்ற பாடலை இராம கோபாலன் ஜி அவர்கள் பாடியுள்ளார். தை மகரத்தில் சூரியன் உதித்ததால் இரவு குறைய ஆரம்பிக்கும், பகல் பொழுது கூடும் என்று சங்கராந்தி செய்தியாக இந்தப் பாடல் பொருள்பட்டாலும் உட்பொருளாக இது வரை இருந்த இருள் நீங்கி ஒளிரும் பாரதமாகிய சூரியன் எழுந்ததாக இந்தப் பாடலை அமைத்துள்ளார்.

**இரவு கழிந்தது இரவி எழுந்தான்**

ரவி என்பது சூரியனைக் குறிக்கும் சம்ஸ்க்ருதச் சொல். தமிழில் முதல் எழுத்தாக ஒரு சொல்லில் "ர" வரும்போது அதற்கு முன் "இ" (உதாரணம்: இராமன்) அல்லது "அ" (உதாரணம்: அரங்கனாதன்) ஆகிய எழுத்துக்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது தமிழ் இலக்கண விதி. அந்த வகையில் ரவி என்பதை இரவி எனத் தமிழ்ப்படுத்தி, இரவி இரவு என்ற பதங்களின் மூலம் விளக்கியது ஆசிரியரின் கவித்துவத்தை வெளிப்படுத்துகிறது.

**கிருத யுகம்**

சத்திய யுகம் என்று அழைக்கப்படும் கிருத யுகம், நான்கு யுகங்களில் முதலாவது. 17,28,000 ஆண்டுகளைக் கொண்ட கிருத யுகம் உண்மையின் காலமாக இருந்தது. முதல் யுகமான கிருத யுகத்தில் தருமமும் சத்தியமும் நான்கு கால்களுடன் நிற்பதால் மனிதர்களுக்குத் துன்பம் என்பதே கிடையாது. கிருத யுகம் என்பது பொற்காலம் எனக் குறிப்பிடப்படுகிறது. அடுத்தடுத்த யுகங்களில் களவு, பொய், வஞ்சகம் ஆகியவற்றால், அறவழியில்லாத வகையில் சம்பாதிக்கப்பட்ட பொருள், கல்வி அறிவால், தர்மம் என்பது ஒவ்வொரு காலாக (பகுதியாகக்) குறைந்து, கலியுகமான இன்றைய கால கட்டத்தில் அதர்மமே மேலோங்கி நிற்கிறது.

**முதலாம் பாரதியின் கிருதயுகம்**

மகாகவி சுப்ரமணிய பாரதியார்

**"பொய்க்கும் கலியை நான் கொன்று**
**பூலோ கத்தார் கண்முன்னே**
**மெய்க்கும் கிருத யுகத்தினையே**
**கொணர்வேன் தெய்வ விதி இஃதே"**

என்று பாடுகிறார்.

மானிட வர்க்கத்தின் லட்சிய வாழ்க்கையை, புதிய சமுதாய வாழ்க்கையை , "கிருதயுகம்" என்ற சொல்லால் சுப்ரமணிய பாரதி அழைக்கிறார். பாரதி "கிருதயுகம்" என்ற சொல்லைப் பல இடங்களில் உபயோகித்திருக்கிறார். "அமர யுகம்", "சத்ய யுகம்" என்ற சொற்களையும் அதே பொருளில் இரண்டொரு இடங்களில் உபயோகித்திருக்கிறார்.

பாரதியார், விநாயகர் நான்மணி மாலையில்

**"நல்ல குணங்களே நம்மி டை அமரர் பதங்களாம், கண்டீர்,**
**பாரிடை மக்களே! கிருதயுகத்தினைக் கேடின்றி நிறுத்த**
**விரதம் நான் கொண்டனன்"** என்று பாடுகிறார்.

இங்கே பாரதி மனித குலத்தை, கலியுகம் முடியும் வரை காத்திருக்கச் சொல்லவில்லை. பொய் வாழ்வை, போலி வாழ்வை, ஆதாரமாகக் கொண்ட கலியுகத்தை ஒழித்துக்கட்டி, மானிடத்தின் வெற்றியான கிருதயுகத்தினை "பூலோகத்தார் கண்முன்னே" நிலை நாட்டுவேன் என்று உறுதி கூறுகிறார்.

**இரண்டாம் பாரதியின் கிருத யுகம்**

சூரியன் ஏழு குதிரைகளின் மீது அமர்ந்து பயணிப்பார். பாரதம் என்கின்ற ஒளி வீசும் சூரியன் குதிரை (புரவி) மீது அமர்ந்து கிருத யுகப் பயணத்தைத் தொடங்கி விட்டதாக திரு. இராம கோபாலன் ஐயா இந்தப் பாடலில் குறிப்பிடுகிறார். முதலாம் பாரதி கூறியதை வழிமொழியும் விதமாக, கிருத யுகத்தின் ஒளிக் கிரணங்களைப் பாய்ச்சும் கிருத யுகச் சூரியனாக பாரத நாடு எழுந்து விட்டதாக இந்தப் பாடலில் உறுதிபடக் கூறியிருப்பது, முதலாம் பாரதியின் கருத்தை இரண்டாம் பாரதி அப்படியே இந்த இடத்தில் பிரதிபலித்திருப்பதை உணர முடிகிறது.

**தமஸோ மா ஜ்யோதிர் கமய**

தமஸோ மா ஜ்யோதிர் கமய

**तमसोमा ज्योतिर् गमया। - बृहदारण्यक उपनिषद्** 1.3.28.

என்பது ப்ருஹதாரண்யக உபநிஷதத்தில் உள்ள சாந்தி மந்திரம். இருளில் இருந்து ஒளிக்கு நம்மை இட்டுச் செல்ல இறைவனை வேண்டும் மந்திரம் இது. இங்கே இருள் என்பது அறியாமை, மயக்கம், குழப்பம், அதர்மம் என்ற பொருளையும், ஒளி என்பது தூய அறிவு, ஞானம் என்ற பொருளையும் தருகிறது. இந்தப் பாடலின் மையக் கருத்தாக உள்ள இரவு கழிந்து இரவி எழுந்தது என்பது இந்த வேத மகா வாத்தியத்தின் பொருளையும் உணர்த்துகிறது.

**பாரதம் என்பதன் பொருள் ஒளிரும் சூரியன்**

சம்ஸ்க்ருத மொழியில் "பா" என்றால் ஒளி. ஒளியை வீசுவதால் சூரியன் "பானு" என்று அழைக்கப்படுகிறார். பாரதம் என்றால் ஒளி வீசும் ஞானச் செல்வத்தைத் தன்னகத்தே கொண்ட நாடு என்றும் பொருள் கொள்ள முடியும். பாரத சூரியன் என்ற பதத்தின் இந்தக் கருத்தையும் நமக்கு குறிப்பிடுகிறார் பாடல் ஆசிரியர்.

இன்று சிந்தித்த பாடல் வரிகள்

இரவு கழிந்தது இரவி எழுந்தான்
கிருதயுகக் கதிர்தூவிப் புரவி யமர்ந்தான்
வையகமே இனி புதுமைகள் காண்பாய்
பாரத சூரியன் மகிமைகள் காண்பாய்

ஆயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த
ஹிந்து மஹாசக்தி எழுந்தது சீறி
நல்லோரை வாழ்த்திட தீயோரை வீழ்த்திட
போர்க்கோலம் பூண்டு எழுந்தது காண்பாய்

வேதமுழக்கம் ஞான விளக்கம்
நரவுருவில் நடமாடிடும் தெய்வம்
கதையல்ல மிகையல்ல கற்பனையல்ல
கண்ணாரக் காண்பாய் நீ சற்றே பொறுப்பாய்.

ஹனுமனின் பக்தி சீதையின் கற்பு
ராமனின் அறவர சாட்சியும் காண்பாய்
வீமனும் பார்த்தனும் தருமனும் கண்ணனும்
மீண்டும் இந்நாட்டினில் உலவுதல் காண்பாய்

சங்கரன் மேதை வள்ளுவன் கவிதை
சிவராஜன் வாளுமே மின்னிக் கிளம்பும்
ரஜபுத்ரர் வீரம் சோழர் சீராட்சி
பூமண்டலம் வெல்ல திக் விஜயம் செய்யும்

விஞ்ஞான விந்தையும் மெய்ஞ்ஞான
மேன்மையும்
இன்பங்கள் கோடி இணைந்த நற்காட்சியும்
வீட்டுக்குப் பூட்டுப் போடாத நல் மாட்சியும்
புதுமைகள் பலவும் நீ விரைவினில் காண்பாய்

பற்பல ஆண்டுகள் மோனத் தவத்தால்
கேசவர் மாதவர் புண்ய பலத்தால்
அந்நியன் தீட்டிய அஞ்சனம் நீங்கி
தன்னை உணர்ந்த நல்பாரதம் காண்பாய்

இரவு கழிந்தது இரவி எழுந்தான்
கிருதயுகக் கதிர் தூவிப் புரவியமர்ந்தான்
வையகமே இனி புதுமைகள் காண்பாய்
பாரத சூரியன் மகிமைகள் காண்பாய்

இந்தப் பாடலின் இசை வடிவத்திற்கு இந்த QRCODE SCAN செய்யவும்.

# வெளிச்சம் படாத வேர்கள்

## வீரபாண்டிய கட்டபொம்மனின் தளபதிகள் வெள்ளையத்தேவன், சுந்தரலிங்கம்

யா.சு. கண்ணன்

வீரபாண்டிய கட்டபொம்மனின் தளபதிகளாக வீரமாகச் செயல்பட்ட இருவரைப் பற்றி பார்க்கலாம்.

ஒருவர் வெள்ளையத்தேவன், இன்னொருவர் சுந்தரலிங்கம்.

### முதலில் வெள்ளையத்தேவன் பற்றி....

கலெக்டர் ஜாக்ஸன்துரை கடுங்கோபத்தில் இருந்தான். தன்படைபலம், ஆயுதபலம், அதிகாரபலம் எல்லாம் தெரிந்தும்கூட வீரபாண்டியகட்டபொம்மன் “வரி கொடுக்க முடியாது'' என்று சொல்லிவிட்டு வெளியேறுவதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எதிரியின் கோட்டைக்கே வந்து கர்ஜித்துவிட்டுப் போகும் சிங்கத்தைச் சுட்டு வீழ்த்த ஆணையிட்டான்.



ஆனால், எதிர்த்தவர்களின் தலைகள் வெட்டப்பட்டன.துப்பாக்கி தூக்கி வந்த வீரர்கள் பலர் கட்டபொம்மனின் வாளுக்கு இரையானார்கள். தடைகளைத் தாண்டி கோட்டைக்கு வெளியே வந்தான் கட்டபொம்மன். லெப்டினட் கிளார்க் என்ற வெள்ளைக்காரன் கட்டபொம்மனின் மார்புக்கு நேராக துப்பாக்கியைப் பிடித்தபடி தடுத்தான்.

ஒரு நொடி தாமதித்திருந்தாலும் கட்டபொம்மனின் மார்பில் க்ளார்க்கின் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருக்கும். அந்த நொடியைக்கூட தாமதிக்க விடாமல், கட்டபொம்மனின் போர்படைத் தளபதி மாவீரன் வெள்ளையத்தேவன் க்ளார்க்கின் தலையை வெட்டினான். க்ளார்க்கின் தலையை கட்டபொம்மனின் காலுக்குக் கீழே விழச் செய்தான். சுற்றி நின்ற படைவீரர்கள் நடுங்கிப்போய்விட்டார்கள்.

வெள்ளையத்தேவனின் துணிச்சலைக் கண்டு “என் உயிர் காத்த வெள்ளையத் தேவா?'' என்ற கட்டபொம்மன் அவனை ஆரத் தழுவிக் கொண்டான். வீரன் வெள்ளையத் தேவன் மட்டும் அன்று அந்த துணிச்சலான முடிவை எடுக்காமல் இருந்திருந்தால், கட்டபொம்மன் உயிர் அன்றே போயிருக்கும். கட்டபொம்மனின் வரலாறு வேறுவிதமாக எழுதப்பட்டிருக்கும்.

சேது நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க இராமலிங்க விலாசம் கோட்டை வாயிலில்தான் இந்த வீரப்போர் நிகழ்ந்தது. இந்த சண்டையைத்தான் வீரத்தளபதி வெள்ளையத் தேவனின் வீரகாவியம் பேசும் சண்டையாகப் போற்றினர் நாட்டார் வரலாற்று அறிஞர்கள். “தலவாசல் சண்டை” என்று கும்மிபாடினார்கள் நாட்டுப்புறமக்கள். அந்த நன்றியை கட்டபொம்மன் மறக்கவில்லை. பாஞ்சாலங்குறிச்சியையே விழாக்கோலம் ஆக்கினான். வெள்ளையத்தேவனுக்காக மாபெரும் விழா ஒன்றை நடத்திக்காட்டினான். தனக்கு உயிர்ப்பிச்சை அளித்த வெள்ளையத்தேவனை”என் தந்தை வெள்ளையத்தேவன்'' என்று அழைத்தான். வெள்ளையத்தேவனுக்கு “பகதூர்'' என்ற பட்டம் கொடுக்கப்பட்டது.

சேதுபதி சமஸ்தானத்திற்கு உட்பட்டது சாயல்குடி என்ற கிராமம். இதன் தலைவர் மங்களத்தேவர். சிற்றரசர்களுக்குரிய அத்தனை சிறப்புகளையும் வீரத்தையும் கொண்டவர். இவருடைய மகன்தான் வெள்ளையத்தேவன் என்கிறார்கள்.

எட்டயபுரம் மன்னர் தனக்கு அளித்து வந்த இன்னல்களை எடுத்துக் கூறி, கட்டபொம்மன் மங்களத்தேவரிடம் உதவி கேட்டு வந்தான். “உதவி கேட்டு வந்தவர்களுக்கு இல்லை என்னாமல் உதவுவது நம் பண்பாடு”என்ற நெறியில், அவருக்கு உதவ தன் மகன் வெள்ளையத்தேவனை அனுப்பியதாக ஒரு செய்தி கூறுகிறது. தந்தையின் ஆணைப்படி தனயன் வெள்ளையத் தேவன் கட்டபொம்மனுக்கு உதவ வந்ததாகவும், வந்த இடத்தில் வெள்ளையத்தேவனின் வீரம் கண்டு, அவனையே தன் படையில் தலைமைத் தளபதியாக நியமித்துக்கொண்டதாகவும் சிலர் கூறுகிறார்கள்.

இன்னொரு கதையும் உண்டு. சிறுவயதில் கட்டபொம்மன் தன் தந்தையுடன் காட்டுக்கு வேட்டையாடப் போனதாகவும் அங்கு கண்டெடுக்கப்பட்ட குழந்தையை அரண்மனையில் வைத்து வளர்த்ததாகவும், அக்குழந்தைதான் பிற்காலத்தில் வெள்ளையத்தேவனாக வளர்ந்து, படைத் தளபதி அளவிற்கு உயர்ந்ததாகவும் ஒரு கதை வழக்கில் உண்டு. அந்த செஞ்சோற்றுக் கடனுக்காகத்தான் இறுதிவரை கட்டபொம்மனோடு இருந்து வெள்ளையர்களை எதிர்த்துப் போரிட்டு பல வெற்றிகளைப் பெற்றுத் தந்ததாகவும் செவி வழிச்செய்திகள் கூறுகின்றன.

வெள்ளையத்தேவன் பிறப்பிலேயே வீரம் கொண்டவன். இளம் வயது முதல் வேல் சண்டையில்

அதிக ஈடுபாடு கொண்டவன். அவன் போருக்குப் போகும் முன் சேவல்போர் நடத்துவானாம். அதில் அவன் சேவல் வெற்றி பெற்றால் போரில் வெள்ளையத்தேவனை யாராலும் வெல்ல முடியாது. எந்த போரிலும் தோற்காத அவனது சேவல் அன்று நடந்த சண்டையில் தோற்றதால்தான் வெள்ளையருக்கு எதிராக நடந்த போருக்குப் போகவிடாமல் அவன் மனைவி வெள்ளையம்மாள் தடுத்திருக்கிறாள். “போகாதே போகாதே என் கணவா. பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்” என்ற ஒப்பாரிப்பாடல் இடம் பெற்றுள்ள நாட்டார் பாடலில் இச்செய்தியுள்ளது. “பகதூர் வெள்ளை” என்ற பெயரில் உள்ள நாட்டுப்பாடலிலும் இந்த ஒப்பாரிப்பாடல் உள்ளது.

தேசிங்கு ராஜனின் பஞ்சக் கல்யாணி குதிரை போன்றதுதான் வெள்ளையத்தேவனின் குதிரையும். “ஒட்டப்பிடாரம் வழிதனிலே, ஓடி வருதாம் பேயக்குதிரை” என்று அந்தக் குதிரையின் வீரத்தைப் பேசாதவர்களே இல்லையாம்.1799 செப்டம்பர் 1-ஆம் தேதி திருச்செந்தூரில் நடந்த ஆவணி மாதத் திருவிழாவிற்கு கட்டபொம்மனும் ஊமைத்துரையும் சென்ற சமயம் ஒற்றர்கள் மூலம் இதை அறிந்த கர்னல் பானர்மேன் தலைமையில் பரங்கிப்படையினர் பாஞ்சாலங்குறிச்சியை முற்றுகையிட்டனர்.



பெரும்படை, பீரங்கிகள், துப்பாக்கிப் படைகள், குதிரைப் படைகள் என்று ஆயிரக்கணக்கில் கொண்டு வந்து குவித்திருந்தான் ஆங்கிலேயன். பாஞ்சாலங்குறிச்சியில் இருந்ததோ மரபு ரீதியான ஆயுதம் தாங்கிய ஆயிரம் வீரர்கள் என்றாலும் அஞ்ச வில்லை தமிழ்ச்சிங்கங்கள். காரணம் அதற்குத் தலைமை தாங்கியது தலைமைத் தளபதி வெள்ளையத் தேவன். எதிரிகள் படையை அவன் தாக்கியதைக் கண்டு பரங்கியர் பயந்து பின்வாங்கினார்கள். பீரங்கிக்குண்டுகளிடமிருந்து கோட்டையைக் காக்க வெள்ளையத்தேவன் பட்ட பாட்டை எழுத்தில் எழுதமுடியாதாம்.

நூற்றுக்கணக்கான துப்பாக்கி வீரர்கள் அவன் மார்பை குறிவைத்தார்கள். ஆனால், எதிரிகளின் குண்டுகள் அவன் மார்பில் பாய்ந்தபோதும் விடாமல் தொடர்ந்து எதிரிகளை அவன் வாளுக்கு இரையாக்கிக்கொண்டே வந்தான். செய்தி கேள்விப்பட்டு கட்டபொம்மனும் ஊமைத்துரையும் திருச்செந்தூரில் இருந்து பாஞ்சாலங்குறிச்சி வந்ததை அறிந்தான். அதுவரை மார்பிலே குண்டுகளைத் தாங்கி, குத்தப்பட்ட வேலையும் பொருட்படுத்தாது பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் பத்திரமாக ஒப்படைத்தான். அடுத்தநொடி அந்தப் போர்க்களத்திலேயே வீரமரணம் எய்தினான் வெள்ளையத்தேவன்.துப்பாக்கிக் குண்டுகளை முத்தமிட்டபோதும் இறுதிவரை மானத்தை இழக்காமல் மரணம் தொட்ட மாவீரன் வெள்ளையத்தேவன்.

## கருப்பண்ணன் சுந்தரலிங்கம்

1770 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் தேதியன்று, பாஞ்சாலங்குறிச்சி அருகில் உள்ள கவர்னகிரி கிராமத்தில் பிறந்தார்.தந்தை காலாடி என்ற கட்டகருப்பண்ணன்,தாயார் முத்தருளி அம்மாள்.

தனது ஊரில் உள்ள கண்மாயையை ( குளத்தை ) பக்கத்து பாளையக்காரர்கள் மறிந்து கட்டும்பொழுது ஏற்படும் சண்டையில், மிகத் திறமையாகப் போரிடுவதால் அம்முயற்சி தடுக்கப்படுகிறது. இப்போரில் அவர் காட்டிய வீரத்தை அறிந்த கட்டபொம்மன், தனது ஒற்றர் படைக்குத் தளபதியாக்கினார்.தனது வீரத்தாலும் மதிநுட்பத்தாலும் சீக்கிரமே கட்டபொம்மனின் அனைத்துப் படைகளுக்கும் தளபதியாக உயர்ந்தார் சுந்தரலிங்கம்.

சுந்தரலிங்கத்தின் பொறுப்பில் தான் கட்டபொம்மனின் தானியக்கிடங்கும், வெடிமருந்துக் கிடங்கும் இருந்தன. கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் முட்டல், உரசல் உருவானபோது வெள்ளையத்தேவனும், சுந்தரலிங்கமும் கட்டபொம்மனுக்கு பக்கபலமாக விளங்கினர்.

கட்டபொம்மனை பல நாட்கள் அலைக்கழிய வைத்து ராமநாதபுரம் அரண்மனையில் ஜாக்சன் துரை சந்தித்தபோது, வெள்ளையத்தேவன் மட்டுமின்றி சுந்தரலிங்கமும் உடனிருந்தார். அந்தச் சந்திப்பிற்கு பின்பு பெரும் சண்டையாக மாறியபோது சுந்தரலிங்கமும் தனது வாளால் பல வெள்ளைச் சிப்பாய்களை வீழ்த்தினார். இந்த நிகழ்விற்குப் பிறகு கட்டபொம்மனை அழிக்க வெள்ளையர்கள் 1799ல் பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுத்தார்கள். ஆங்கிலேயப் படை பாஞ்சாலங்குறிச்சிக்கு வெளியே கரிசல் காட்டில் முகாமிட்டிருந்தது. பீரங்கிகள், வெடிகுண்டுகள், துப்பாக்கிகளுடன் வெள்ளையர்களின் படை குவிந்திருந்தது.

1799 செப்டம்பர் 8ம் தேதி சுந்தரலிங்கம் தனது முறைப்பெண்ணான, வடிவுடன் ஆடு மேய்ப்பவர்களைப் போல வேடமணிந்து, வெள்ளையர்களின் வெடிமருந்து கிடங்குப் பகுதிக்குப் போனார். தீப்பந்தத்தைக் கொளுத்தியபடி சுந்தரலிங்கமும்,வடிவும் வெடிமருந்துக் கிடங்கிற்குள் பாய்ந்தார்கள். பலத்த வெடிச்சத்தத்துடன் கிடங்கு தீப்பிடித்து எரிந்தது. சுந்தரலிங்கமும், வடிவும் இந்திய சுதந்திரப் போரின் முதல் தற்கொலைப் படைத்தாக்குதல் தொடுத்தவர்களானார்கள். அவர்களது வீரமரணத்திற்கு அடுத்த நாள் நடைபெற்ற போரில் பாஞ்சாலங்குறிச்சி ஆங்கிலேயர் வசமானது.

## மஹான்களின் தரிசனம்

# நாமசங்கீர்த்தனம் முறையை வகுத்த மஹான் ஸ்ரீசத்குரு ஸ்வாமிகள்

- நிதீஸ்வரன்

கலியுகத்தில் இறைவனை அடையும் வழியாக நம் ஆன்றோர்கள் கூறியிருப்பது நாமசங்கீர்த்தனம். அப்படிப்பட்ட நாம சங்கீர்த்தனத்தை உலகிற்கு அறிமுகபடுத்தியவர்கள் ஸ்ரீபோதேந்திர ஸ்வாமிகள், ஸ்ரீதர ஐயாவாள், மருதாநல்லூர் ஸ்வாமிகள் ஆவர். இதில் சத்குரு ஸ்வாமிகள் என்று நம்மால் அழைக்கப்படும் மருதாநல்லூர் ஸ்வாமிகள் தான் நாமபஜனையில் பாகவதர்களின் கீர்த்தனைகளை வரிசைப்படுத்தி, மிருதங்கம் போன்ற வாத்தியங்களை இசைத்து மனதை ஒருமுகப்படுத்தி இறைவனை வழிபட ஒரு முறையை ஏற்படுத்தினார். இன்று இங்கு நடக்கும் சீதா கல்யாணம், ராதா கல்யாணம், ருக்மணி கல்யாணம் போன்றவற்றிற்கான பஜனை சம்பிரதாயங்களை உருவாக்கியவர் சத்குரு ஸ்வாமிகள்.

**இந்த மகானின் சரிதத்தைக் காண்போம்.**

ஸ்ரீ சத்குரு ஸ்வாமிகள், ஸ்ரீதர ஐயாவாள் வாழ்ந்த திருவிசநல்லூரில் சேஷு சாஸ்திரிகளுக்கு 1777ம் ஆண்டு குழந்தையாக பிறந்தார். இவருக்கு வேங்கடராமன் என பெயரிட்டனர் பெற்றோர்கள். மூன்று வயது வரை குழந்தை பேசவில்லை இதனால் மனம் வருந்திய பெற்றோரிடம் வீட்டுக்கு வந்த ஒரு பெரியவர், இந்தக் குழந்தையிடம் தெய்வீக சக்தி இருக்கிறது. இவன் நிச்சயம் பேசுவான் அதோடு ஒரு மஹானாகவும் விளங்குவான் என்றார். அச்சமயத்தில், திருவிசநல்லூர் அருகிலுள்ள மணஞ்சேரியில் கோபாலசுவாமி என்ற பக்தர் இருந்தார், அவரிடம் குழந்தையை தந்தை அழைத்துச் சென்ற போது, அவர் குழந்தையின் வலது காதில் ராம என்ற மந்திரத்தை ஜெபித்தார். அதைக் கேட்ட குழந்தை வேங்கடராமன் பரவசம் அடைந்தவனாய் பேசும் திறன் பெற்றான்.


ஏழு வயதில் தந்தை உபநயனம் செய்து வைத்த போது, பிரம்மோபதேச சமயத்தில் மனதிற்குள் ராமதரிசனம் பெற்றான். அன்று முதல் எப்போதும் ராமநாமமே ஜெபித்தான். தந்தையை குருவாக ஏற்று வேதம், சாஸ்திரம் கற்றான். தாயாரிடம் இதிஹாச புராணங்களையும், போதேந்திராள் மற்றும் ஸ்ரீதர ஐயாவாள் போன்ற மஹான்களின் வாழ்க்கை வரலாற்றையும் அறிந்து கொண்டான். சங்கீத வித்வானிடம் இசைப்பயற்சியும் பெற்றான். அதன்பின், சுப்புலக்ஷ்மி என்ற அலமேலுவை மகனுக்கு பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர்.

தினமும் லட்சத்து எட்டாயிரம் ராமநாமம் ஜெபித்து வந்த ஸ்ரீசத்குரு ஸ்வாமிகள் அயோத்தி சென்று வர எண்ணி நடந்தே யாத்திரை புறப்பட்டார். உஞ்ச விருத்தி எடுத்து நாமசங்கீர்த்தனம் செய்து கொண்டே ஆந்திராவில் உள்ள தலப்பாக்கம் கிராமத்தை அடைந்தார். அங்கு, ஸ்ரீ அன்னமாச்சாரியார் மற்றும் அவரது பேரன் சின்னையா சுவாமிகள் நிறுவிய முறைப்படி நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்த பாகவதர்களின் கூட்டத்தை விட்டு வெளியேற முடியாததால், அவர் பல மாதங்கள் அந்த கிராமத்தில் தங்கினார். அவர் அங்கு தங்கியிருந்தபோது, ஓய்வு இல்லாத சாதுக்களுடன், எப்போதும் பாகவதர்களின் கூட்டத்திலேயே தங்கியிருந்ததால் ஏற்படும் மகிழ்ச்சியை அவர் அனுபவித்து வந்தார். அங்குள்ள சாதுக்கள் சத்குரு சுவாமிகள் மீது அளவற்ற பக்தியை வளர்த்துக் கொண்டனர்.

அந்த நாட்களில், திருப்பதிக்கு யாத்திரை செல்லும் அனைத்து பாகவதர்களும் அந்த கிராமத்தில் தங்குவது வழக்கமாக இருந்தது. பல்வேறு இடங்களில், பல்வேறு மரபுகளில், பல்வேறு பாகவதர்களால் பாடப்பட்ட பல்வேறு மொழிகளில் உள்ள பஜனைகளை அனுபவிக்க சுவாமிகளுக்கு வாய்ப்பு கிடைத்தது. பல்வேறு அமைப்புகளின் சாரத்தை உள்ளடக்கிய ஒரு சுவாரஸ்யமான புதிய பஜனை முறையை நிறுவி அனுபவிக்க அவர் விரும்பினார். அங்கு தங்கியிருந்தபோது, அவர் பல புதிய மொழிகளைக் கற்றுக்கொண்டார். ஜெயதேவரின் கீத கோவிந்தத்தில் உள்ள பாடல்களை அவர் இணைத்தார்.

அச்சமயத்தில் ஒரு நாள் இரவில், போதேந்திர ஸ்வாமிகள் கனவில் தோன்றி, “உன் பிறப்பின் நோக்கம் அறிந்த பின்னும் நீ ஏன் அயோத்தி செல்கிறாய்? உன் ஊருக்குச் சென்று நாமசங்கிரத்தனத்தை பரப்ப ஏற்பாடு செய்” என்றார். உடனே ஸ்வாமிகள் மருதாநல்லூர் திரும்பி விடுகிறார்.

அதன் பின், ஆந்திரா, கர்நாடகா, ஒரிஸா மற்றும் பல இடங்களில் வெவ்வேறு மொழிகளில் இருந்த துளசிதாஸ், சூர்தாஸ், அன்னமாச்சார்யா, ஜெயதேவரின் கீத கோவிந்தம், போதேந்திர ஸ்வாமிகள், பத்ராசலம் ராமதாசர் மற்றும் பலரது பாடல்களை ஒன்றிணைத்து ஒரு அழகான தக்ஷிண பாரத ஸம்ப்ரதாய பஜனை முறையை தோற்றுவித்தார். அதை அந்த ஊரில் உள்ள எல்லா பெரியவர்களுக்கும்,



குழந்தைகளுக்கும் கற்றுத் தந்தார். மருதாநல்லூரில் ஒரு மடத்தையும் ஸ்தாபித்தார்.

இதற்கெல்லாம் காரணமாக இருந்த தனது குருவான போதேந்திர ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தைத் தேடி இவர் கோவிந்தபுரம் சென்ற போது, சமாதி எங்கிருக்கிறது எனத் தெரியவில்லை. அவரது சமாதியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் 9 நாட்கள் உண்ணாமல், உறங்காமல், அசையாமல் ராமநாம ஜபம் செய்தார். 10வது நாள் உத்வேகம் வந்தவராய் காவிரியாற்று மணலில் பல இடங்களில் காது வைத்து கேட்க, ஓரிடத்தில் சிம்ம கர்ஜனையாக ராம் ராம் என்ற நாமம் காதில் கேட்டது. அந்த இடமே மஹானின் ஜீவசமாதி என்பதை அறிந்த ஸ்வாமிகள் தஞ்சை மன்னர் சரபோஜியின் உதவியுடன் அந்த இடத்தில் அதிஷ்டானம் அமைக்க ஏற்பாடு செய்தார். இதற்கு முன்னதாக மன்னரின் கனவில் ஆஞ்சநேயர் தோன்றி, உன்னைத் தேடி ராமச்சந்தரமூர்த்தி வருவார் என்று சொன்னார். இதனால், நெகிழந்த சரபோஜி மன்னன் ஸ்ரீசத்குரு ஸ்வாமிகளைக் கண்டவுடன் அவரின் பாதங்களில் விழுந்து ஆசி பெற்று வேண்டியதை செய்து தந்தான். தற்சமயம் கோவிந்தபுரத்தில் போதேந்திர ஸ்வாமிகள் அதிஷ்டானமாக விளங்குவது அந்த இடம் தான்.

ஸ்ரீசத்குரு ஸ்வாமிகள் பல அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார். ஒருநாள் ஸ்வாமிகள் பாகவதர்களுடன் நாம சங்கீர்த்தனம் பாடியபடி வரும் போது பாலகலோசன் என்பவன், அனைவரையும் அவமதிக்கும் விதமாக கால்நீட்டி உட்கார்ந்திருந்தான். அதைக் கண்ட ஸ்வாமிகள் பாகவதர்களை அவமதிப்பது பாவம்! காலை மடக்கிக் கொள் என்று சொல்ல, அவனோ சிறிதும் மதிக்காமல் நீ ங்களும் என்னைப் போல் மனிதர்கள் தானே என்று சொல்லி அலட்சியபடுத்தினான். அன்று முதல் அவனுக்கு கடுமையான வயிற்று வலி உண்டானது. பின் மருதாநல்லூர் ஸ்வாமியை தேடிச் சென்று தன்னை மன்னிக்கும் வேண்ட, அவரோ நீ எனக்கு அபச்சாரம் செய்திருந்தால் கூட மன்னித்திருப்பேன், ஆனால் நீயோ பாகவத அபச்சாரம் செய்து விட்டாய். உன்னை மன்னிக்கும் சக்தி எனக்கில்லை என்று மறுத்துவிட்டார்.

இருந்தாலும், கருணை உள்ளம் கொண்ட ஸ்வாமிகள், இதற்குரிய பரிகாரமாக பாகவதர்களின் பாத தீர்த்தத்தை அருந்தினால் நோயிலிருந்து மீளலாம் என்று கூறினார். அதன்படி செய்து அவரும் நோயிலிருந்து மீண்டார். வயிற்றிவலி நீங்கிய பாலகலோசன் அவரது சீடரானார். அந்த சீடர் எழுதிய ''அதடே பரபிரும்மம்'' என்ற பாடல் குரு வணக்கமாக பாடப்படுகிறது. மருதாநல்லூர் மடத்தில் ஒருநாள் ஸ்ரீசத்குரு ஸ்வாமி தியானத்தில் இருந்தார். அச்சமயத்தில் சீடர் ஒருவர் அங்கு வந்த போது, ஸ்ரீராமனும், சீதையும் அமர்ந்திருந்ததைக் கண்டார். கணப்பொழுதில் ஸ்வாமிகளுடன் இருவரும் ஐக்கியமாகி விட்டார்கள். இதை அவன் வேறொருவனுக்குச் சொல்ல அவனுக்கு இக்காட்சியை காண ஆசை உண்டாக, இரவு ஸ்ரீச த்குரு ஸ்வாமிகள் உறங்கி கொண்டிருந்தபோது ஜன்னல் வழியாக எட்டிப்பார்க்க அங்கு கட்டில் மீது ராமனும், சீதையும் ஏகாந்தமாக அமர்ந்திருப்பதைக் கண்டான். அப்போது ஏற்பட்ட பேரொளியால் அவன் பார்வை பறி போனது. பின் தவற்றை உணர்ந்து ஸ்ரீசத்குரு ஸ்வாமிகளிடம் வேண்ட அவர் அருளால் மீண்டும் பார்வை பெற்றான்.

1817ல் ராமநவமிக்கு முதல் நாள், ஆடுதுறை பெருமாள் கோவில் ஜெகத்ரட்சக ஸ்வாமி சந்தியில் இறைவனுடன் ஐக்கியமானர் ஸ்ரீசத்குரு ஸ்வாமிகள்.

மருதாநல்லூர் சத்குரு ஸ்வாமி காட்டிய நல்வழியில் நாமும் தினமும் ராமநாமம் ஜெபித்து வந்த வினை அகற்றி வாழ்வில் உய்வோம்!!

ஸ்ரீராமஜெயம்!!



# விழாக்களும் விரதங்களும்

-செல்வம்

**மார்கழி மாதம் பிறப்பு** - 16-12-2025:

“மாதங்களில் நான் மார்கழி” என்பது ஸ்ரீ கிருஷ்ண பகவான் வாக்கு, இந்த மாதம் முழுவதும் இறைவனின் நினைவோடு, பக்தியுடன் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலும் தெய்வ அருளால் வெற்றி பெறும் என்பதை உட்பொருளாகக் கொள்ளலாம். மார்கழி என்பது “பீடுடை மாதம்” என அழைக்கப்படுகிறது. அதாவது, சிறந்தது, பெருமைமிக்கது, மதிப்புமிக்கது என்ற பொருள். மார்கழி மாதம் தேவர்களின் காலைப் பொழுது. ஆகவே இந்த மாதத்தில் அதிகாலையில் எழுந்து இறைவனை நினைத்து நாளைத் தொடங்கும் மரபு உருவானது. “உத்திஷ்ட சிந்திய ஹரிம்” என்ற சொல்லின் பொருள் போலவே, மனிதன் தன் நாளை இறை சிந்தனையோடு தொடங்கினால், அந்த நாள் முழுவதும் பயனுள்ளதாய் அமையும்.



இம்மாதத்தை சங்க இலக்கியங்கள் தவக்காலமாக குறிப்பிடுகிறது. மார்கழி மாதத்தில் நோன்பிருந்து, தை மாதத்தில் கொண்டாட்டத்துடன்முடிப்பது நம் ஆன்மிக மரபும் கூட. வைணவ சமயத்தில், ஆண்டாள் நாச்சியார், மார்கழி நோன்பின் மகத்துவத்தை திருப்பாவை வாயிலாக உலகிற்கு உணர்த்தினார். பாற்கடலில் துயில் கொண்டிருக்கும் அந்த பரமனைப் பாடி , உலக இன்பத்தில் இருந்து விடுபட்டு பரமனையேச் சேர “நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலை நீராடி மையிட்டெழுதோம்; மலரிட்டு நாம் முடியோம்; செய்யாதன செய்யோம்; தீக்குறளைச் சென்றோதோம்” என்று மனத் தூய்மையுடன் உறுதியாக கண்ணனையே நினைத்து விரதம் இருக்க அழைக்கிறார் ஆண்டாள்.

சைவ சமயத்தில் மாணிக்கவாசகர் திருவெம்பாவை மற்றும் திருப்பள்ளி எழுச்சி பாடல்களை தந்துள்ளார். இந்தப் பாடல்கள், வெறும் இலக்கியம் மட்டுமல்ல; பக்தியை வாழ்வியல் நெறியாக மாற்றும் வழிகாட்டிகளாகவும் திகழ்கின்றன. இந்த மார்கழியில், கோதை நாச்சியாரும் மாணிக்கவாசகரும் அருளிய பாடல்களை உணர்ந்து பாடி, பக்தியில் கரைந்து பரமனடி சேர்வோமாக! .

“எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உற்றோமே யாவோம் உமக்கே யாம் ஆட்செய்வோம் மற்றய காமங்கள் மாற்று”என வேண்டி, அவன் பாதங்களை பணிந்து வணங்கி, அருள் பெற்று இன்புறுவோமாக!

**வைகுண்ட ஏகாதசி** - 30-12-2025:

சிவராத்திரியும் வைகுண்ட ஏகாதசியும், இரவு முழுவதும் கண் விழித்து இறை நினைவோடு கழிப்பது என்ற ஒரே ஒழுக்கத்தால் இணைக்கப்பட்ட திருநாள்களாகும். இந்த விழிப்புணர்வு, உடல் சோர்வுக்காக அல்ல; மனத்தை இறைவன்களை நோக்கி ஒருமுகப்படுத்தும் ஆன்மிக சாதனையாகும்.

சாஸ்திரங்களில் ஏகாதசி விரதத்தின் மகத்துவம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

**“ஏகாதச்யாம் து கர்த்தவ்யம் ஸர்வேஷாம் போஜ நத்வயம்**
**சுத்தோபவாஸ:ப்ரதம: ஸத்கதாச்ரவணம் தத:”**

“ஏகாதசி நாளில் அனைத்து உயிர்களும் இரண்டு செயல்களை மட்டுமே மேற்கொள்ள வேண்டும்: ஒன்று, சுத்தமான உபவாசம்; மற்றொன்று, பகலும் இரவும் ஸத்கதா ஸ்ரவணம். அதாவது ஸ்ரீமத் பாகவதம், பகவத் கீதை போன்ற தெய்வீக கதைகளை கேட்டு மனத்தைத் தூய்மைப்படுத்துதல். இதனைத் தவிர, அந்த நாளில் வேறு எந்தச் செயலிலும் ஈடுபடக் கூடாது; அன்னபோஜனமும் செய்யக் கூடாது” என சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன.

அனைத்து விரதங்களிலும் ஏகாதசி விரதமே நித்ய விரதமாகவும், உயர்ந்த விரதமாகவும் கருதப்படுகிறது. இந்த விரதத்தை முறையாக அனுஷ்டிப்பவர்களுக்கு



மோக்ஷம், கையில் வைத்துள்ள நெல்லிக்கனி போல எளிதாகக் கிடைக்கும் என நூல்கள் கூறுகின்றன.

**ஏகைவ தஸா அவஸ்தா யஸ்யாம் திதௌ வ்ரதாநுஷ்டாநதத்பராணாம் நரணாம் ஏகாதசீ**

பிறப்பு-இறப்பு என்ற சுழற்சியிலிருந்து விடுதலை அளிக்கும் ஒரே நிலையான முக்தியை வழங்கும் திதியாகவே "ஏகாதசி" அமைந்துள்ளது.

இந்த ஏகாதசிகளுள், வைகுண்ட ஏகாதசி தனிச்சிறப்பு பெற்றதாகும். ஆண்டு முழுவதும் வரும் பிற ஏகாதசிகளில் விரதம் அனுஷ்டிக்க இயலாமல் போனவர்கள் கூட, வைகுண்ட ஏகாதசியன்று உபவாசம் மற்றும் பக்தியுடன் இறைவனை வழிபட்டால், மற்ற எல்லா ஏகாதசிகளையும் அனுஷ்டித்த புண்ணியத்திற்குச் சமமான பலன் கிடைக்கும் என நம்பப்படுகிறது. அத்தகைய பக்தர்களுக்கு வைகுண்டத்தில் நித்திய சூரிகளின் நிலையை அளிக்க பகவான் அருள் புரிவதாக வைணவ மரபு கூறுகிறது.

தனுர் மாதத்தில், சூரியன் தனுர் ராசியில் இருக்கும் போது, சுக்ல பக்ஷத்தில் வரும் இந்த ஏகாதசி நாளில், மகாவிஷ்ணு ஆதிசேஷனின் மீது கொண்ட யோகநித்திரையிலிருந்து விழித்தெழுந்து, யார் யார் விரதத்தை அனுஷ்டித்துள்ளனர், யாருக்கு மோக்ஷம் வழங்கப்பட வேண்டும் என்பதைக் கவனிக்கும் திருநாளாக வைகுண்ட ஏகாதசி போற்றப்படுகிறது.

அதனால், இந்த புனித நாளில் உபவாசம், இரவு கண் விழிப்பு, ஸத்கதா ஸ்ரவணம் மற்றும் இறை நினைவு ஆகியவற்றுடன் வைகுண்ட வாசலைக் கடக்கத் தகுதியான பக்தர்களாக மாறி, மகாவிஷ்ணுவின் அருளைப் பெற முயல்வதே வைகுண்ட ஏகாதசியின் உண்மையான சாரமாகும்.

**ஆஞ்சநேயர் ஜெயந்தி** - 19-12-2025:

அடக்கம், சக்தி, ஞானம் ஆஞ்சநேயர் இன்று நமக்கு சொல்லும் பாடம் "ராம், ராம்" என எங்கு நாமம் ஒலித்தாலும், ரகுநாத கீர்த்தனம் எங்கு பாடப்பட்டாலும், அங்கெல்லாம் நம் கண்களுக்கு புலப்படாமல் ஆஞ்சநேயர் ஆனந்தக் கண்ணீரோடு அதை ரசித்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. அந்த அமைதியான இருப்பே, பக்தியின் ஆழத்தை நமக்கு நினைவூட்டுகிறது.

ஆஞ்சநேயர் பக்தர்களுக்கு, அவரை நினைத்தாலே அவர் அளிக்கும் அருள்களை ஒரு ஸ்லோகம் தெளிவாகப் பட்டியலிடுகிறது:

**புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்வம்**
**அரோகதா அஜாட்யம் வாக்படுத்வம் ச ஹநுமத்**
**ஸ்மரணாத்பவேத்**

புத்தி, பலம், புகழ், தைரியம், அஞ்சாத மனம், ஆரோக்கியம், விழிப்பு, வாக்குத் திறன்.

சாதாரணமாக இவை எல்லாம் ஒரு மனிதனிடம் ஒருசேர அமையாது. அறிவாளி உடல் நலமின்றி இருப்பான்; பலசாலி தைரியமின்றி இருக்கலாம்;




திறமை உள்ளவன் அதை வெளிப்படுத்தத் தெரியாமல் போகலாம். ஆனால் இந்த முரண்பாடுகள் எதுவும் இல்லாமல், அனைத்தையும் ஒருங்கே தருபவர் ஆஞ்சநேயர்.

அதற்குக் காரணம், நாம் எதிர்மறை என்று நினைக்கும் குணங்களே அவரிடம் இயல்பாக இணைந்திருப்பது. அளவற்ற சக்தி இருந்தும், அதை "ராமன் தந்த பிச்சை" என்ற மனநிலையோடு ஏற்றுக்கொண்டவர் அவர். எந்த பதவியும், எந்த பெருமையும் வேண்டாம்- ராமதாசனாக இருப்பதே அவருக்குப் போதும்.

அந்த அடக்கமே அவரது முழுமை. பலருக்கு பக்தி இருக்கும்; சிலருக்கு ஞானம் இருக்கும். ஆனால் இரண்டும் ஒன்றாக இணைவது அரிது.

ஆஞ்சநேயரை மனமார வேண்டுபவர்களுக்கு குறை இல்லை என்பது வெறும் நம்பிக்கை அல்ல; வரலாறு சொல்லும் உண்மை. ராமராஜ்யம் உருவானதிலும், மகாபாரதத்தின் இறுதியில், தர்மம் நிலைபெற்றதிலும், பின்னாளில் சிவாஜியின் காலத்தில் தர்மம் மீண்டும் எழுந்ததிலும்-இந்த மூன்று காலகட்டங்களிலும் ஆஞ்சநேயரின் சக்தி மறைமுகமாகச் செயல்பட்டிருக்கிறது. தர்மம் தளரும்போது, அதைத் தாங்கி நிறுத்தும் சக்தியாக அவர் தோன்றுகிறார்.

இன்றும், தமிழகத்திலும் தர்மமும் பக்தியும் வேரூன்ற அவரது அநுக்கிரகம் அவசியம். மனமுருகி வேண்டினால், அந்த அருளை அவர் உறுதியாக வழங்குவார்.



# கொன்றை வேந்தன் கதைகள்

## உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு!

கலாவதி

**ஆரோக்கிய உணவே நலம்**

பள்ளிக்கூடத்தை விட்டு வந்ததுமே, “அம்மா பசிக்குது” என்று குரல் கொடுத்து வந்தபடியே தாரணியும் சதீஷும் வீட்டுக்குள் நுழைந்தார்கள். “ரெண்டு பேரும் கை கால் கழுவிட்டு வாங்க. சாப்பிட தயாரா இருக்கு” என்று தோட்டத்துக்குள் விரட்டினாள் அம்மா.

இருவரும் சாப்பிட உட்கார்ந்ததுமே, தயாராக வைத்திருந்த ராகி அடையை தட்டில் வைக்க, “ஐ, எனக்கு பிடிச்ச மலாட்ட சட்னி” என்று சதீஷ் குதூகலித்தான். “கொஞ்சம் பொறு கண்ணா” என்ற அம்மா, மதியம் சமைத்த வெண்டைக்காய் கறியை அள்ளி வைத்தாள். “என்னம்மா இது....மலாட்ட சட்னியை வைக்கவே மாட்டேங்கறீங்க” என்று இருவரும் சிணுங்க, அதுவும் தரேன். முதல்ல இதை மிச்சம் வைக்காம சாப்பிடுங்க” என்று அம்மா கண்டிப்பாக சொல்லி விட்டாள்.

“என்னம்மா நீ, என்னோட தோழிகள் வீட்டுல தினமும் வகை வகையா சமைச்சி தராங்க. நூடுல்ஸ், நொறுக்கு தீனின்னு வாரம் தவறாம சாப்பிடறாங்களாம். ஆனா நீங்களோ நூடுல்ஸ் எல்லாம் கண்ணுலயே காமிக்கறதில்ல. அப்படியே பண்ணாலும், அதுலயும் இப்படி காய்கறிய அள்ளி வைக்கறீங்க” என்று சதீஷ் அடம் பிடிக்க, “இன்னொன்னு கவனிச்சியாடா, நமக்கெல்லாம் இவ்ளோ அள்ளி வைக்கற அம்மா, அவங்க சாப்பிடும்போது சாதம் காய்கறிய குறைச்சலாதான் போட்டுக்கறாங்க. அவங்க பண்றது அவங்களுக்கே பிடிக்கல போல” என்று தாரணி அம்மாவையே கிண்டல் செய்தாள்.

“அடி கழுத, ஒழுங்கா சாப்பிடுங்க” என்று செல்லமாக அடித்தாள் அம்மா.

ஊரிலிருந்து மாமா போன் செய்தார். பெரியம்மாவுக்கு பிபி வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்துருக்காங்களாம். விவரம் கேட்டு, மாலையில் அப்பா வீட்டுக்கு வந்ததுமே போய் பார்த்தார்கள்.

பெரியம்மா அம்மாவை விட 2 வயதுதான் பெரியவர். ஆனால், குண்டாக இருப்பார். தவிர எப்போதும் எதையாவது சாப்பிட்டுக் கொண்டே இருப்பார்.

“எப்பவும் சாப்பிட்டுண்டே இருந்தியே, எத்தனை வாட்டி சொன்னேன் கேட்டியா? இப்போ பாரு” என்று பெரியப்பா பெரியம்மாவிடம் கடிந்து கொண்டிருந்தார். இவர்கள் போன நேரத்தில் டாக்டரும் வந்திருந்தார். ”உங்க உணவுல ஆரோக்கியமா எதுவுமில்ல. அதனால நல்ல ஆரோக்கியமான பழங்கள், சிறு தானியங்கள் சாப்பிடணும். எவ்வளவு தேவையோ அவ்வளவு சாப்பிடுங்க. சாப்பிடாம இருக்கவும் கூடாது. பார்த்து சாப்பிட்டா பிரச்சினை வராது” என்று டாக்டர் தெம்பூட்டினார்.

வெளியே வந்ததும், “பெரியம்மாவுக்கு வந்த மாதிரி உங்களுக்கு வராதாம்மா” என்று சதீஷ் ஆரம்பிக்க, “உங்க அம்மாவுக்கு மட்டுமில்ல, எனக்கும் உங்களுக்கும் கூட வராது. சிறு தானியங்கள், பழங்கள்னு ஆரோக்கியமா சாப்பிடறோம். அது மட்டும் உங்கம்மா வாய் ருசிக்காக கண்டதையும் இஷ்டத்துக்கு சாப்பிடாம தேவைக்கு சாப்பிடுபவள், அதற்கு தகுந்த உடல் உழைப்பையும் செய்பவள், அதனால் தொந்தி வந்து ஆரோக்கிய பிரச்சினை வரவே வராது” என்று அப்பா சொன்னார்.

“ஆமாம். அதெல்லாம் நம்ம அம்மாவுக்கு வராது. ஏன்னா, சாப்பிடறதும் ஆரோக்கியமா மட்டும்தான் சாப்பிடறாங்க” என்று அம்மாவுக்கு பரிந்து பேசியதோடு இனிமே நாம கூட அம்மாகிட்ட நொறுக்குத் தீனி கேட்டு சண்டை போடாமல் சத்தான அம்மா தர உணவை விரும்பி சாப்பிட பழகனும் அப்ப தான் நாமளும் ஆரோக்கியமா சரிவிகத வளர்ச்சியில் வளர்வதோடு மட்டுமில்லாமல் ஆரோக்கியமாக இருப்போம் சரியா சதீஷ் என்றாள் தாரிணி.

சதீஷும் நிச்சயமாக தாரிணி நானும் இனி சிணுங்காம எல்லா காய்கறிகளையும் சாப்பிடுவேன்!



# நல்ல தொண்டில் நல்ல உள்ளம்

## கணபதியும் கண்ணனும் – இரு பெரும் விழா

**கல்விப் பணி**

வேத விஞ்ஞான ஆராய்ச்சி மையம், அனன்யா பவுண்டேஷன் மற்றும் சிருங்கேரி மடம் தி நகர் இணைந்து சென்னையில் இலவச மாலை நேர வகுப்புகளை நடத்தி வருகிறது. இந்த வகுப்புகளில் வாரத்தில் 5 நாட்கள் பள்ளிக் கல்வியும், வாரம் ஒரு நாள் பண்பாட்டுக் கல்வியும் சொல்லித் தரப்படுகிறது. சென்னையில் 20 இடங்களில் தினசரி நடைபெறும் இந்த மாலை நேர வகுப்புகளில் சுமார் 350 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்று வருகிறார்கள்.

**பண்பாட்டுக் கல்வி**

ஒவ்வொரு டியூசன் மையத்திலும் வாரம் ஒரு நாள் பண்பாட்டுக் கல்வி நடைபெறுகிறது. இந்த வகுப்புகளில் சமய வகுப்பு, புராணக் கதைகள், தேசபக்தர்களின் வரலாறு, இராமாயணம், மகாபாரதம், ஸ்லோகங்கள், பஜனைப் பாடல்கள், தேவாரம், திருப்புகழ், வினா விடை, விநாயகர் அகவல், பகவத் கீதை, மற்றும் கீதை ஸ்லோகங்களின் பொருள் ஆகியன கற்றுத் தரப்படுகின்றன.

தொடக்க நிலை, இள நிலை, இடை நிலை, உயர் நிலை என்ற 4 நிலைகளில் பகவத் கீதை சொல்லித் தரப்படுகிறது. ஒவ்வொரு நிலை மாணவர்களுக்கும் வெவ்வேறு கீதை சுலோகங்கள் சொல்லித் தரப்படுகின்றன.

வெள்ளிமலை ஹிந்து தர்ம வித்யா பீடத்தில் தேர்ச்சி பெற்ற திரு ரமேஷ், திருமதி மீனாட்சி ஆகியோர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு டியூசன் மையத்திற்கும் சென்று இந்த சமய வகுப்புகளை திறம்பட நடத்தி வருகின்றனர். வெள்ளிமலை ஹிந்து தர்ம வித்யா பீடத்தின் வாராந்திர சமய வகுப்புகளின் பாடத்திட்டத்தின் அடிப்படையில் இந்த பண்பாட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

**கீதை ஒப்புவிக்கும் போட்டி**

7-12-2025 ஞாயிறு அன்று மாலை நேர வகுப்பில் படிக்கும் மாணவ மாணவியர்க்கான கீதை ஒப்புவிக்கும் போட்டி சென்னை பர்மா காலனி ஆத்துக்கோவில் அங்காள ஈஸ்வரி ஸ்ரீமுனீஸ்வரர் ஆலயத்தின் ஸ்ரீமுருகர் ஸ்ரீதெய்வானை திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த போட்டியில் 16 டியூஷன் மையங்களில் இருந்து 104 குழந்தைகள் தொடக்க நிலை, இள நிலை, இடை நிலை, உயர் நிலை ஆகிய 4 நிலைகளிலும் கலந்து கொண்டு கீதை ஸ்லோகங்களை மனப்பாடமாகப் பாடி பொருளையும் கூறினர். ஒவ்வொரு நிலை மாணவர்களுக்கும் தனித்தனியே போட்டிகள் நடைபெற்றன. சம்ஸ்கிருத பாரதியில் இருந்து, திரு.ராமச்சந்திரன் ஜி அவர்கள் தலைமையில் 10 பேர் நடுவர்களாக கலந்து கொண்டு மாணவர்களைத் தேர்வு செய்தனர். 4 வயதே ஆன குழந்தைகள் தீபிகா (கன்னியம்மாள் கோவில்), ஹேமவர்ஷினி (விருகம்பாக்கம்) ஆகியோர் மழலை மொழியில் கீதை ஸ்லோகங்களை அனைவர் முன்னிலையிலும் தங்கு தடையின்றி ஒலி பெருக்கியில் கணீர் என முழங்கியது நிகழ்ச்சியின் சிறப்பு.

இந்த நிகழ்வில் ஸ்வாமி மோக்ஷ வித்யானந்தா அவர்கள் கலந்து கொண்டு கீதையின் சிறப்பினை விளக்கி அருளாசி வழங்கினார்கள்.

**விநாயகர் அகவல்**

ஏற்கனவே இரு மாதங்களுக்கு முன்பு நடந்த விநாயகர் அகவல் ஒப்புவித்தல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ கண்மணிகளுக்கு இந்த நிகழ்ச்சியின் இறுதியில் பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் விநாயகர் அகவலின் 72 வரிகளையும் மனப்பாடமாக சேர்ந்து பாடி அசத்தினார்கள் மாணவச் செல்வங்கள்.

ஸம்ஸ்க்ருதம் படித்திராத, படிக்க வாய்ப்பு இல்லாத அரசுப்பள்ளி மாணவர்கள் இந்த அளவு நேர்த்தியாக பகவத் கீதை பாடக் காரணமாக இருந்தது ஒருங்கிணைப்பாளர்கள் திரு ரமேஷ், திருமதி மீனாட்சி ஆகியோரின் அர்ப்பணிப்பு மற்றும் டியூஷன் மைய ஆசிரியர்களின் முனைப்பு அத்துடன் பள்ளிக் கல்வியுடன் ஹிந்து சமயக் கல்வியையும் கற்கும் இளைய தலைமுறையின் ஆர்வம் ஆகியவற்றின் ஒட்டுமொத்த வெளிப்பாடு.




# சினிமா சாரல்

- சேஷு

## துரந்தர் : இந்திய உளவுத்துறையின் சாகசம்

படத்தின் ட்ரைலரை வைத்தே குய்யோ முறையோ என கதறி கூச்சலிட்ட திரைப்படம் துரந்தர். இந்திய உளவாளி பாகிஸ்தான் மண்ணில் புரியும் சாகசம் தான் படத்தின் ஒன்லைன்.

ஆதித்யா தரின் தயாரிப்பு, திரைக்கதை, இயக்கத்தில் வெளிவந்துள்ள படம் என்பதால் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. இன்றைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கேரக்டரில் ரா.மாதவன் நடிக்க,பாலிவுட்டின் மிக முக்கிய நடிகர்களான ரன்வீர் சிங், சஞ்சய் தத், அக்ஷய் கண்ணா, அர்ஜூன் ராம் பால், சாரா அர்ஜூன் என ஒரு பட்டாளமே படத்தில் நடித்திருப்பது படத்திற்கு பலம். இதற்கு முன் ''கான்கள்'' நடித்த ஸ்பை த்ரில்லர் படங்கள் வந்திருந்தாலும், எதார்த்தத்திற்கும் உண்மைக்கும் அது கொஞ்சமும் சம்மந்தமில்லாமல் இருக்கும். பாகிஸ்தான் ISI பெண் பிக்னி உளவாளியுடன் ரா ஏஜெண்ட் குத்தாட்டம் போடுவது போன்ற காட்சிகள் தான் இருக்கும்.




படத்தின் கதையைச் சொல்லி வாசகர்களின் சுவாரஸ்யத்தை கெடுக்க விரும்பவில்லை. அதேநேரத்தில் இந்தப் படத்திற்கு பலதரப்பிலும் பொய்யான கட்டமைக்கப்படும் விமர்சனங்கள், திட்டமிட்டு படம் குறித்த எதிர்மறை விமர்சனங்கள் என பேச, எழுதும் ரிவியூவர்களின் நோக்கத்தை சொல்வது முக்கியம் என கருத வேண்டியுள்ளது. தி வயர் உள்ளிட்ட ஆன் லைன் பத்திரிகைகள் வன்மத்துடன் எழுதும் நெகடிவ் விமர்சனங்களை உடைக்க வேண்டியது அவசியம். தி காஷ்மீர் ஃபைல்ஸ். தி கேரளா ஸ்டோரி, ச்சாவா போன்ற படங்கள் மீது காழ்ப்புணர்வுடன் விமர்சிக்கத் தொடங்கியதிலிருந்து இந்திய சினிமாவின் போக்கு பற்றி பலரும் தைரியமாக கண்டிக்கவும் எழுதவும் ஆரம்பித்தனர்.

ரிலீசுக்கு முன்பே எதிர்மறை விமர்சனங்கள் வந்தவுடன் இயக்குநர் ஆதித்யா தரின் மனைவியும் நடிகையுமான யாமினி கௌதம், பாலிவுட்டில் குறிப்பிட்ட சில படங்களுக்கு எதிராக அமைப்புரீதியாக விமர்சனம் என்ற போர்வையில் தாக்குதல் நடத்தி படத்தை வணிகரீதியாக முடக்க நினைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை வைத்தார். இதற்கு ரித்திக் ரோஷனும் ஆதரவு தெரிவித்திருந்தார்.மாதவனும் இப்படி குறுகிய நோக்கத்துடன் விமர்சிப்பதைக் கண்டித்தார்.

துரந்தர் படத்திற்கு இவ்வளவு எதிர்ப்பு ஏன் என்று யோசித்தால், மும்பை 26/11 தாக்குதலில் கராச்சியின் பயங்கரவாத ரவுடிக்கும்பலும், ISI யும் இணைந்து எப்படி செயல்பட்டன என்பதையும், தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளோடு ISI பேசிய ஒலிப்பதிவையும் காட்டி பாகிஸ்தான் நடத்தும் ஜிகாத் தாக்குதலின் பின்னணியை வெளிச்சம் போட்டு காட்டி இருப்பதால்,தேசவிரோத ஊடக விமர்சகர்களுக்கு பொத்துக் கொண்டு கோவம் வந்து விட்டதே காரணம் என்கின்றனர்.

Uri - The Surgical Strike படம் மூலம் நம் பாதுகாப்புப்படையினரின் துல்லியத் தாக்குதலை உலகுக்கு காட்டிய ஆதித்யா தர், Dhurandhar மூலம் நம் உளவுத்துறையின் திறனைக் காட்டியிருக்கிறார்.

தி வயர் பத்திரிகை இந்தப் படம் இஸ்லாத்துக்கு எதிரான பொதுப்புத்தியில் மக்கள் மனஓட்டத்தை நிலைநிறுத்த, அதிதீவிர தேசியத்தை பிரச்சாரம் செய்யும் படம் என்றதோடு, இயக்குநர் ஆதித்யா தர் சினிமா திரைக்கதை என்பதைத் தாண்டி அல்ட்ரா நேஷனலிஸத்திற்கு ஆள் எடுக்கிறார் என விமர்சிப்பதே இப்படத்தின் சக்ஸஸ்.

தேசவிரோதிகள் பார்த்து கதறும் படத்தை நாம் பார்க்க வேண்டாமா?

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.